கோவூர் கூடவன்



விக்கிரமன்

கோவூர் கூனன்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

கலைமாமணி

டாக்டர் விக்கிரமன்

கவிதா பப்ளிகேஷன்

தபால் பெட்டி எண்.: 6123

8, முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார்

தி. நகர், சென்னை-600 017.

போன் : 8270980

நூல் விவரப் பட்டியல்

நூல்பெயர்	:	கோழூர் கூனன்
ஆசிரியர்	:	விக்கிரமன்
முதற்பதிப்பு	:	டிசம்பர், 1982
இரண்டாம் பதிப்பு	:	டிசம்பர் 1994
மொழி	:	தமிழ்
பொருள்	:	சரித்திர நாவல்
உரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பு	:	கவிதா பப்ளிகேஷன் 8, முத்து கிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை-17.
நூலின் அளவு	:	கிரவுன் 1 × 8
தாள்	:	10·7 Kg. வெள்ளைத்தாள்
எழுத்து	:	10 pt.
பைண்டிங்	:	கார்டு போர்டு
பக்கங்கள்	:	176

விலை: ரூ. 27 - 00

அச்சிட்டோர்	:	ஸ்ரீ கோமதி அச்சகம் சென்னை-5.

முன்னுரை

மனிதனை மதிக்க வைப்பது அவனது குண நலன்களே. உடல் ஊனமாயிருக்கலாம்; மனம் ஊனம் இல்லாதிருந்தால் அவன் மாமனிதன். இன்றைய சமூக வாழ்க்கையில் பல உடல் ஊனமுற்றவர்களைக் காண்கிறோம்; ஆனால் அவர்கள் உள்ளமோ இமயம்போல் உயர்ந்திருக்கிறது.

வரலாற்றுக் காலத்திலும் இப்படிப்பட்டவர்கள் இருந்திருப்பார்கள். — ஒரு கற்பனை செய்து கொண்டேன். ஒரு கூனன். ஒரு நாட்டிய மகள், சிறைக் கூடத் தலைவர் - இவ்வளவு பேரையும் பல்லவர்கள் காலத்துக் கதைப் பாத்திரங்களாகக் கொண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கொண்டு நிறுத்தினேன்.

ஆண்டுகள் மாறினாலும் பண்பு, நாகரிகம் குண நலன்கள் மாறாதல்லவா?

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரே மூச்சில் எழுதிய சிறு நாவல் — தமிழ் நாட்டிற்கு அறிமுகமாகும் 'வேளை' இப்பொழுதுதான் ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் புதினத்தை வெளியிட முன் வந்த **கவிதா பப்ளிகேஷன்** உரிமையாளர்க்கு என் நன்றி. எப்பொழுதும் ஆதரிக்கும் தமிழ் பெருமக்களுக்கு வணக்கங்கள்.

விக்கிரமன்

சென்னை-33

பதிப்புரை

தனக்கென ஒரு தனிப்பாதையை எழுத்தால் உருவாக்கிக் கொண்டவர் திரு. விக்கிரமன் அவர்கள். இவருடைய சரித்திர நவீனங்களைப் படிக்கும்போது - இவர் நம்மை சரித்திர காலத்திற்கே அழைத்துச் சென்று விடுவார்.

'கல்கி' அவர்கட்குப் பின்னர் சரித்திர நவீனங் களைப் படைப்பதில் பேராற்றலைப்பெற்ற இவர் **'கோவூர் கூனன்'** என்ற நாவலை சரித்திர பின் னணியுடன் மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார்.

எழுத்தில் தனி வல்லமையையும் - கற்பனை வளத்தையும் அழியாக் கற்சிலைபோல இந்நூலில் விக்கிரமன் வடித்தருளியிருக்கிறார்.

இந் நாவல் கவிதா பப்ளிகேஷன் சார்பாக வெளி வருவதில் பெருமை அடைகிறேன்.

வாசகப் பெருமக்கள் வழக்கம்போல் வாங்கி இந்நூலை ஆதரிக்க வேண்டுகிறேன்.

சேது சொக்கலிங்கம்

கவிதா பப்ளிகேஷன்

சென்னை-17

கோவூர் கூனன்

1

கோவூர் இறைவன் கோயிலில் மணி ஓசை எழுந்து சந்தியாகால பூஜையை அறிவித்துக் கொண்டிருந்தது. சிறைச்சாலையின் வெளிவாயில் கதவு இழுத்து மூடப்பட்டுத் தாளிடப்படும் ஓசை கேட்டது. சிறைச்சாலையின் உள்ளே தனிக்கொட்டடி ஒவ்வொன்றாக உள்ளே நுழைந்து காவலர்கள், கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு நடந்துவரும் காலடி கேட்டது அப்படிப் பூட்டும்போதே ஒரு சட்டியில் இரவு உணவுக்காக கூழையும் ஊற்றிவிட்டுச் சென்று கொண்டிருந்தார்கள்.

கதவு மூடும் ஓசையும், கூழ் அண்டாவை நகர்த்தி வரும் 'கிரிச்' சப்தமும் கேட்டால்தான் மாலை மங்கி இரவு வந்து விட்டதென்று தெரிந்து கொள்ள வேண்டாம். சிறைச்சாலை அறைகளின் மேலே. உயரே உள்ள சிறு சாளரத்தின் வழியே மேற்குத் திசையில் மறையும் கதிரவனின் ஓய்ந்து களைத்துப்போன ரேகைகள் தவழ ஆரம்பித்தவுடனேயே பொழுது சாய இன்னும் இரண்டு நாழிகைதான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கூனன் — அந்த அறையில் நீண்ட காலமாக வசித்துக் கொண்டிருக்கும் அந்தக் கூனனுக்கு மாலை வெய்யிலின் சாயல்தான் கணக்கு. பிறகு இறைவன் கோயில் மணி ஓசை; சிறைச்சாலை அறைக் கதவுகள் பூட்டப்படும் ஓசை

அண்டாக்கள் நகர்த்தப்படும் ஓசை. அவன் புரிந்து கொண்டு விடுவான், ஒருநாள் கழிந்தது என்று.

கூனன் - அவன் பெயர் அவனுக்கே தெரியாது. மற்ற வர்களும் அவனைப் பெயர் சொல்லி அழைத்தது இல்லை. அனைவருக்கும் அவன் 'கூனன்'தான். குள்ளன், கூனன், குறுங்கழுத்தன் என்ற வேடிக்கைச் சொற்களால் அழைப் பார்கள். அவ்வாறு அவன் அழைக்கப்படுவதால் அவ னுக்குக் கோபம் வந்ததில்லை. பழி தீர்க்கும் குரூர எண் ணத்தை உள்ளத்தில் கொண்டதுமில்லை. அவன் எங்கே பிறந்தான், எங்கே வாழ்ந்தான் என்று ஒருவருக்கும் தெரியாது. அவன் பிறவிக் கூனன், கடவுள் தன் படைப் பில் அழகிய தடாகத்தையும், அதில் குமுத மலர்களை யும், துள்ளும் மீன்களையும் படைக்கிறார். செங்குத்தான கரடு முரடான ஒன்றுமே முளைக்காத மொட்டைப் பாறைகளையும் படைக்கிறார்.

கம்பீரமான ஆண்களையும், எழில் தவழும் பெண் களையும் படைக்கிறார், அவர்தான் கூனனையும் படைத் திருக்கிறார். ஆண்டவன் இப்படியொரு அழகற்ற ஆத்மாவைப் படைத்ததால், அவனுக்குத்தான் அவ மானமே தவிர கூனனுக்கு எவ்வித அவமானமோ, வெட்கமோ கிடையாது.

சிறு வயதில் விபரம் தெரிந்தது முதல் அவன் எந்த விதப் பிழையும் செய்தது கிடையாது. காஞ்சிமா நகரத் தில் இருந்திருக்கிறான். மாமல்லபுரத்தில் வாழ்ந்திருக் கிறான். ஓரிடத்திலாவது அவன் தீயவன், கொடியவன் என்ற பெயரைப் பெற்றது கிடையாது. ஆனால், செய் யாத குற்றமொன்று அவன் மீது சுமத்தப்பட்டது.

காஞ்சி நகரத்தில் வீடு புகுந்து திருட முயன்றதாகவும் கொலை செய்ய முயன்றதாகவும் அவன்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. அவனுக்கு எதிராகப் பல சாட்சியங் கள். ஆனால் அவனோ வாயே திறக்கவில்லை,

ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை அவனுக்கு. விதித்துவிட்டார்கள். அவனுக்காக அநுதாபப்படுபவர் யாருமில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட சிறைத் தண்டனையைக் கூனன் மௌனமாக ஏற்றுக் கொண்டான். ஏனென்றால் அவனுக்கு அப்போது தேவையான ஓய்வு.

கோவூர்ச் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு சிறிது நாட்கள் அமைதியாக இருந்தான். பிறகு அவனுக்கு தனிமை அலுத்தது. கட்டுப்பாடு எரிச்சலையூட்டியது. சிறையில் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய கடினத் தொழில்கள் அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தின.

இரண்டு மூன்று ஆண்டுகளை அவன் மெல்லக் கழித்தான். அதுவரை அவன் சிறைக் காவலர்களுடன் ஒரு வார்த்தைகூடப் பேசியது கிடையாது. கொடுத்த வேலையைச் செய்வான். அவனது தோள் வலிமையைக் கண்ட சிறை அதிகாரிகள் மிகக் கடுமையான வேலைகளைக் கொடுக்க ஆரம்பித்தனர்.

மரம் வெட்டுவது, பாறைகளை உடைப்பது, கிணறு வெட்டுவது என்று அவன் மிக எளிதில் முடித்தான். அவன் தலைமயிர் அடர்ந்து வளர்ந்தது. தாடியும் மீசையும் முனிவருடையவை போல் சடைபிடித்துத் தொங்கின. உடலெங்கும் உரோமம் வளர்ந்து காட்சியளித்த அவனது தோற்றம் காண மிகவும் பயங்கரமாயிருந்தது.

'பெரிய கொள்ளைக்காரன், துணிந்து வழிப்பறி செய்ய வல்லவன்' என்றெல்லாம் அவனைப்பற்றிச் சிறையிலுள்ளவர்கள் பேசிக்கொள்வார்கள். இரவிலே சிறையில் தனிக்கொட்டடியில் அவனைத் தள்ளிப் பூட்டும் வரை மற்றவர்களுக்கு அச்சம்தான். பகலெல்லாம் செய்த கடினமான வேலை காரணமாக அவன் அயர்ந்து தூங்கி விடுவான் என்று மற்றவர் எதிர்பார்ப்பார்கள். ஆனால் கூனனுக்குத் தூக்கமே வராது. சிறைக் கம்பிகளைப்

பிடித்துக் கொண்டே நின்று கொண்டிருப்பான். பிறகு உட்கார்ந்து கொள்வான். அப்படியே உறங்கியும் விடுவான். மேலே உயரே உள்ள சாளரத்தின் வழியே நிலவுக் கதிர்கள் சிலநாட்கள் அந்த அறையில் விழும்.

அவன் ஏதோ முணுமுணுப்பான். சிலசமயம் உரத்த குரலில் கூவுவான்; பாடுவான். அவன் என்ன சொல்கிறான் என்று சற்று மறைந்து நின்று சிறைக் காவலர்கள் கேட்பர். அவர்களுக்கு ஒன்றுமே புரியாது.

''அவன் வருத்தத்துடன் ஏதோ சொல்கிறான்?''

''அவன் அழுதுகொண்டே பேசுகிறான்.''

''அவன் யார் பெயரையோ சொல்லி அழைக்கிறான்'' என்று அவர்கள் பேசிக் கொள்வார்கள்.

ஒருநாள் தலைமைக் காவல் வீரன் அவனைக் கேட்டே விட்டான்.

''ஏ கூனா, உனக்கு இரவெல்லாம் தூக்கமே வராதா?'' என்று அன்பு கலந்த குரலில் கேட்டான்.

'ஹி ஹி ஹி' என்று கூனன் சிரித்தான். முன் இரு பற்கள் அவனுக்கு இல்லை. இருக்கும் பற்களும் நன்றாக சுத்தம் செய்யப்படாததால் பாசிப் பிடித்திருந்தது. தலைமயிர் தோள்வரை தொங்கியது. சடையும் விழுந்திருந்தது.

முதுகின் பெரும் மூட்டைபோல் இருந்த வளைவு பளுவும், மூட்டையும் தூக்கியதால் கருமையாக காய்ந்திருந்தது. கூனன் சிரித்துவிட்டுத் தன் வேலையைச் செய்யத் தொடங்கினான்.

காவல் வீரனுக்குச் சுவாரஸ்யமான வம்புப் பேச்சை இழக்க விரும்பவில்லை.

"கூனா, உனக்குக் காது செவிடா?" என்று கேட்டான்.

கூனன் தலையை அசைத்தான். பிறகு நிமிர்ந்து நிற்பது போல் சற்று நின்று மீண்டும் 'ஹிஹிஹி' என்று சிரித்தான்.

காவலன் அருகே நெருங்கி வந்தான். காவலனுக்குப் பயம்தான். தன்னந்தனியாக இருக்கும் தன்மீது பாய்ந்து கீழே தள்ளி, கழுத்தைப் பிடித்து அமுக்கிவிட்டால்...

காவலன் நடுங்கியவாறு சற்றுப்பின் நகர்ந்து "இல்லை......இல்லை...சும்மா தான்கேட்டேன்"என்றான். ஓடி விடலாமா என்று கூடத் தோன்றியது.

கூனன் மீண்டும் ஹிஹிஹி என்று சிரித்தான். கையெடுத்துக் கும்பிட்டான்.

"எனக்குக் காது கேட்கும், பேச வரும்" என்றான்.

அவன் இப்படிக்கூறிய பிறகுதான் காவல் தலைவனுக்கு உயிரே வந்தது.

"பிறகு நான் கேட்பதற்கு ஏன் மறுமொழி கூறவில்லை" என்று சற்று அதட்டலுடன் கேட்டான்.

கூனன் கண்களிலிருந்து நீர் தாரைத் தாரையாய்ப் பெருகிட்டது. கண்ணீருடன் விம்மலும் சேர்ந்தது.

காவல் தலைவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கொடியவன், குரூரன், கொள்ளைக்காரன் என்று பயங்கரமாகப் பேசப்படும் இந்தக் கூனன் ஒரு கோழையா என்று எண்ணினான். இன்னும் இதமான வார்த்தை ஏதாவது கூறினால் மெழுகு போல் கரைந்து விடுவான்; உள்ளதைச் சொல்லி விடுவான் என்று முடிவு செய்தான்.

"கூனா, ஏன் அழுகிறாய். நான் என்ன கேட்டுவிடடேன்?" என்றான்.

"நீங்கள் வாயைத் திறந்து என்னைக் கூனா என்று அழைத்தது ஒன்று .போதுமே ஐயா" என்று கூறிக் கொண்டே கூனன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"கூனா என்று அழைத்தால் கோபப்படுவாய் என்று நினைத்தேன்" என்றான் காவல் தலைவன்.

"ஏன் கோபப்பட வேண்டும். நான் கூனன்தான். என் பெயரும் கூனனே. இருப்பதைச் சொன்னால் கோபம் வராது. இல்லாததைச் சொன்னால்தான் நான் பொல்லாதவன்" என்றான் கூனன்.

"உன்னிடம் இல்லாத பொல்லாததை ஏன் சொல்லப் போகிறேன். நீ தூங்காமல் சிறைக் கம்களைப் பிடித்துக் கொண்டே இருப்பதைப் பார்த்தேன். அதுதான் கேட்டேன்" என்றான்.

"நான் நன்றாக உறங்கி இரண்டு வருடங்கள் ஆகின்றன சாமி" என்றான் கூனன்.

"ஏன் இரண்டு வருடம்? அதற்கு முன்புதான் இரவெல்லாம் கண் விழிப்பாய் உறக்கம் கிடையாது. இப்போது நிம்மதியாகத் தூங்க நான்கு சுவர்களுக்கு நடுவே கற்பாறைத் தரை; ;ஏன் தூக்கம் வரவில்லை..." என்று கூனனின் மனத்திலிருப்பதை வெளியே கொண்டுவர முயன்றான் காவல் தலைவன்.

கூனன் மௌனமாயிருந்தான். பிறகு பெருமூச்சு விட்டவாறு; "ஐயா, எனக்கு இந்தச் சிறைச் சாலையில் என்ன குறைவு. வேளைக்கு உணவு. இருக்க இடம். எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால், என் சகோதரி... ஐயோ அவள் என்ன செய்கிறாளோ... எங்கேயிருக்கிறாளோ..." என்று வேதனைப்பட்டான்.

காவல் தலைவன் ஆவலுடன் அவன் சொல்வதைக் கேட்க விரும்பினான். இவனுக்கு ஒரு சகோதரியா? சிரிப்பு வந்தது அவனுக்கு. கூனனின் சகோதரி எப்படி இருப்பாள்?

ஒரு பெண் குள்ளமாகவும் கூனலுடனும் பயங்கரத் தோற்றத்துடனும் இருந்தால்... அந்த உருவத்தைக் கற்பனை செய்து கொள்ளவே காவல் தலைவனால் முடியவில்லை. கூனனைப்போல் மற்றொரு கோர உருவம். அதைப்பற்றிக் கூனன் கவலைப்படுகிறானே!

அவன் சகோதரியைப் பற்றி விசாரிப்போம் என்று மேலும் அவனிடம் பேச்சுக் கொடுத்தான் காவல் தலைவன்.

2

"ஐயா" என்று பேச்சை ஆரம்பித்த கூனன் சற்றுத் தயங்கினான். காவல்தலைவன் முகத்தை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான்.

கூனனின் மௌனம் காவல்தலைவனுக்குப் புரிந்தது. கூனனின் அழகற்ற உடலமைப்புக்கும், அவனுடைய உள்ளத்திற்கும் சம்பந்தமில்லை என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் இவன் எப்படி வீடு ஏறிப் புகுந்து கொள்ளையிட முயன்றான் என்பதுதான் காவல் தலைவனுக்குப் புரியவில்லை.

'சரி, அதைப்பற்றி நமக்கென்ன கவலை, நாம் இவனுடைய கதையைத் தெரிந்து கொள்வோம்- பொழுது போவதற்காகத்தானே கேட்கிறோம்' என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு, "கூனா, பயப்படாமல் சொல்லு. நான் சிறைக் காவலர்களுக்குத் தலைவன்; நீ தண்டனையடைந்தவன் என்ற வித்தியாசம் பாராட்ட வேண்டாம். உன் மனதுக்குள்ளேயே வைத்துப் புகைந்து கொண்டிருக்கும் வேதனையை என்னிடம் சொல்லித் தேற்றிக் கொள்ளேன்" என்றான்,

கூனன் 'ஹிஹி' என்று சிரித்தான் ''ஐயா. எனக்கு ஒரு சகோதரி இருந்தாள்'' என்று சொல்லத் தொடங்கினான்.

'சகோதரியா—கூனனுக்கு இது போன்றஅவலட்சணத்திற்கும் ஒரு சகோதரியா? அவள் எப்படி இப்பாளோ?' என்று காவல் தலைவன் மீண்டும் நினைத்துப்பார்த்தான்.

''என் சகோதரி மிக அழகி, என்னை அவளுடைய தம்பி என்று யாரும் சத்தியம் செய்தால் கூட நம்ப மாட்டார்கள். ஆனால் தெய்வப் பிறவி அப்படி நேர்ந்து விட்டது.

உத்திரமேரூரில் நாங்கள் வசித்து வந்தோம். நான் எந்த ஊரில் பிறந்தேன்—எனக்குச் சொந்த ஊர் எது என்று எனக்குத் தெரியாது. விவரம் தெரிந்த காலத்திலிருந்து உத்திரமேரூரில்தான் நாங்கள் வசித்து வந்தோம். என் தகப்பானார் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். என் தாய் நன்றாகப் பாடுவாள். வெறும் பாட்டு சோறு போடுமா? ஊர் செல்வந்தர் வீட்டில், செல்வந்தரின் மனைவிக்குத் தோழிபோல் அவளை வைத்துக் காப்பாற்றி வந்தார்கள். ஆனால் என்னை அங்கே சேர்க்கவில்லை. நான் எப்போதாவது வாரம் ஒரு தடவைதான் என் சகோதரியைச் சந்திக்க முடியும். நான் பாறை உடைத்தேன்; கோயில் கட்டுவதற்குக் கற்களைச் சுமந்தேன். கொல்லர் உலைக்களத்தில் சம்மட்டி அடித்தேன். கிணறு வெட்டினேன். மரம் பிளந்தேன்.

சில மாதங்கள் மாமல்லபுரம் சென்று விடுவேன். என் வயிற்றுக்கு உணவிட நான் படாத பாடுபட்டேன். என்னைப் பார்ப்பவர்கள் சிரிப்பார்கள். இழிசொல் சிலர் பேசுவார்கள். சிறு பையன்களுக்குக்கூட நான் ஒரு விளையாட்டுப் பொருள்.

என்னைக் கூனன் என்றழைப்பதில் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி. என் முதுகின் மீதுள்ள முட்டை போன்ற

அவயவத்தின் மீது கல்லை எடுத்து எறிவது அவர்களுக்கு ஒரு விளையாட்டு. நான் கோபிக்க மாட்டேன். சின்னஞ் சிறுவர்களைச் சுமந்து செல்வேன்.

விளையாடும்போது விளையாடுவேன். ஆனால் பசி எடுத்துவிட்டால் மட்டும் நான் ஒருகணங்கூடத் தாமதிக்க மாட்டேன். அப்போது தவறாகப் பேசுபவரை நான் சும்மாவிட மாட்டேன். கேலி பேசுபவர்மீது சீறி விழுவேன். பத்துபேர் சேர்ந்து தாக்கினாலும் நான் எனது மூர்க்கமான பலத்தால் அவர்களை நையப் புடைத்து அனுப்பி விடுவேன்.

கடவுள் எனக்கு அசுரனைப் போன்ற பலத்தை அளித் திருந்தார். அந்தப் பலத்தைக் கொண்டு உபயோகமான காரியம் ஏதும் செய்ய முடியாமல், கல் உடைப்பது, மரந் தூக்குவது, பாறையை நகர்த்த உதவுவது என்று கடின மான வேலைகளைச் செய்து வந்தது எனக்கே பிடிக்க வில்லை. அதனால் என்ன செய்ய முடியும். வயிறு என்று ஒன்று இருக்கிறதே! காஞ்சிபுரம் சென்றால் ஏதாவது வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். நான் காஞ்சி செல்வதென்று முடிவு செய்தேன்.

என் சகோதரியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட எண்ணி அவள் வீட்டிற்குச் சென்றேன். அன்று என் சகோதரி தங்கி யிருந்த வீட்டில் ஏதோ விசேஷம் போலும். நான் ஒருபக்க மாக ஒதுங்கி நின்றேன் என்னைப் பார்த்துவிட்ட அந்த வீட்டுக்கார அம்மாள் சைகை காட்டி என்னை, புறக் கடைப்பக்கம் வரச் சொன்னார்கள். என்னைக் கண் டாலே முகம் சுளிக்கும் அந்த அம்மாள் என்னைப் பரிவுடன் அழைத்தது எனக்கே வியப்பாக இருந்தது.

நான் அச்சத்துடன் வீட்டின் பின்புறம் சென்றேன். வீட்டிற்குள்ளே பெரிய மனிதர்கள் பலர் கூடியிருந்தனர். பெரிய மனிதர்கள் வீட்டுப் பெண்கள் பட்டாடை உடுத்தி, உடலெல்லாம் ஆபரணங்கள் பூண்டு குதூகலமாக இருந் தார்கள்

புறக்கடைக் கதவு வழியாகக் கூடத்தில் நடப்பது தெரிந்தது. என் சகோதரி நடுக்கூடத்தில் நின்றாள். அவள் புத்தாடை உடுத்தியிருந்தாள். தலைவாரி பூச்சூடியிருந் தார்கள்.

என் சகோதரிதானா அவள் என்று ஐயம் ஏற்படும் வகையில் அவள் வளர்ந்திருந்தாள். அவளைக் காணாத இந்த மூன்று மாதங்களில் அவள் நன்றாக வளர்ந்திருந் தாள்.

நான் வந்திருப்பதைக் கண்ட வீட்டுந் தலைவி, ஓர் மண் பாத்திரத்தில் கூட்டாஞ்சோறும், குவளையில் பால் பாயசமும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

''உம், சோறைத் தின்று பாயசத்தைக் குடி'' என் றாள். அதுபோன்ற சுவையுள்ள சோற்றை நான் உண்டு பல வருடங்கள் ஆகிவிட்டன. பால் பாயசம் மணத்தது. ஒரு சொட்டு எடுத்து நாக்கில் வைத்துச் சூள் கொட் டினேன்.

''ஆகா...'' என்று குரல் கொடுத்தேன்.

''உன் சகோதரி 'வயதுக்கு' வந்து விட்டாள். இன்று அவளுக்குத் திருவிழா போல் கொண்டாடுகிறோம். அவளைப் பெண் பார்க்கப் பலர் வந்திருக்கிறார்கள்'' என்றாள் தலைவி.

''பெரிய மனுஷியா? பெண் பார்க்க வருகிறார் களா?''— நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன். வீட்டுத் தலைவி உள்ளே சென்று விட்டாள்.

நான் புறக்கடைக் கிணற்றடியிலேயே உட்கார்ந்திருந் தேன். எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தேனோ தெரி யாது அப்படியே கண்ணயர்ந்திருக்கிறேன்.

யாரோ என்னைத் தட்டி எழுப்பும் உணர்வு. நான் கண் விழித்தேன். என் சகோதரி என் எதிரே நின்று கொண்டிருந்தாள்.

அந்த மயங்கிய வெளிச்சத்திலும் அவள் தேவதையைப் போலிருந்தாள். என்னுடைய சகோதரி என்று சொல்லிக் கொள்ளவும் எனக்கு வெட்கமாயிருந்தது.

"தம்பி" என்று அவள் அன்புடன் அழைத்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

"அக்கா, நீ ஏன் வருத்தப்படுகிறாய்?" என்று நான் கேட்டேன். அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"உன்னை உள்ளே அழைக்காமல், வெளியே நிறுத்தி வைத்துப் பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதுபோல் அந்த அம்மாள் போட்டது எனக்கு வருத்தம்தான்" என்றாள்.

"இதற்காகவா வருத்தப்படுகிறாய்? நீ சௌக்கியமாக இருந்தால் சரிதான். நான் உள்ளே வந்திருந்தால் என்னை காட்டுமிருகத்தைப் பார்ப்பதுபோல் எல்லோரும் பார்த்திருப்பார்கள். உன்னுடைய தம்பி என்று தெரிந்து விட்டால் மேலும் உனக்குத்தான் அவமானம். இதற்காக வருத்தப்படாதே. நான் உன்னிடம் விடை பெற்றுக் கொண்டு செல்ல வந்தேன். வந்த வேளை நல்ல வேளை. வயிறாரச் சோறு கிடைத்தது. உன்னைப் பற்றிய நல்ல செய்தி கிடைத்தது. நீ பெரியவளாகிவிட்டாய். பெரியவளாகி விட்டாய் என்றால் என்ன அர்த்தம்" என்று சிறு குழந்தையைப்போல் கேட்டேன்.

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே கொடி மல்லிகையின் கொள்ளை அழகு கமழ்ந்தது.

"தம்பி, உனக்குப் புரியாது. எனக்கே இப்போதுதான் புரிந்தது. எனக்குக் கல்யாணம் செய்விக்க மாப்பிள்ளை தேடுகிறார்கள். காஞ்சிபுரத்தில்தான் மாப்பிள்ளை அமைவார் போலிருக்கிறது ஆனால் அதிகப் பணம் தந்து வெளியூருக்கு அழைத்துச் செல்கிறேன் என்று வீட்டுத்

தலைவருக்கு வேண்டியவர் ஒருவர் சொல்கிறார். ஆனால் தலைவி சம்மதிக்கவில்லை. காஞ்சிபுரத்திலுள்ள தனது உறவினருக்கே மணம் புரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். வாதப்பிரதிவாதங்கள் நடக்கின்றன'' என்றாள்.

நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவள் அணிந்திருந்த ஆபரணங்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். காதில் புதிய குண்டலங்கள் அசைந்தாடின. பட்டுப்புடவை கட்டியிருந்தாள். புதிய பட்டாலான மார்க்கச்சு முதன் முதலாக அணிந்திருந்தாள்.

''நீ என்ன நினைக்கிறாய் அக்கா?'' என்று கேட்டேன்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை'' என்றாள். பிறகு, ''நீ எங்கே போகப் போகிறாய்?'' என்று கேட்டாள்.

''காஞ்சிபுரத்திற்கு. ஏகாம்பரர் கோவிலருகே ஒரு மடத்தில் வேலை கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறேன்.', என்றேன். பிறகு என்ன தோன்றியதோ என்னவோ, ''அக்கா! நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்று கேட்டேன்.

''சொல்லு தம்பி,'' என்றாள் மீண்டும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

''என்னைத்தான் கடவுள் இப்படி குரூபியாகப் படைத்து விட்டார்- சௌகரியங்களையும் கொடுக்கவில்லை இருக்க நிழலில்லை; படுக்க இடமுமில்லை. நீ மாளிகை போன்ற வீட்டில் வாழ்கிறாய். உனக்குப் புத்தாடை கொடுத்திருக்கிறார்கள். நாள்தோறும் வயிறு வாடாமல் உண்கிறாய். இந்த இடத்தைவிட்டு என்னுடன் வந்துவிட வேண்டும் என்று நினைக்காதே'' என்றேன்.

''தம்பி! நீ சொல்வது சரி. ஆனால் என்னைக் கல்யாணம் செய்துகொடுத்து வெளியூருக்குஅனுப்பிவிடத்

திட்டமிடுகிறார்களே; கண்காணாத இடத்திற்குப் போவதில் உனக்குச் சம்மதமா?'' என்றாள்.

''நீ எந்த ஊருக்கும் போகவேண்டாம் வீட்டுத்தலைவி சொல்வது போல் காஞ்சிபுரம் மாப்பிள்ளையை மணந்து கொள். நானும் காஞ்சியிலிருப்பேன். நீயும் காஞ்சியில் வாழலாம்'' என்று யோசனை கூறினேன்.

''வீட்டுத் தலைவி சொல்வதை அவள் கணவர் கேட்க வேண்டுமே'' என்று கவலை தெரிவித்தாள்.

''வேண்டுமானால் பாரேன். வீட்டுத்தலைவி சொல் லும் பேச்சுத்தான் எடுபடப் போகிறது'' என்றேன்.

அதைப் போலவே வீட்டுத் தலைவியின் குரல்தான் ஓங்கியிருக்கவேண்டும். நான் காஞ்சிபுரம் சென்று விட் டேன். உத்திரமேரூர் சென்று என் சகோதரியைச் சில மாதங்களுக்குப் பார்க்க முடியவில்லை.

ஒரு நாள் பங்குனி உத்திரத்தன்று, காஞ்சி ஏகாம் பரேச்வரர் திருக் கல்யாண நாளன்று என் சகோதரியை புதுமணக் கோலத்தில் பார்த்தேன். அவளும் பார்த்தாள். மெல்லப் புன்முறுவல் செய்தாள்.ஆனால் என்னை அறிந்த தாகக் கூட அவள் புலப்படுத்திக் கொள்ளவில்லை. அவள ருகே அவளுடைய கணவர் புது மாப்பிள்ளை நின்று கொண்டிருந்தார்.

என் சகோதரியை விட பல வயது மூத்தவர். அடர்ந்த மீசையும், நெடிய உருவமும் போர்வீரர் போல் அவர் காட்சியளித்தார்.

சகோதரியின் விழிகளில் சோகச் சாயைப் பிரதிபலிப் பதைக் கண்டேன். தொலைவிலிருந்து அவளைப் பார்த்து, மகிழ்ந்தேன். ஏகாம்பரேச்வரரைக் கையெடுத்து 'என் சகோதரியைக் காப்பாற்றுங்கள் சாமி' என்று கூறி வணங்கினேன்.

3

''காலம் அப்படியே ஓடுவதில்லை. எனக்குத் திருநாவுக்கரசர் மடத்தில் வேலையொன்று கிடைத்தது. வேலை என்றால் என்ன என்று சொல்லட்டுமா? என்று கூனன் மீண்டும் 'ஹிஹி' என்று சிரித்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

காவல் தலைவனுக்குத் தொடர்ந்து கேட்கலாமா அத்துடன் நிறுத்திக் கொள்ளலாமா என்ற கவலை, தன் சகோதரியின் கல்யாணத்தைப் பற்றிச் சொல்கிறானே—அதற்குப் பிறகு ஏதோ பரபரப்பான சம்பவம் இருக்க வேண்டும் என நினைத்தான்.

சிறைக் கம்பிகளுக்கு வெளியே காவல் தலைவனும், உள்ளே கூனனும் இருந்தவாறு கதை சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஜாமத்திற்கு ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு வரவேண்டிய வேலை காவல்கூடத் தலைவனுக்கு. தினந்தோறும் சரியாக இருப்பது போல் சரியாக இருக்கும் என்ற தைரியத்தில் காவல் தலைவன் அங்கேயே உட்கார்ந்து விட்டான். மிகவும் அமைதியாகத் தன் மடியில் வைத்துக் கொண்டிருந்த காய்ந்த வெற்றிலையையும், பாக்கையும் எடுத்துப் போட்டு குதப்பத் தொடங்கினான்.

''நீ கொஞ்சம் வெற்றிலை போடுகிறாயா!'' என்று உபசாரத்திற்குக் கேட்டான் காவல் தலைவன். சிறைத் தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்குக் காவல்காரர்கள் எந்தவிதப் பண்டமும் கொடுக்கக் கூடாது.

'ஹி ஹி ஹி' என்று கூனன் சிரித்தான். அந்தச் சிரிப்பு ஒன்றுதான் காவல் தலைவனுக்குப் பிடிக்கவில்லை. ஒருவிதப் பயங்கரத்தைப் பிரதிபலித்தது அந்தச் சிரிப்பு.

''நான் வெற்றிலை போடுவதில்லை. ஒரு குவளை தண்ணீர் இருந்தால் கொடுங்க போதும்'' என்றான் கூனன்.

''பாவம்! தாகத்தால், நா வறண்டிருக்கும்'' என்று எண்ணி காவல் தலைவன், ஒரு கலயத்தில் தண்ணீர் கொண்டு வந்தான். கதவைத் திறந்து கலயத்தைக் கூனனிடம் கொடுத்தான். உடனே கதவைப் பூட்டி விட்டான். இரவு வேளையில் கதவைத்திறப்பது கிடையாது. திறவுகோல் அவனிடமிருந்தது. தலைவன் விருப்பத்திற்கு அங்கே எதிர்ப்பே கிடையாது.

கூனன் கலயத்துத் தண்ணீரைக் குடிப்பதுபோல் குடித்து, சிறிது தண்ணீரைக் கலயத்திலேயே மீதமாக்கி வைத்துக் கொண்டான்.

''அப்பாடா,'' என்று பெருமூச்சு விட்டு, ''திருநாவுக்கரசர் மடத்தில் எப்படியெல்லாம் உடல் வருத்திக் கஷ்டப் படுவேன் தெரியுங்களா?'' என்று கூனன் பேச்சை மீண்டும் தொடங்கினான்.

''காலையில் எழுந்தவுடன் ஐம்பது குடங்களாவது தண்ணீர் கிணற்றிலிருந்து இழுத்துப் பெரிய தொட்டியில் கொட்டவேண்டும். முதுகு கூனல் எனக்கு ஒரு விதத்தில் சௌகரியம். ஒரு விதத்தில் அசௌகரியம். இருந்தாலும் எனக்கு ஒருவித அசுர பலம் எங்கிருந்தோ வந்துவிடும். வியர்வை ஆறாகப் பெருகும்; வெய்யில் சுளீரென்று அடிக்கும். நான் அயர்ந்து விடமாட்டேன். தண்ணீர் இழுத்து முடிந்தவுடன் மடத்தின் தலைவரிடம் போய் நிற்பேன். அவர் என்னை ஏற இறங்கப் பார்ப்பார்.

''ஏகாம்பரேசா! அம்பலவாணா! இப்படியொரு ஈச்வரச் சிருஷ்டியா?'' என்று முணுமுணுப்பார். ஏதோ ஒரு குரல் கொடுப்பார். மொட்டைத் தலையுடன் பண்டாரம் ஒருவர் வருவார். சைகை காட்டுவார். அவர்

என்னை மடைப்பள்ளிக்கு வெளியில்அழைத்துச்செல்வார். உட்கார வைப்பார். ஓர் இலையில் சோறு போடுவார். சோறு சிவலிங்க வடிவில் இருக்கும். அதன் தலையில் சந்தன அபிஷேகம் போல் குழம்பை விடுவார்.

''உம்'' என்று குரல் கொடுப்பார்.எனக்கு தேவாமிர்த மாக இருக்கும். ஒரே வாய்—அவ்வளவுதான்! இலைச் சோறு தீர்ந்து விடும். அரைவயிறுதான் நிறைந்திருக்கும். மீண்டும் அவர் முகத்தைப் பார்ப்பேன். சிரிப்பேன்.

பண்டாரத்திற்குக் கோபம் வரும். ''நீ என்ன குண் டோதரனா?'' என்று கேட்பார்.

''ஆமாம்'' என்பேன். ''அவ்வளவுதான்.எழுந்துபோ'' என்று அவர் அதட்டுவார்.

முதலில் நான் அவரது அதட்டலுக்குப் பயப்படுவேன். மாலையில் விறகு உடைக்க வேண்டும்.அப்போது பசி என் வயிற்றைச் சுழற்றும். இரண்டு நாட்கள் பசியை அப்படியே பொறுத்துக் கொண்டேன்.

மூன்றாம் நாள் நான் மடத்தின் தலைவர் எதிரே போய் நின்றேன். என் தோற்றத்தைப் பார்த்தவுடனேயே அவர் 'ஏகாம்பரா, அம்பலவாணா' என்று முணுமுணுத் தார்.

'என்ன வேண்டும்?' என்பதற்கு அடையாளமாக கையை அசைத்துச் சைகை செய்தார்.

நானும் வயிற்றைக் காட்டினேன். ''தொட்டியில் தண்ணீரை ஊற்றியாகி விட்டதா?'' என்று கேட்டார்.

''ஊற்றுகிறேன். ஆனால் எனக்குப் போடும் சோறு போதாது'' என்றேன்.

அவர் யாரையோ கூப்பிட்டார். எனக்குத் தினமும் சோறு போடும் பண்டாரம் வந்து நின்றார்.

"இவன் என்ன சொல்கிறான் கேட்டாயா?" என்றார். பண்டாரம் என்னை எரித்து விடுபவன போல பார்த்து "என்னடா?" என்று அதட்டினான்.

நான் 'ஹூம்' என்று குரல் கொடுத்தேன். பண்டாரத்தைப் பயமுறுத்தும் எண்ணமில்லை எனக்கு.

பண்டாரமும் நடுங்கினான். மடத்துத் தலைவரும் நடுங்கினார். "அவனுக்கு வேண்டிய அளவு சோறுபோடு" என்றார்.

"ஒரு பட்டைதான் சாமி கிடைக்கிறது" என்றேன நான்.

"ஓ! அவ்வளவுதான். திருநாவுக்கரசர் மடத்தில் வருபவர்களுக் கெல்லாம் ஒரு பட்டைதான் சோறு" என்றான் பண்டாரம்.

நான் வாயை ஒரு கையால் பொத்தி, மிகவும் பணிவுடன், "சாமி, வருபவர்களுக் கெல்லாம் ஒரு பட்டைச் சோறு உண்டா?" என்று கேட்டேன்.

"இதென்னடா கேள்வி? உச்சிப் பொழுதுக்கு மணி அடிக்கிறார்களே உன் காதில் விழவில்லையா? அப்போது வருபவர்களுக் கெல்லாம் ஒரு பட்டைச் சோறு உண்டு" என்றான். நான் ஒன்றும் மறுமொழி பேசவில்லை. அங்கிருந்து சென்று விட்டேன்.

அந்த மடம் திருநாவுக்கரச நாயனாரால் நிறுவப் பட்டது. மடம் ஆரம்பகாலத்தில், சிவனடியார்களுக்கு வயிறார உணவு அளித்து வந்தது. திருநர்வுக்கரசர் ஏகாம்பரேச்வரர் மீது பாடிய பதிகங்கள் அங்குக் காலையில் பாடப்படும். மாணவர்கள் தமிழ்ப் பாடங் கேட்பர். நரசிம்ம வர்மர் காலத்திற்குப் பிறகு மெல்ல மெல்ல அந்த வழக்கம் மாறியது. உச்சி வேளையில் சிலருக்கு

மட்டும் சோறு போடுவது என்ற வழக்கம் ஏற்பட்டது. முதல் பண்டாரமாக இருந்தவர் சமையலுக்கு வேண்டிய அரிசியில் பாதியைத் தனது ஆசை நாயகிக்குக் கொடுத்து வந்தார் என்பது எனக்குத் தெரியும்.

நான் அன்று காலையில் ஏகாம்பரேச்வரர் கோயில் சந்நிதிக்குச் சென்று விட்டேன். அங்கேயே தங்கியிருந்து உச்சி வேளைக்கு மடத்திற்கு வருவதுஎன்று முடிவு செய்து கொண்டேன்.

என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? ஐயா, எனக்குச் சோறு ஒன்றுதான் சொர்க்கம். அதற்காகத்தானே அவ்வளவு கஷ்டப்படுகிறேன்.

ஏகாம்பரேச்வரர் சந்நிதியில் நான் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். வருபவர்கள் போகிறவர்கள் என்னைப் புதிய பிராணியைப் பார்ப்பது போல் பார்த்தனர். நான் கண்களை மூடிக் கொண்டு விட்டேன். கர்ப்பக் கிருகத்தில் இருக்கும் லிங்கத்தைப் பார்த்தவுடன் எனக்குப் பண்டாரத்தின் பட்டைச் சோறுதான் நினைவிற்கு வந்தது. என்னை அவர்கள் தேடுவார்கள். என் மீதுள்ள அன்பினாலும் பாசத்தினாலும் அல்ல. தொட்டியில் ஒரு சொட்டுத் தண்ணீர் இருக்காது. மடத்தின் தலைவர் குளிக்க வேண்டும். சோறாக்கத் தண்ணீர் வேண்டும். திண்டாடுவார்கள்; திண்டாடட்டும்.

கண்ணை மூடிக் கொண்டிருந்தபோது எனக்கு என் சகோதரியின் நினைவு வந்துவிட்டது. பாவம் அவள் எங்கிருக்கிறாளோ என்ற கவலை பிறந்தது.

அப்போது ''தம்பி'' என்ற குரல் கேட்டது. என்ன ஆச்சர்யம். என் சகோதரி என் எதிரே பூக்கூடையுடன் நின்று கொண்டிருந்தாள்

4

''அக்கா, பவழமல்லிகை அக்கா'' என்று ஆவலுடன் கூவிவிட்டேன். என் சகோதரியின் பெயர் பவழமல்லிகை.

என் சகோதரி என்னருகே வந்தாள். சாமி கும்பிட வந்தவர்கள் எங்களைத்திரும்பித் திரும்பிப்பார்த்தார்கள். அவர்களுக்கு சாமியின் நினைவு வரவில்லை. என்னையும், சகோதரியையும் மாறி மாறிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

''நாம் வெளியே செல்வோம்'' என்றாள் சகோதரி. நானும் எழுந்தேன். பிராகாரத்தில் அமைதியாக ஓரிடத்தில் மரத்தடியில் நின்று கொண்டோம்.

''தம்பி, உன்னைச் சந்திப்போமா என்றாகிவிட்டது'' என்றாள் பவழமல்லிகை. பாச உணர்வு அவள் முகத்தில் பிரதிபலித்தது.

''நீ எங்கேயிருக்கிறாய் தம்பி?'' என்று அவள் என்னைக் கேட்டாள். நான் விவரத்தைக் கூறினேன்.

''அப்படியென்றால் நீ இன்று பட்டினியா?'' என்று கவலையுடன் கேட்டாள் அவள்.

''பட்டினியா? தினமும் உச்சி வேளைக்குத்தான் உணவு. இன்னும் உச்சி வேளை ஆகவில்லை. அதனால் பட்டினி என்று எப்படிக் கூற முடியும்?'' என்றேன் மெல்லச் சிரித்துக் கொண்டு. எனக்கு மெல்லச் சிரிப்பது மிகவும் கிரமமாகத் தானிருந்தது. நான் ஒன்றும் மறு மொழி பேசவில்லை. அங்கிருந்து சென்று விட்டேன்.

''காலையிலிருந்து வேலை செய்யவில்லையே, சோறு எப்படிக் கிடைக்கும்?'' என்று மீண்டும் தன் கவலையைத் தெரிவித்தாள் பவழமல்லிகை.

''உச்சிவேளை ஆனவுடன் மடத்து மணியை அடிப்பேன். எல்லோருக்கும் போடுவது போல் எனக்கும் சோறு போடுகிறார்கள்'' என்று சொன்னேன். சகோதரி சிரித்தாள். ஆனால் அவள் சிரிப்பில் கவலை தெரிந்தது. சிரிப்பில் மட்டுமா? அவள் முகத்திலேயே கவலை இருந்தது.

நீங்கள் கவலைப்படாதீர்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள். உங்கள் வீடு எங்கே?'' என்று கேட்டேன்.

''நான் சௌக்கியமாய்த் தானிருக்கிறேன். உணவுக்கும் உடைக்கும் குறைவில்லை ஆனால் கட்டுப்பாடு மிக அதிகம். நான் வெளியே எங்கும் போகக் கூடாது. என்னையும் ஒருவரும் பார்க்க வரக்கூடாதாம். நான் மிகவும் அழகாம். யாராவது பார்த்தால் தூக்கிக் கொண்டு போய் விடுவார்களாம்'' என்று சொல்லி பவழமல்லி மெல்லச் சிரித்தாள்.

பிறகு அவள் சொன்ன செய்திகள் எனக்குக் கவலையை அளித்தன.

என் சகோதரியைக் கல்யாணம் செய்து கொண்டவர் பட்டாடை நெய்வதில் திறமைசாலி. அதைத் தவிர சிறந்த வீரர். வாதாபிக்குப் பல்லவ மன்னர் படையெடுத்துச் சென்றபோது முக்கியப் பதவி வகித்துச் சென்றவர். அவருக்கு விரோதிகள் சிலர் இருக்கிறார்கள் என நினைக்கிறேன். வீட்டிலே சில சமயம் கடுமையான விவாதம் நடைபெறும். வாய்ப் பேச்சா, கை கலப்பா என்று வித்தியாசம் தெரியாத அளவுக்குக் கூச்சல் கேட்கும். நான் போய் பார்க்க முடியாது. வெளியே கதவைப் பூட்டியிருப்பார்கள். எனக்குப் பயமாயிருக்கிறது தம்பி'' என்றாள்.

அதற்குமேல் அவள் ஏதும் சொல்லவில்லை. அவள் கண்கள் கலங்கியிருந்தன. ''சரி, நான் வருகிறேன்'' என்று புறப்பட்டு விட்டாள். புறப்படும் முன்பு ''இன்று

அவர் அடுத்துள்ள கிராமத்திற்குச் சென்றிருக்கிறார், அதனால் நான் கோயிலுக்கு வந்தேன்'' என்றாள்.

அவள் நடக்கத் தொடங்கினாள். அவள போவதையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற் கெல்லாம் நான் என் சகோதரியின் பின்னால் ஓடினேன்.

''எங்கே வருகிறாய், நீ என் வீட்டிற்கு வராதே'' என்று பவழமல்லி சொல்லிவிட்டு நடந்தாள். ஆனால், திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள். நின்ற இடத் திலேயே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தேன். பிறகு நான் என் சகோதரியைத் தொடர்ந்து ஓடினேன்.

''அக்கா, உங்கள் வீட்டிற்குள் வரமாட்டேன். உன் வீட்டு வாசல்வரை வருகிறேன். உங்கள் வீட்டைத் தெரிந்து வைத்துக் கொள்கிறேன்'' என்றேன். அவள் தலையசைத்தாள். கையிலுள்ள தட்டிலிருந்து பாதித் தேங்காய் மூடியை எடுத்து என்னிடம் தந்தாள். வீட்டைப் பார்த்துக் கொண்டேன். ''போய் வருகிறேன்' என்று கூறிவிட்டு, கையிலுள்ள தேங்காயை உடைத்துத் தின்று கொண்டே வந்தேன்.

நான் திருநாவுக்கரசர் மடத்தை அடையும்போது வேளை நெருங்கி விட்டது. மடம் கலகலப்பு அற்றி ருந்தது. வெளியே சிலர் நின்று கொண்டிருந்தனர். என்னைப் பார்த்து விட்டுச் சிலர் உள்ளே ஓடினர்.

நான் வெளியே தொங்க விடப்பட்டிருந்த மணியை அடித்தேன்.

பண்டாரம் ஓடி வந்தார். அவர் உடம்பெல்லாம் வியர்த்திருந்தது.

''எனக்குச் சோறு போடு'' எனறேன்.

அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். அப்போது தான் சோறு கொதித்துக் கொண்டிருக்கிறது போலிருக் கிறது. கிணற்றிலிருந்து தண்ணீர் இழுக்க அவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்கள்.

என்னை மடத்தின் பின்புறம் வருமாறு சைகை காட்டி னார். நான் கிணற்றங்கரைக்குச் சென்றேன்; தொட்டியில் தண்ணீரே இல்லை.

பண்டாரம் வந்தார். என்னையே உற்றுச் சிறிது நேரம் பார்த்தார்

''உம், சோறு போடுங்கள்'' என்றேன். என் வயிறு அப்போதுதான் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருந்தது.

''சோறா? தண்ணீர் இழுத்துக் கொட்டு போடு கிறேன்'' என்றார்.

''உச்சி வேளைக்கு வருகிறவர்களுக்கெல்லாம் சோறு போடுவேன் என்று தற்பெருமை பேசினாயே'' என்றேன் கோபமாக.

''வேலைக்காரர்களுக்கு வேலை செய்தால்தான் சோறு'' என்றார் பண்டாரம்.

''நான் வேலைக்காரனில்லை'' என்றேன்.

''சோறு கிடையாது'' என்றார். எனக்கு என்ன தோன்றியதோ என்னவோ, பண்டாரத்தின் மீது பாய்ந்து அவர் முகத்தில் ஒரு குத்து விட்டேன்.

'ஐயோ ஐயோ'' என்று அவர் அலறினார். மடத்து மற்ற வேலைக்காரர்கள் வந்து விலக்கினர். என்னைப் பிடித்திழுத்துக் கொண்டு வெளியே கொண்டு விட்டனர். நான் கூவியதுதான் பலன். சோறு கிடைக்கவில்லை. பசி மிஞ்சியது. நான் ஏகாம்பரேச்வரர் கோயில் பக்கம்

சென்றேன். அங்கிருந்து என் சகோதரியிருக்கும் வீதிக்குச் சென்றேன். என் உடல் படபடத்தது. என்ன செய்வது என்றே எனக்குத் தோன்றவில்லை.

வெயில் கடுமையாக காய்ந்து கொண்டிருந்தது. இரண்டு குதிரை வீரர்கள் அந்தத் தெருவில் குறுக்கும் நெடுக்குமாகச் சென்று கொண்டிருந்தனர். என் சகோதரி இருக்கும் வீட்டு வாசலில் சிறிது நேரம் நின்று ஏதோ பேசி விட்டுச் சென்றனர்.

நான் தெரு முனையில் மரத்தடியில் நின்று கொண்டேன். கடுமையான வெயிலும், களைப்பும் என் விழிகளைச் சுழற்றின. மரத்தடியில் சோர்ந்து படுத்து விட்டேன். சிறிது நேரம் கழித்து மரத்தடிக்குக் குதிரை வீரர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் பிராகிருத மொழியில் பேசிக் கொண்டனர். எனக்குப் பிராகிருதம் தெரியாது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்கள் தங்களிடமிருக்கும் சோற்று மூட்டையை அவிழ்த்தனர். பேசிக் கொண்டே உண்ணத் தொடங்கினர்.

ஒரு கவளம் வாயில் போட்டுக் கொண்டவுடனேயே ஒருவனுக்குப் பலமான விக்கல் வந்து விட்டது. தண்ணீர் வேண்டி அவன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

எனக்கோ அசுரப் பசி. கொஞ்சம் சோறு போட்டால் அவர்களை வாழ்த்துவேன்—நான் எழுந்து உட்கார்ந்து கொண்டேன்

"என்ன வேண்டும்?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டேன். அவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை. சைகை காட்டினர்.

'தண்ணீர் தானே வேண்டும்' என்று நானும் சைகை மூலம் கேட்டு, மெல்ல எழுந்து அந்தத் தெருவிலுள்ள ஒரு

வீட்டிற்குச் சென்று குடிக்க ஒரு கலயத்தில் தண்ணீர் வாங்கி வந்தேன்.

''எனக்குச் சோறு வேண்டும்; கொடுத்தால் தண்ணீர் தருகிறேன்'' என்றேன்.

குதிரையில் வந்தவருள் ஒருவன் அப்படியே தனது சோற்று மூட்டையை என்னிடம் கொடுத்துவிட்டு என் கைக் கலயத்தைப் பறித்து ஒரே மூச்சில் தண்ணீரைக் குடித்து விட்டான்.

அவனது தாகத்தை நான் உணர்ந்தேன். எனக்கும் அவனைப் போலத்தான் பசி. அவன் மீண்டும் என்னைப் பார்த்துத் தண்ணீர் கேட்டான்.

நான் சிரித்தேன். அவர்களைப் பார்த்து, 'வெயிலில் நீண்ட தூரம் அலைந்தீர்களோ?' என்றேன். அவர்கள் மறுமொழி சொல்லவில்லை. அவர்களுக்கு நான் பேசும் மொழி புரியவில்லை.

நான் மீண்டும் கேட்டேன். அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு ஏதோ மெல்லிய குரலில் பேசிக் கொண்டனர். அவர்கள் ஏதோ மறுமொழி கூறப் போகிறார்கள் என்று நான் நினைத்தேன்.

அந்த இருவரும் சொல்லி வைத்தாற்போல் கண்மூடித் திறப்பதற்குள் குதிரைமீது ஏறினர். குதிரையைத் தட்டி விட்டனர்; பறந்தோடினர்.

கையில் சோற்று மூட்டையுடன் இருந்த நான் காரணம் புரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்தேன். ஏன் அவர்கள் ஓடி விட்டனர் என்று எனக்குப் புரியவில்லை. என் சகோதரியின் வீட்டுக்கெதிரே அவர்கள் நின்று பார்த்ததன் காரணமும் எனக்கு அப்போது விளங்கவில்லை.

ஒவ்வொரு வாயாக அந்தச் சோற்று மூட்டையிலிருப்பதை எடுத்து விழுங்க ஆரம்பித்தேன். அகோரப் பசி என்பதால் அந்தச் சோற்றை உண்டேன். அந்தத் தயிர் சோறு கலந்து பல நாட்களாயிருக்கும் என்பது அது புளித்து வழிந்த நாற்றமே புலப்படுத்தியது.

நான் தின்று முடிப்பதற்கும் நான்கைந்து குதிரை வீரர்கள் அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

அவர்கள் நமது அரசாங்க வீரர்கள். கையில் ரிஷபக் கொடி பிடித்திருந்தனர்.

''ஏய் கூனா, இங்கே இரண்டு பேர் குதிரை மீது வந்தார்களா?'' என்று கேட்டார்கள்.

''ஆமாம்'' என்பதற்கு தலையை அசைத்தேன்.

''அவர்கள் எந்தப் பக்கம் போனார்கள்?'' என்று கேட்டார்கள்.

''ஏன் அவர்கள் திருடர்களா?'' என்று நான் அவர்களைத் திருப்பிக் கேட்டேன் எனக்கு அந்தக் குதிரை வீரர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஆவல்.

''திருடர்களைவிடப் பொல்லாதவர்கள்'' என்று சொல்லிவிட்டு நான் காட்டிய திசையில் விரைந்தனர்.

பசி எனக்குச் சிறிது அடங்கியது. ஆனால் நா வறட்சி அதிகமாகியது. தண்ணீர் கலயத்தை எடுத்துக் கொண்டு முதலில் தண்ணீர் பெற்ற வீட்டை நோக்கிச் சென்றேன், போகும்போது என் சகோதரி வீட்டின் எதிரே நின்றேன்.

வீட்டுக்குள்ளேயிருந்து யாரோ இருவர் கடுமையாக விவாதிக்கும் குரல் கேட்டது.

என் சகோதரி என்னைப் பார்த்து விட்டாள். பின் பக்கமாக வருமாறு சைகை காட்டினாள். நான் ஒரே எட்டில் பாய்ந்து புறக்கடைப் பக்கம் சென்று மதில்ஏறிக் குதித்து, சகோதரியின் வருகைக்காகக் காத்து நின்றேன்.

என் சகோதரி புறக்கடைப் பக்கம் வந்தாள். அவள் முகத்தில் பெரும் கவலை பிரதிபலித்தது. அவள் செய்கையில்—பேச்சில் பரபரப்பு மிகுந்திருந்தது.

''உன்னைச் சந்திக்க வேண்டும் என்று நினைத்தேன். நீ வந்து விட்டாய். உனக்கு ஆயுசு நூறு'' என்றாள் மெல்லச் சிரித்துக் கொண்டு.

''நூறு ஆயுள் வேண்டாம் தாயே! கடவுள் என் உருவத்தைத்தான் இப்படிப்படைத்தார். நடைபெறும் சம்பவங்களையுமா கோணலாகப் படைக்க வேண்டும்?'' என்று வேதனையுடன், நடந்தவற்றை விவரித்தேன்.

''தம்பி இன்று உனக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் ஒரு நன்மைக்குத்தான் என்று வைத்துக் கொள். பசிக்கு உணவு தேடி என் வீட்டை நோக்கி வந்தது எனக்கு நிம்மதியைத் தந்து விட்டது. இன்று காலையிலிருந்தே என் கணவருக்கும் மற்றொருவருக்கும் வாய்ச் சண்டை ஏற்பட்டது. அது இப்போது கைச் சண்டை ஆகிவிடும் நிலைக்கு வந்து விட்டது, என் கணவர் பலசாலிதான். ஆனால் அவரைவிட வயதின் இளைஞரான ஒருவரிடம் அவர் பயப்பட வேண்டியிருக்கிறது.

நான் நிலைமையைப் புரிந்து கொண்டேன்' ''யார் அந்தப் பொடிப்பயல்?'' என்றேன் ஆத்திரத்துடன்'

''உள்ளே பேசிக்கொண்டிருக்கிறான்'' என்றாள்.

''இப்போதே போய் அவனை எமனுக்கு விருந்தாக்கி விடட்டுமமா'' என்றேன்.

என் சகோதரி நடு நடுங்கி விட்டாள். ''வேண்டாம் வேண்டாம். உன்னுடன் பேசுவதே தெரியக் கூடாது. தெரிந்தால் என் கணவர் இப்போதுள்ள கோபத்தை என் மீது செலுத்துவார்'' என்றாள்.

''பிறகு என்னை ஏன் எதிர்பார்த்தாய்? என்னை ஏன் அழைத்தாய்?'' என்று கோபமாகக் கேட்டேன்.

அவள் விம்மினாள். ஏதோ சொல்ல அவள் விரும்பு கிறாள். ஆனால் முடியாமல் தவிக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

''அக்கா, தைரியமாகச் சொல்லுங்கள். உங்கள் நல் வாழ்விற்காக நான் என் இந்த உடலையும் உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன், சொல்லுங்கள்,' என்றேன்.

இப்படிக் கூறிக் கூனன் நிறுத்தினான். சிறைக் காவல் தலைவனுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது.

''ஐயாவுக்குத் தூக்கம் வந்துவிட்டது போலிருக் கிறது'' என்றான் கூனன்.

''ஆமாம், ஆமாம். உன் கதையைக் கேட்டுக் கொண் டிருந்ததில் எனக்கு நேரம் போவதே தெரியவில்லை. இப் படி நான் உன்னுடன் பேசிக் கொண்டிருப்பதை மற்ற வர்கள், தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு, வேலையில் சுணங்கி விடுவார்கள். நாளைக்கு மீதியைக் கேட்கிறேன். இதுவரையில் உன் சோகக் கதையைக் கேட்ட போதே என் நெஞ்சு உருகிவிட்டது'' என்றான் காவல் தலைவன்.

''இனிமேல் தான் ஐயா என் சோகக் கதை, பயங்கரக் கதை'' என்றான் கூனன்.

5

சிறைக் கூடத்திற்கு வரும்போது காவல் கூடத் தலைவர் கூனனைச் சந்திக்கக் கூடாது என்ற எண்ணத்திலேயே வந்தார். ஆனால் முதல் நாள் கூனன் சொன்னது போல் இனி தான் சோகக் கதையும், பயங்கரக் கதையும் கூனன் சொல்லப் போகிறான்; அதைக் கேட்காமல் எப்படி இருப்பது என்ற எண்ணத்துடன், கூனன் இருப்பிடத்திற்குச் சென்றார்.

சிறைக் கூடம் அமைதி நிறைந்திருந்தது. ஒவ்வொரு தனிக் கொட்டடியிலும் தண்டனை பெற்றவர்கள் தங்கள் கவலைகளை மறந்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

வழக்கம்போல் கூனன், விழித்துக் கொண்டிருந்தான். மூலையில் உள்ள சட்டியைக் கதவின் அருகே கொண்டு வைத்திருந்தான். அதில் கூழ் இருந்தது, நாள்தோறும் குடித்தது போக மீதியை அவன் அதில் ஏனோ சேர்த்து வைத்துக் கொண்டே வந்தான்.

சிறைக் காவலர் அன்றும் வருவார் என்பது அவனுக்குத் தெரியும். முகத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த மீசையும், தாடியும் அவனைத் தொல்லைப்படுத்தின. சடையும் விழுந்து விட்டது. பேன்வேறு சேர்ந்து தொந்தரவுப் படுத்தியது. மனக் கவலையை விட அதிகத்தொல்லையை அவை கொடுத்தன.

''ஹி ஹி ஹி'' என்று சிரித்து தலமைக் காவலனை வரவேற்றான்.

''நீ இன்னும் தூங்கவில்லையா?'' என்று காவல் தலைவன் கேட்டார். அதற்கும் 'ஹி ஹி ஹி' என்றசிரிப்புத்

தான் மறுமொழி. "உனக்கு எப்படித் தூக்கம் வராமலிருக்கிறது?" என்று அவர் கேட்டார்.

"என்னைப் போன்ற சோகமயமான சம்பவம் தங்கள் வாழ்க்கையில் நேர்ந்தால் தங்களுக்கும் தூக்கம் வராது" என்று கூறிய கூனன் உடனே "என்னைப் பொறுத்தருளுங்கள். தங்கள் வாழ்க்கையிலும் அப்படி ஏதும் நேரக்கூடாது என்று ஏகாம்பரீசனைத் துதிக்கிறேன்" என்றான் கூனன்.

"கூனா, எப்படி நீ வயது முதிர்ந்த கிழவனைப் போல் பேசுகிறாய். தெளிவாகப் பேசுகிறாயே, எங்காவது படித்திருக்கிறாயா?" என்று தலைவர் கேட்டார்.

"படிப்பா! வாழ்க்கை கற்றுக் கொடுக்கும் பாடம் தான். ஐயா, என் சகோதரிக்குக் கல்வி கற்பித்த என் பெற்றோர்கள், என்னை அலட்சியப்படுத்தி விட்டனர். எனது கூன்முதுகும் அழகற்ற தோற்றமும் அனைவரையும் வெறுக்குமாறு செய்தன. ஆனால், கடவுள் எனக்கு உள்ளுணர்வை அதிகமாகக் கொடுத்திருக்கிறார். பிறகு என்ன நேரப் போகிறது என்று சிலசமயங்களில் என் மண்டையில் 'பளிச் பளிச்' சென்று மின்னும். அதுபோன்ற மின்னல் எனக்கு அன்று தோன்றியது" என்றான் கூனன்.

"என்று தோன்றியது? உன் சகோதரி உன்னிடம் பேசிக் கொண்டிருந்த போதா?" என்று கேட்டான் காவல் தலைவன்.

கூனன் பெருமூச்சு விட்டான். "ஐயா, அன்று என் சகோதரி என்னைப் புறக்கடைப் பக்கம் அழைத்தவுடனேயே ஏதோ நடக்கப் போகிறது என்று என் மண்டையில் 'பட்பட்'டென்று அடித்தது. அதற்கு ஏற்றாற் போல்தான் எல்லாம் நடந்தது.

'நான் என் சகோதரிக்கு ஆறுதல் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன். என் மனத்தில் புரிய முடியாத

எண்ணச் சுழல்கள் சுழன்று சுழன்று குடைந்து எடுத்தன. இரண்டு குதிரை வீரர்கள் என் சகோதரி வீட்டெதிரே நின்று பார்த்தது, அவர்களிடம் சோறு வாங்கிச் சாப்பிட்டது, பல்லவ வீரர்கள் அவர்களைத் தேடி வந்தது சகோதரி தன் கணவரின் விரோதியைக் குறித்துக் கூறியது எல்லாம் என்னைச் சிந்திக்க வைத்தன.

நான் ஏகாம்பரேச்வரர் கோவிலுக்கு வந்து சேர்ந்தேன். அதுதான் அமைதியான இடம் மரநிழலில் நான் சற்று ஓய்வு எடுத்துக்கொண்டேன். அப்படியே கண்ணயர்ந்து விட்டேன். விழித்தபோது, இருள் சூழ்ந்திருந்தது. அஸ்தமனமாகி ஐந்து நாழிகைக்கு மேலிருக்கும். நான் இதுவரை அதுபோல அயர்ந்து தூங்கியது கிடையாது.

திடீரென்று விழித்துக் கொண்டவுடன் என் சகோதரியைக் காணவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அவள் வீட்டை நோக்கி விரைந்தேன் வீட்டு வாசலில் வண்டியொன்று நின்றிருந்தது.என் சகோதரி வண்டிக்குள் அமர்ந்திருந்தாள். அது ஒரு கூண்டு வண்டி. முன்பக்கத்தில் ஏராளமான பண்டங்களை ஏற்றியிருந்தார்கள்.

அவளுடைய கணவன் வண்டியில் ஏற முற்பட்டான். என்னைக் கண்டு விட்ட என் சகோதரி ஏதோ கூறியிருக்க வேண்டும். அவர் முதன் முதலாக என்னைப் பார்த்தார். என் அருகே வந்தார்.

''தம்பி'' என்றழைத்தார் குரல் கரகரப்பாக இருந்தாலும் அதில் கனிவு இருப்பதை உணர்ந்தேன். ''தம்பி! இதுநாள் வரை நீ என் மைத்துனன் என்பது எனக்குத் தெரியாது. நீ எங்கிருந்தாய், என்ன செய்து கொண்டிருந்தாய்? உன்னைப் பார்த்தால் மிகவும் துன்பப்படுபவன் போல் தோன்றுகிறது'' என்றார்.

நான் மௌனமாக நின்றேன். அவர் வண்டியில் ஏறிக்கொண்டார்.''நான் அதிக நேரம் இங்கு நின்று பேசமுடிய

வில்லை. உடனே இங்கிருந்து புறப்பட்டு காஞ்சிக்கு வெளியே செல்கிறோம். பத்துக்கல் தொலைவில் தாமரை தடாகம் என்ற ஊர் இருக்கிறது. அங்கு போய்ச் சிறிது நாட்கள் வாழ எண்ணம். பேசிக் கொண்டே செல்வோம் வா'' என்றார்.

வண்டி நகர்ந்தது; வண்டியுடன் நான் நடந்தேன். சில சமயம்—ஓட வேண்டியும் வந்தது. வண்டிக்காரன் வண்டியை வேகமாக ஓட்டினான்.

''தம்பி! என் கல்யாணத்திற்கு ஏன் நீ வரவில்லை'' என்று அவர் பேச்சைத் தொடங்கினார்.

''என் சகோதரியின் கல்யாணத்திற்கு என்று சொல்லுங்கள்'' என்றேன். அவர் சிரித்தார்.

''இப்படிச் சுவையாகப் பேசக்கூடிய உன்னைப் பற்றி உன் அக்காள் சொல்லாதது வருத்தமே'' என்றார்.

''எல்லாம் என் கூன் முதுகு, குரூரமுகம் யாருக்குப் பிடிக்கும்?'' என்றேன் நான்.

''அழகற்றவனைக் கண்டால் ஒருவருக்கும் பிடிப்ப தில்லை. ஆனால் அழகுள்ளவர்களைக் கண்டாலோ?'' என்று கூறிச் சிறிது நேரம் அவர் மௌனமாயிருந்தார்.

''தம்பி உன் சகோதரியின் அழகே அவளுக்குச் சத்துரு வாக அமைந்து விட்டது. என் பரம விரோதி ஒருவர் கூறுகிறார் :

அவர் தன் விரோதத்தை மறந்து விடுகிறாராம்-உன் சகோதரியைத் தனக்குத் தந்து விட்டால். என்ன தைரியம் அவனுக்கு. அப்படிக் கேட்டு விட்டான். அவன் நாக்கைத் துண்டாடியிருப்பேன். உன் சகோதரி தடுத்து விட்டாள். இன்று வந்து பெரிதாக விவாதித்தான். வாய்ப் பேச்சு

முற்றியது " என்று அவர் கூறும்போது நான் குறுக்கிட்டு அப்போதே சொல்லியிருந்தால் அவனை அங்கேயே பலியிட்டிருப்பேன். இப்போது மட்டுமென்ன, என் இரத்தம் துடிக்கிறது. அத்தான்! அவன் வீட்டை அடையாளங் காட்டுங்கள். அவனை இரவோடு இரவாக கழுகுக்கு விருந்தாக்கி விடுகிறேன். அவனுக்குப் பயந்தா ஊரை விட்டுப் போகிறீர்கள்?'' என்று நான் பலமாகக் கத்தினேன்.

அந்த இருட்டு வேளையில் அந்தப் பாட்டையில் என் குரல் மிகவும் பயங்கரமாக ஒலித்திருக்க வேண்டும். காஞ்சிக் கோட்டை வாயிலைத் தாண்டி வண்டி தாமரைக் குளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது

''நிறுத்துங்கள் அத்தான் வண்டியை, வண்டியை ஊருக்குத் திருப்புங்கள். அந்தக் கொடியவனிடம் இனியும் பயப்பட வேண்டாம். நான் அவனுக்கு ஒரு முடிவு கட்டி விடுகிறேன்'' என்றேன்.

''பயப்படாமல் வாழ எனக்கு ஆசைதான். ஆனால் அவன் செல்வந்தன். செல்வாக்குள்ளவன். அவனுக்குக் கையாட்கள் சளுக்கிய நாட்டினின்று வந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் உன் சகோதரியை அழைத்துக் கொண்டு வாதாபிக்குச் செல்ல அவன் திட்டமிடுகிறான்!'' என்றார் என் அத்தான்.

எனக்குக் கோபம் தலைக்கு மேல் வளர்ந்தது. வண்டியின் முன் பக்கம் ஓடிச் சென்றேன். நுகத்தடியைப் பிடித்து நிறுத்தினேன், ''வண்டியை ஓர் அணுகூட நகர விடமாட்டேன். வீடு திரும்புங்கள். அல்லது அந்த வீணனின் இல்லத்தைக் கூறுங்கள்'' என்று கோபக் குரலில் கூவினேன்.

என் சகோதரி விம்மும் ஒலி கேட்டது. ''ஏன் அக்கா நீங்கள் கண்ணீர் விடுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''அங்கே இருக்கக்கூடாது என்று நான் பிடிவாதம் பிடித்தேன். என் கணவர் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற பயம் எனக்கு ஏற்பட்டது. அதனால் தான் காஞ்சியிலிருந்து புறப்பட்டு விட வற்புறுத்தினேன். உனக்குப் புண்ணியம் உண்டு; அவரைத் திரும்பி வருமாறு வற்புறுத்தாதே'' என்று கூறி விம்மினாள்.

எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ''தாமரைக்குளத்திற்கு மட்டும் அந்த அயோக்கியன் வரமாட்டான் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டேன்.

என் சகோதரியால் உடனே மறுமொழி கூற முடியவில்லை. ஆபத்து தாமரைக் குளத்திற்கும் வரும் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

''அக்கா, நீங்கள் கவலைப்படாதீர்கள். தாமரைக் குளத்திற்குச் சென்று நிம்மதியாக இருங்கள். நீங்கள் சொல்லாவிட்டால் என்ன, நான் கயவனின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விடுகிறேன். உங்கள் நினைவு அவன் உள்ளத்தின் ஒரு மூலையில் கூட இருக்கவிடாமல் ஒழித்து விடுகிறேன். நீங்கள் கவலையின்றிச் செல்லுங்கள். நான் ஓரிரு நாட்கள் கழித்துத் தாமரைக் குளத்திற்கு வந்து தங்களைச் சந்திக்கிறேன்'' என்றேன்.

அக்காவின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும் அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். வண்டி ஆடி ஆடிச் சென்று கொண்டிருந்தது.

பிறகு நான் தாமரைக் குளத்திற்கு வந்து என் சகோதரியைச் சந்திக்கவில்லை.

''நான் நேரே அந்தப் பெரிய மனிதன் வீட்டிற்குச் சென்றேன். ஆமாம். அவன் பெரியமனிதன் போல் வேடம் போடுபவன் என்று யாருக்கும் தெரியாது. சக்ரவர்த்தி பரமேச்வரவர்மருக்கு தான் மிகவும் வேண்டியவன் என்று

சொல்லிக் கொள்வான்; பரமேச்வர வர்மரை யாரும் சந்திக்க முடியாது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அதனால் சுலபமாகப் பொய்யை உதிர்ப்பான். அவனிடம் அனைவரும் அஞ்சி நடுங்கினர். வாதாபிக்கும் அவனுக்கும் தொடர்பு இருந்த விஷயம் பலருக்கும் தெரியும். தெரிந்தும் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை.

அவன் என் சகோதரியின் கணவருக்கு விரோதி. பணம் கடன் கொடுத்திருந்தான். என் அத்தான் போர்க் காலத்தில் படைகளில் சேர்ந்து விடுவார். சமாதான காலத்தில் சொந்தத் தறிகளில் பட்டாடை நெய்வார். தானே நெய்யா விடினும், கூலிக்கு ஆட்களை அமர்த்தி நெய்வார். தொழில் போட்டி வேறு. என் சகோதரியை மணம் புரிந்து கொள்வதிலும் அவன் போட்டியிட்டான். தோல்வி யடைந்தான். அதனால் பரம விரோதியாகி விட்டான்.

அந்த இருள் வேளையில் நான் அவன் வீட்டைத் தேடிச் சென்றேன். வெளியே பெரிய மதிள். உள்ளே நுழைய ஒரு வாயில். கதவு எப்போதும் மூடப்பட்டிருந்தது. நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். மதிளின் ஓரத்தே ஓர் ஆலமரம். அதன் மேல் தாவி ஏறினேன்—விழுதுகள் வழியே மதிளின் மேல் குதித்தேன். பிறகு மதிளிலிருந்து உள்ளே குதித்தேன்.

முன் கூடத்தில் யாருமில்லை தொங்கும் விளக்கு ஒன்று புகைந்தவாறு ஒளி வீசிக் கொண்டிருந்தது. வீட்டிலிருந்தவர்கள் திருவிழாவிற்காகச் சென்றிருந்தார்கள் போலும்.

யாரோ கனைத்துக் கொண்டு உலவுவது தெரிந்தது, அந்தப் பாதகன் அவன் தானா என்று அடையாளம் தெரிந்து கொள்வதற்காக நான் தூண் மறைவில் நின்றேன். அவனே தான், என் சகோதரி கூறிய அங்க அடையாளங்களுடன் கூடிய அவனேதான்.

''அடப் பாதகா!'' என்று கர்ஜித்து அவன்மீது பாய்ந்தேன். இருவரும் கூடத்தில் உருண்டோம். என் தாக்குதல்

அவனுடைய மூக்கில் சரியாகப் பட்டதால் இரத்தம் சள சளவென்று கொட்டியது. நன்றாகத் தெரிந்தது, என் உட லெல்லாம் இரத்தம்.

அதுவே எனக்கு விரோதமான சாட்சியமாகியது. அவனிட்ட கூச்சல் வீட்டையே கலக்கிவிட்டது; வேலைக் காரர்கள் ஓடிவந்தனர். நான் எதிர்த்துப் போரிட்டேன்.

கடைசியில் என்னைக் கயிறு போட்டு மரத்தின் கட்டி னார்கள். இரவெல்லாம் மரத்தில் கட்டப்பட்டுக் கிடந்தேன்.

காலையில் பல்லவ வீரர்கள் வந்தார்கள். என்னைப் பஞ்சாயத்தார் முன்னிலையில் நிறுத்தினார்கள். ஏழைப் பேச்சு அம்பலம் ஏறவில்லை. எனக்கு மூன்று ஆண்டுகள் கடுந் தண்டனை விதித்தார்கள்.

இதோ இங்கே சிறையில் வாடுகிறேன். ஐயா நீங்களே சொல்லுங்கள். எனக்குத் தண்டனை கொடுத்தது சரியா? என் சகோதரி என்ன ஆனாளோ? ஐயா, நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்வீர்களா?'' என்று கூனன் கேட்டான்.

காவல் கூடத் தலைவருக்குத் தூக்கம் கண்ணைச் சுழற் றியது. ''சரி, சரி. நாளைக்கு வந்து பேசிக் கொள்கிறேன்'' என்று அவர் புறப்பட்டு விட்டார்.

அவர் செல்வதையே கூனன் பார்த்துக் கொண்டிருந் தவன், ''ஐயா'' என்றழைத்தான். அவர் திரும்பி வந்தார்.

''ரொம்பப் புண்ணியம் உண்டுங்க...கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டு தாருங்க'' என்றான். தண்ணீர்தானே புண்ணியமாகப் போகட்டும் என்று ஒருகலயத்தில் தண்ணீ ரைக் கொண்டு அவர் கொடுத்தார். கம்பி இடுக்குகளின் வழியே கலயம் நுழையாது; அதனால் சிறைக் கதவைத் திறந்து, கலயத்தை நீட்டினார். அவர் முகத்தையே ஒரு

முறை பார்த்துக் கொண்டே, ''நன்றி ஐயா, நன்றி ஐயா, நாளைக்கு நான் சொல்வதைக் கட்டாயம் கேட்க வேண்டும்'' என்று கூனன் கெஞ்சும் குரலில் கேட்டான்.

''ஆகட்டும், ஆகட்டும்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் காவல் கூடத் தலைவர்.

6

கூனன் சிறைக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு மாலையிலிருந்தே நின்று கொண்டிருந்தான். அன்று காலையிலிருந்தே அவனுக்கு ஒருவித வேலையும் ஓடவில்லை. காலையில் மெல்லவே எழுந்தான். மரக் கிளைகளை வெட்டும் வேலையை அன்று அவனிடம் ஒப்படைத்திருந்னர். கையிலே கூர்மையான அரிவாள். அவன் அதை ஒரு முறைக்கு இருமுறை திருப்பிப் பார்த்தான். மேலும் கூர்மையாக்குவதற்கு அருகேயிருந்த பாறையில் தீட்டினான். கிளைகளை வெட்டுவதுபோல் பாவனை செய்தான். வெட்டிக் கீழே வீழ்ந்த கிளைகளை மேலும் துண்டு துண்டாக வெட்டுவதன் மூலம், வேலை செய்வதுபோல் நடித்தான்.

சிறைக் காவல்காரர்கள் பொதுவாகக் கூனனின் பக்கமே வருவதில்லை. அவன் தோற்றத்தையும், அவன் முகத்தையும் காணவே அவர்களுக்குப் பிடிப்பதில்லை. மேலும், திடீரென அவன் தாக்கிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் வேறு. அதனால் கூனன் வேலை செய்வதுபோல் நடித்துக் கொண்டிருப்பதைக் காணாமலே போய்க் கொண்டிருந்தனர்.

பகல் உணவிற்காகக் கொடுக்கப்பட்ட கூழில் பாதியைக் குடித்துவிட்டு மீதியில் பாதியைத் தானே சட்டியில் ஊற்றி வைத்தான். பச்சை மிளகாய்களை ஒரு தனிச் சட்டியில் ஊறப் போட்டு வைத்திருந்தான். அதில் அன்று கொடுக்கப்பட்டிருந்த மிளகாய்களையும் போட்டுவிட்டான். மரம் வெட்டக் கொடுத்த அரிவாளைக் கொண்டு வந்து மறைத்து விட்டான்.

பகல் பொழுது கழிந்து இரவு வருவதற்குக் காத்திருந்தான். இரவு வந்தது. அவனைத் தனியே அடைத்து விட்டார்கள். அவன் கம்பிகளைப் பிடித்துக்கொண்டே நின்று கொண்டிருந்தான். இருளின் ஆட்சியுடன் அமைதியும் சேர்ந்து அங்கே ஒருவிதப் பயங்கரத்தை ஊட்டிக் கொண்டிருந்தன. சிறைச்சாலையின் ஓர் கோடியில் தண்டனை அனுபவிக்கும் குற்றவாளி ஒருவன் பாடிக் கொண்டிருந்தான். அந்த இனிய பாடல் கூனனின் மன அமைதியைத் தணித்து விடவில்லை. ஒருவிதப் பரபரப்பு அவனுக்கே புரியாமல் காலைமுதல் எழுந்து கொண்டிருந்தது. முதல் நாள் இரவு தனது கதையைச் சிறைக் காவலனுக்குச் சொன்னதிலிருந்தே கூனனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. சகோதரியின் நினைவு அவனுக்கு வந்துவிட்டது. அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற கவலை வந்துவிட்டது. உடனே அவளைப் பார்க்க வேண்டும் போல் தோன்றியது.

சிறைக் காவலர் தலைவர் தன்னிடம் அன்பாகப் பழகுகிறரே அவரைக் கேட்டுப் பார்ப்போமா?

என்ன கேட்பது? "ஐயா, என் சோகக் கதையைக் கேட்டீர்கள். என் சகோதரியின் நிலை எப்படியிருக்கிறதோ! அவளைப் பார்த்து விட்டு மீண்டும் வந்து விடுகிறேன் ஐயா" என்று கேட்போமா?

காவலர் தலைவன் வந்து விட்டான். வழக்கம்போல் 'ஹிஹி' என்று சிரித்தான் கூனன்.

"என்ன கூனா, தூங்கவில்லை?" என்று காவல் தலைவன் கேட்டார். இன்று அவனுக்குக் கதை கேட்கும் உற்சாகமில்லை. தூங்கப் போக வேண்டும் என்ற துடிப்பு மிகுந்திருந்தது.

கூனன் தன் கோரிக்கையை அவனிடம்வெளியிட்டான். காவலன் சிரித்தார். 'ஹோ ஹோ' என்று சிரித்தார். "என்ன சொன்னாய் கூனா? போய்ப் பார்த்து விட்டுத் திரும்ப வந்து விடுகிறாயா?" என்று கேட்டு மீண்டும் சிரித்தார்.

கூனன், "ஐயா," என்று ஏதோ கேட்க எத்தனிக்கவும் அவர், "கூனா, அதைப்பற்றியே நினைக்காதே. உன்னுடன் நான் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தாலே எனக்கு ஆபத்து. நான் வேலையை இழந்து நடுத்தெருவில் நிற்பது உன் ஆசையா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! ஒரே ஓர் இரவு அனுமதி கொடுங்கள். நான் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பி விடுகிறேன்" என்று குழைந்தான் கூனன்.

தலைவருக்குக் கோபம் வந்தது. கூனனுடன் அனுதாபத்துடன் பழகியதால் ஏற்பட்ட விளைவு அவன் துணிந்து அவரிடமே வெளியே சென்று திரும்பிவர அனுமதி கேட்கிறான்!

கோபத்தை உடனே அவர் வெளிக்குக்காட்டவில்லை. "கூனா, உனக்குப் புத்தி குழம்பி விட்டதா? கோவூர் எங்கே? காஞ்சிபுரம் எங்கே? ஒரே இரவில் திரும்பி விடுவாயா? நடக்காத கதை" என்று மெல்லிய குரலில் கூறினார்.

"ஐயா, ஐயா! எனக்குத் துணிவு இருக்கிறது. நம்பிக்கை இருக்கிறது, என் சகோதரி நலமாயிருக்கிறாளா என்று பார்த்துவிட்டு ஓடோடி வந்து விடுகிறேன். அவளுக்கு ஒன்றும் நேரவில்லை என்ற நம்பிக்கை ஏற்பட்டால்தான் நான் நிம்மதியாயிருப்பேன்" என்று கெஞ்சினான்.

காவல்தலைவர் பெரிதாக சிரித்தார். ''நிம்மதியாம். நிம்மதி! சிறைக்குள் நிம்மதி வேறா? வீடேறிக் குதித்துஒரு பெரிய மனுஷனைக் கொலை செய்ய முற்பட்டாயே, அப்போதே இந்த அறிவு உனக்கு இருந்திருக்க வேண்டும்'' என்றார் அவர்.

கூனனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ''ஐயா, நீங்கள் கூடவா இப்படிச் சொல்கிறீர்கள். நான் யாரையும் கொலை செய்ய வேண்டும் என்று கனவில்கூட நினைத்தது கிடையாது. என் உயிருக்குயிரான சகோதரியின் மானத்தைக் காப்பாற்றவே அவ்வாறு செய்தேன். வழக்கை விசாரித்த நீதிபதி கூட குறிப்பிட்டாரே ஐயா! கொலை செய்ய முயன்ற குற்றத்திற்கு ஏழாண்டுகள் என்னைச் சிறையில் தள்ளியிருப்பார்கள், மூன்றாண்டுகள் மட்டும் என்று தண்டனை கொடுத்ததிலிருந்தே தெரிய வில்லையா?'' என்று கூனன் கூறி முடிப்பதற்குள் காவல் தலைவன் சீறினார்.

' ஏய், சிறிது இடம் கொடுத்தால் மேலே மேலே தாவு கிறாயே! உன்னுடன் பேசியதே தப்பு. உம் உள்ளே போய்த் தூங்கு. இனியும் உனது தவறான எண்ணத்தை விட்டு விடு'' என்று கோபமாகக் கூறி அந்த இடத்தை விட்டு நகர முற்பட்டான்.

''ஐயா, ஒரே ஒரு வார்த்தை. கேட்டுவிட்டு அப்புறம் உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்'' என்று கூற வாயெடுத் தவனை நோக்கி தலைவர் தன் கையிலிருந்த வேல் முனையைத் திருப்பி, ''ஏய், சொன்னால் கேட்க மாட்டாய்? இப்படியே குத்திக் கிழித்து விடுவேன்; உம் போய்ப் படு'' என்று கூறி விட்டு, அங்கே நிற்காமல் போய் விட்டார்.

''ஐயா, ஐயா, இங்கே வாங்க. என்னைக் குத்திக் கிழித்து விட்டால் உங்களுக்கு அதனால் என்ன பலன்? மரண தண்டனைதான் கிடைக்கும். நிரபராதியைக் கொல்ல மாட்டார்கள் பல்லவ நாட்டில். இன்று மட்டும்

என்னை விட்டு விடுங்கள். ஐயா நான் திரும்பி வராமல் போனால் எனக்குத் தண்டனை மேலும் அதிகமாகிவிடும் என்று எனக்குத் தெரியும் ஐயா'' என்று கூவிய கூனன், கம்பியைப் பிடித்துப் பலமாக உலுக்கினான்.

மீண்டும் காவல் தலைவன் திரும்பி வந்தார். ' ஏய், கூனா! உனக்கு முதுகுதான் கூனல் என்றால் புத்தியும் கூனலா? உன்னிடம் நான் பேசியதே தவறாகப் போய் விட்டதே. என்னையும் சேர்த்து சிக்க வைத்துத் தண்டனை வாங்கிக் கொடுக்காமல் தூங்க மாட்டாய் போலிருக்கிறதே. நீ இப்போது வாயை மூடிக்கொண்டு தூங்கப் போகாவிடில், உன்னைப் பாதாளச் சிறையில் தள்ளிப் பூட்டிவிடச் சொல்லி விடுவேன். ஹூம்'' என்று சீறிப் பாய்ந்து விட்டுச் சென்று விட்டார்.

கூனன், கம்பிகளில் தலையை மோதிக் கொண்டே சிந்தித்தான். ''ஆமாம், காவல், தலைவருக்கு நம்மால் தொல்லையும் வந்துவிடக் கூடாது. பாதாளச் சிறைக்குள் போட்டுப் பூட்டி விட்டால் வெளி உலகத்தை என்றுமே பார்க்க முடியாது. நான் இவ்வாறு கூச்சல் போடக் கூடாது'' என்று சிந்தித்தவாறு மௌனமாயிருந்தான். சிறைக் கம்பிகளைப் பிடித்தவாறு நின்று கொண்டே யிருந்தான். அவன் தீவிரமாக சிந்தித்தான். அவன் கூனன் தான். அழகற்றவன் தான். ஆனால் அறிவற்றவனல்ல. அவன் சிநதனை மிக வேகமாக இயங்கியது.

எவ்வளவு நேரம் அவ்வாறு இருந்திருப்பானோ தெரியாது. மீண்டும் காவல்தலைவன் அங்கே வந்து கதவுக் கம்பியைத் தட்டி, ''கூனா, இன்னுமா அப்படியே நிற்கிறாய்? மனத்தை மாற்றிக் கொள்ளவில்லையா?'' என்று கேட்டார்.

திடுக்கிட்ட கூனன் ''ஐயா என்னைப் பொறுத்தருளுங்கள். தங்களுக்கு ஆபத்து நேரும் என்பதை அறிந்துகொள்ளாமல் அப்படிக் கேட்டுவிட்டேன்'' என்று வருத்தத்துடன் கூறினான்.

காவல்தலைவனுக்கு மகிழ்ச்சிதான். "கூனா, நான் உன்னை வேல் கம்பினால் தாக்க முற்பட்டதைத் தவறாக நினைக்காதே. என் கடமை அது. யாரும் கடமையிலிருந்து தவறக் கூடாது. உம்; நீ தூங்காவிடில் நான் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன். இரவில் கண் விழித்திருப்பதால் காலையில் எந்த வேலையும், உன்னால் செய்ய முடிவதில்லை. மரக்கிளைகளைப் பாதிகூட வெட்டவில்லையாமே?" என்றார் தலைவன்.

கூனனுக்கு அப்போதுதான் நினைவிற்கு வந்தது, மரம் வெட்டும் அரிவாள் தன்னிடமே இருப்பது.

"ஐயா, நாளை நான் எல்லாவற்றையும் வெட்டிவிடுவேன். எனக்கு ஓர் உதவி செய்யுங்கள்" என்று பேச்சைத் தொடங்கினான்.

தலைவன் பரபரப்புடன், "உதவியா—பேச்சே எடுக்காதே" என்று கூறிவிட்டார்.

"ஐயாவுக்கு என்மீது ஒரே நாளில் கருணை மறைந்துவிட்டது. குடிக்கத் தண்ணீர் கொடுங்கள் ஐயா! அநத உதவியைத் தான் கேட்கிறேன். தண்ணீர் கொடுப்பதால் வேலையைவிட்டு நீக்கிவிட மாட்டார்களே?" என்றான் சிரிப்பும், சோகமும் கலந்த குரலில்.

"கோணல் புத்தி உனக்கு இன்னும் போகவில்லை. பொழுது சாய்ந்தபிறகு ஒன்றுமே நாங்கள் தரக்கூடாது. குற்றவாளிகளுடன் பேசவும் கூடாது" என்று அழுத்தமாக கூறினார். என்றாலும் அவருள்ளத்தில் பரிதாப உணர்ச்சி இல்லாமல் போய்விடவில்லை.

"ஐயா, ஐயா, கொஞ்சம் கருணை காட்டுங்கள்" என்று கெஞ்சினான் கூனன்.

காவல் தலைவன் ஒன்றும் பேசாமல் சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கலயத்தில் தண்ணீர் கொண்டு

வந்தார் கலயத்துடன் அவர் திரும்பி வருவதைக் கண்ட கூனன் குதூகலத்துடன், "ஐயாவுக்கு எப்போதுமே தங்க மனசு, நீதிமான், தர்மப்பிரபு, தவறுகண்டால் சீறுவார்; தன்மையான உள்ளம் எப்போதும் உண்டு. நான் என் சகோதரியைப் பார்ப்பதென்ற எண்ணத்தையே மறந்து விட்டேன்" என்றான்.

காவல் தலைவன் ஏதும் பேசவில்லை "உஸ். குரலை அடக்கிப் பேசடா முட்டாள். யார் காதிலாவது விழுந்து விட்டால் வந்தது ஆபத்து. இந்தா தண்ணீரைக் குடித்து விட்டுக் கலயத்தைத் திருப்பிக் கொடு" என்றார்.

கூனன் சற்றுத் தயங்கினான். கலயத்தைத் திருப்பித் தருவதில் அவனுக்கு இஷ்டமில்லை. என்றாலும், காவல் தலைவனை எதிர்த்து ஏதும் பேசக்கூடாது என்ற எண்ணத்தில், "சரிங்க..." என்று தலையசைத்து தண்ணீரை ஒரே மூச்சில் குடித்தான். கலயத்தைத்திருப்பித் தந்தான் காவல் தலைவன் மீண்டும் சிறைக் கதவைப் பூட்டிக் கொண்டு சென்றார்.

கூனன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல் படுத்து உறங்க ஆரம்பித்தான். பொழுது விடிந்தது. ஒன்றும் தெரியாத, முதல்நாள் ஏதும் நடைபெறாத நல்ல பிள்ளை போல் எழுந்து, மரம் வெட்டுவதற்குச் சென்றான். சுறுசுறுப்பாக செயலாற்றினான். பாதிமரம் வெட்டப்பட்டது. அவன் ஓர் குட்டி அரக்கன் போல் வேலை செய்வதை சிறைக் கூடத்துக் காவல்காரர்கள் ஒவ்வொருவராக வந்து பார்த்துச் சென்றனர். வியர்வை ஆறாக வழிய, சற்றும் ஓய்வு எடுக்காமல் அவன் வேலை செய்வதைப் பார்த்துச் சிலர் வியந்தனர், சிலர் அனுதாபப் பட்டனர். பகல் உணவு அவனுக்குச் சற்றுக் கூடுதலாகக் கிடைத்தது.

உணவுப் பரிமாற வந்த பரிசாரகனிடம் கூனன் மிகப் பணிவுடன் கேட்டான்: "ஐயா, கோபிக்காதீர்கள். இன்று

மாலை எனக்குக்கூடுதலாகக் கூழ்தருமாறு வேண்டுகிறேன். அதனுடன் மிளகாய் ஒன்றிரண்டு அதிகமாகத் தரவும்பணிவுடன் வேண்டுகிறேன்'' என்றான்.

பரிசாரகருடன் இருந்த காவல்காரன் ஒருவன் கூனனிடம் அனுதாபம் கொண்டவன்.

''அதிகம் கூழ் தரச் சொல்கிறேன். மிளகாய் எதற்கப்பா?'' என்றான்.

''அதுதாங்க...கொஞ்சம் உப்பும் உறைப்புமாக இருந்தால் மேலும் சுறுசுறுப்பாக நாளைக்கு வேலைசெய்வேன். அதற்காகத்தான்'' என்றான்.

''அப்படியெல்லாம் நானே தரக்கூடாது' தலைவரைக் கேட்டுச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டான். சிறிது நேரம் கழித்து வந்த அந்தக்காவல்காரன் ''கூனா, நீ அதிர்ஷ்டசாலி. தலைவரிடம், நீ கேட்டுக் கொண்டதைச் சொன்னேன். அவருக்குத்தான் உன் மீது எத்தகைய அனுதாபம்! காரமாக வேண்டும் என்றாய் அல்லவா? மிளகாய் கிடைக்கவில்லை. மிளகாய்ப்பொடி கொடுக்கச் சொன்னார். இந்தா...'' என்று கூறி மிளகாய்ப் பொடிப் பொட்டலத்தைக் கொடுத்தான்.

கடந்த மூன்று நாட்களைப் போன்றே இரவு வந்தது. வழக்கத்தைவிட இருளுக்குக் கருமை இன்னும் அழுத்தமாக இருந்ததைப் போல் தோன்றியது. இரவில் கூடடைந்து இடையிடையே விழித்தெழுந்து கூச்சலிடும் பறவைகள் கூட மௌனமாக இருப்பது போல் தோன்றியது. வானத்தே நட்சத்திரங்களைக் காணவில்லை.

சிறைக் கொட்டடிகள், தனி அறைகள் எல்லாம் இழுத்துப் பூட்டப்படும் ஓசை கேட்டது. கையில் தீவர்த்தி ஒளியுடன் சிறைக் காவல்காரர்கள் ஒவ்வோரிடமாகச் சரி

பார்த்து வரும்போது அவர்களுடைய நிழல் சுவரின்மீது வீழ்ந்து பயங்கரத்தை அளித்தது.

கூனன் வழக்கம்போல் சிறைக் கதவின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். அவனை இன்றும் பாராட்டிச் சென்றவர் பலர். பாராட்டுதல்கள் ஏதும் அவன் செவிகளில் விழவில்லை. அவன் சிந்தனை காஞ்சியிலேயே லயித்திருந்தது.

வழக்கம் போல் காவல் தலைவர் மெல்ல நடந்து வந்தார்.

''இன்று நீ உறங்கியிருப்பாய் என்று நினைத்தே வந்தேன். பகலில் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறாய் என்று எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்'' என்று புகழுரை கூறிக் கொண்டே கூனன் எதிரே நின்றார். கம்பிகள் மட்டுமே இடைவெளி. கூனன் 'ஹி ஹி' என்று சிரித்தான்.

''நேற்று நான் சரிவர வேலை செய்யவில்லை என்று குறை கூறினீர்கள். அதனால் இன்று ஓய்வே இல்லாமல் உழைத்தேன்'' என்றான்.

''அப்படியென்றால் நீ நன்றாக தூங்கியிருக்கவேண்டுமே!''—காவல் தலைவன் கேட்டார்.

''தூக்கம்...'' என்று அலட்சியமாகக் கூறிய கூனன், ''சாமி, அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை, நேற்று நான் தூங்கவேயில்லை. இன்று நான் வேலை செய்யவில்லையா?'' என்று கேட்டான்.

தலைவன் வியப்புடன், ''அப்படியா? நேற்றுத் தூங்கவில்லையா? அப்பா, நீ பெரிய அசுரன்தான்'' என்றார்.

''அசுரனாயிருந்து என்ன பிரயோஜனம்? என் சகோதரியைக் காப்பாற்ற முடியவில்லையே'' என்று குறைபட்டுக் கொண்டான்.

''பார்த்தாயா, உடனே உன் சகோதரியைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டாய். உன் சகோதரிக்கு ஒருவித ஆபத்தும் நேர்ந்திருக்காது'' என்றார் காவல் தலைவன்.

கூனன் ஏதும் பேசவில்லை. பிறகு, ''அதெப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று அழுத்தமாகக் கேட்டான்.

''ஆமாம், உறுதியாகக் கூறுகிறேன். இது யாருடைய சாம்ராஜ்யம்? பரமேச்வர சக்ரவர்த்தி ஆட்சிபுரிகிறார் என்பதை மறந்து விட்டாயா? அவரது ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கு ஒரு துன்பமும் வராது; அதனால்தான் உறுதியாகச் சொன்னேன்'' என்றான்.

கூனன் 'ஹி ஹி ஹி' என்று சிரித்தான். பிறகு ''என் சகோதரியை, மாற்றான் மனைவியை விரும்பிக்கேட்ட கயவன் இன்னும் நமது சக்ரவர்த்தியின் காலத்தில்தான் சாமி உயிரோடு இருக்கிறான்'' என்று கோபத்துடன் கூறினான்.

''சக்ரவர்த்திக்குத் தெரிந்திருக்காது'' என்றார் தலைவர்.

''நான் ஏன் தெரிவிக்கக்கூடாது?'' என்று கூனன் கேட்டவுடன், காவல்தலைவன் கோபத்துடன், ''அதை நீ முன்பே செய்திருக்க வேண்டும். சட்டத்தை, உன் கையில் எடுத்துக்கொண்டு, வீட்டின் சுவரேறிக் குதித்து அவரைக் கொலை செய்ய முயன்றாயே; செய்யலாமா?'' என்று கூறினார்.

கூனனால் மறுமொழி கூற முடியவில்லை. காவல் தலைவன் நகர முற்பட்டார்

''சாமி, கோபிக்காதீங்க; ஏதோ அறியாமையால் பேசி விட்டேன்'' என்றான்.

காவல்தலைவன் திரும்பினான். அவனுக்குக் கூனன் மீது பரிதாபம் ஏற்பட்டது.

"கூனா, உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். 'சகோதரி, சகோதரி' என்று எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டு உடலை வருத்திக் கொள்ளாதே. சிறையிலிருந்து விடுதலையடைந்தவுடன், நேரே ஓடிப்போய்ப் பார் உன் சகோதரியை. யார் தடுக்கப் போகிறார்கள்?" என்று சமாதானப்படுத்துபவர்போல் கூறினார்.

"இப்போதே ஓடிப் போகிறேன்" என்றான் கூனன், முணுமுணுத்தவாறு.

"என்ன சொல்கிறாய்?" என்று காவல் தலைவன் கேட்டான்.

"வேறு என்ன சொல்வேன்? தண்ணீர் வேண்டும். பச்சை மிளகாய் கேட்டால் பச்சை மிளகாய்ப்பொடியைக் கொடுத்து விட்டான் உங்கள் உதவியாளன். நாக்கு, தொண்டை எல்லாம் எரிகிறது. கருணை கூர்ந்து ஒரு வாய்த் தண்ணீர் கொடுப்பீர்களா? இன்றுதான் கடைசி. இனி தொந்தரவு கொடுக்கமாட்டேன்" என்று குழைந்தான் கூனன்.

"தண்ணீர் கேட்பது ஒன்றும் தொந்தரவு இல்லை கூனா. தவித்தவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் புண்ணியம். ஆனால் குற்றவாளிகளுக்கு அப்படி உதவக் கூடாது. உதவினால் என் வேலை போய்விடும். அதனால்தான் பார்க்கிறேன். இதோ போய்த் தண்ணீர் கொண்டு வருகிறேன்" என்று கூறி தலைவன் விரைந்தான்.

கூனனின் உள்ளம் படபடத்தது. அவன் பொறுமை இழந்து தவித்துக் கொண்டிருந்தான். கம்பியைப்பிடித்து உலுக்கினான். அந்தச் சிறு அறையினுள் புலியைப் போல் இங்குமங்கும் பரபரப்புடன் உலவினான். தரையினின்று எம்பிக் குதித்தான்.

"கூனா" என்ற குரல் கேட்டது, தலைமை காவல் காரன் கலயத்தில் தண்ணீர் கொண்டுவந்து குரல் கொடுத்தார்.

கூனன் ஒரு மூலையில் அமைதியாக நின்றுகொண்டிருந்தான். "கூனா, தூங்கப் போய்விட்டாயா?" என்று கேட்ட காவல்தலைவன் தவறு ஒன்று செய்தான். தன் கடமையை மறந்தான். கதவைத் திறவுகோல் கொண்டு திறந்தான்.

"கூனா, இந்தா தண்ணீர்" என்று கூறிக்கொண்டே உள்ளே வரவும், கூனன் கையில் வைத்திருந்த கலயத்தில் இருந்த தண்ணீரைத் தலைவன் முகத்தில் வீசவும் சரியாக இருந்தது.

கூனன் சில நாட்களாகவே ஒரு பெரிய மண் பானையில் தனக்குக் கொடுக்கும் கூழில் சிறிது சேமித்து வைத்திருந்தான். அதில் பச்சை மிளகாயை ஊறப் போட்டிருந்தான். காலையில் கிடைத்த மிளகாய்ப் பொடியையும் அதில் கொட்டிக் கலக்கி விட்டான்.

எல்லாம் கலந்த அந்தக் கூழ் காவல்தலைவன்முகத்தில் பசையைப்போல் பிடித்தது. மிளகாய்ப் பொடி கண்களில் பட்டு கண்களில் மிகுந்த எரிச்சலை ஊட்டியது.

வாய்விட்டு அலற முடியாமல் இருக்க காவல் தலைவனின் தலைப்பாகையை அவிழ்த்து அந்தத் துணியைக் கிழித்து நொடியில் வாயில் அடைத்தான். ஒரு பகுதியைக் கொண்டு கையிரண்டையும் சேர்த்துக் கட்டினான் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். பதுங்கிப் பதுங்கி நடந்தான். காலையிலேயே திட்டமிட்டிருந்தபடி மரத்தின்மீது தாவி ஏறி மதில்மீது தாவி, அங்கே கட்டப்பட்டிருந்த கயிறைப் பிடித்துக்கொண்டு கீழே குதித்தான்.

ஒரே ஓட்டம். இருள் என்று பார்க்கவில்லை. முள் என்று பார்க்கவில்லை. கல் என்று பார்க்கவில்லை. எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பதையெல்லாம் சில நாட்களாகத் தெரிந்து வைத்திருந்ததைக் கொண்டு ஓடினான், ஓடினான், களைப்பு ஏற்படும் வரையில்

காஞ்சிக் கோட்டைக்கு வெளியே தாமரைக்குளம் கிராமத்தை அவன் அடையும்போது விடிந்து ஐந்து நாழிகையாகி விட்டது. தாமரைக் குளத்தில் தன் சகோதரியின் கணவர் பெயரைச்சொல்லி விசாரித்தபோது அவனுக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

7

கிராமத் தலைவர் கூறிய செய்தி கூனனைத் திடுக்கிட வைத்தது.

காஞ்சியில் கூனன் அந்தச் செல்வந்தர் வீட்டில் சுவரேறிக் குதித்து அவரைப் படுகாயப்படுத்திய மறுநாள் காலை, கூனனின் சகோதரியின் கணவர் கொலை செய்யப் பட்டார்.

தாமரைக் குளத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது நடுநிசிக்கு மேலாகிவிட்டது. களைப்பால் அவர்கள்படுத்த உடனேயே உறங்கத் தலைப்பட்டனர். பொழுதுவிடியும் சமயத்தில்,அந்த வீட்டிலிருந்து பலத்த கூக்குரல்கேட்டது.

அண்டை அயலார்கள் ஓடி வந்துப் பார்த்தபோது அந்த வீட்டில் கூனனின் சகோதரியின் கணவன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவர் குப்புறக் கிடந்தார். முதுகைப் பிளந்து கொண்டு ஈட்டியொன்று பாய்ந்திருந்தது.

கூனன் இந்தச் செய்திகேட்டு ஓவென்றலறிவிட்டான். ''ஐயோ, அக்கா இந்தச் செய்தி கேட்பதற்கா நான் கல்லும், முள்ளும் பாராமல் காரிருள் பாராமல் ஓடி வந்தேன்'' என்று ஓலமிட்டான்.

ஊர்த் தலைவர் அவனை அமைதிப்படுத்தினார். அவனது அழகற்ற தோற்றத்துக்குள் புதைந்திருக்கும் பாச உணர்ச்சி அவரை நெகிழ வைத்தது

"உன் சகோதரியின் கணவராப்பா அவர்"' என்று கேட்டார் ஊர்த்தலைவர்.

"ஆமாம், ஐயா. என் சகோதரி எங்கே ஐயா?" என்று கூனன் பரபரப்புடன் கேட்டான்.

"சகோதரியா? நாங்கள் உன் சகோதரியைப் பார்க்கவில்லை. பிறகுதான் தெரிந்தது, கொலை செய்த பாதகர்கள் பெண் ஒருத்தியைக் கவர்ந்து தூக்கிச் சென்று விட்டனர் என்பது" என்று சோகம் நிறைந்த குரலில் கூறினார் தலைவர்.

கூனன் ஹோ என்றலறினான். "என்ன சொன்னீர்கள்?" என்று அவன் கூவிய குரல் கேட்டு அருகேயிருந்தவர்கள் ஓடோடி வந்தனர்.

"என் சகோதரி சொல்லியபடியே நடந்துவிட்டது. என் அத்தானைக் கொலை செய்து என் சகோதரியையும் அபகரித்துப் போய்விட்டனர். இங்கே என்ன பல்லவ மகாராஜாவின் ஆட்சி நடைபெறுகிறதா இல்லையா? பல்லவ நாட்டு மக்கள் மாற்றான் மனைவி மீது ஆசைப்படுவதும் அவளைக் கவர்ந்து செல்வதும்தான் தங்கள் அன்றாடப் பணி என்று நினைத்து விட்டார்களா? கொலை செய்தவனை நீங்கள் கண்டுபிடிக்கவில்லையா? கிராமக் காவல்காரர்கள் என்ன செய்தார்கள்:" என்று அவன் வேதனை நிறைந்த குரலில் புலம்பினான். கேள்விமேல் கேள்வி கேட்டான்.

அவனுக்கிருந்தஆத்திரத்தில் அங்கிருப்பவர்கள் அனைவரையும் காலைப் பிடித்துக் 'கரகர'வெனச் சுழற்றிப் பூமியில் போட்டு கதிரை அடிப்பதுபோல் அடித்துவிட வேண்டும் என்று தோன்றியது.

"ஐயோ, அக்கா நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? உங்களைக் கொண்டு சென்ற பாதகன் உங்களை எங்கே மறைத்து வைத்திருக்கிறான். அவன் ராவணேச்வரனாயிருந்தால் கூட நான் பயப்பட மாட்டேன். ஐயா, நீங்களும் சகோதரிகளுடன் பிறந்தவர்கள்தாமே? என் சகோதரியைத் தூக்கிச் செல்வதை எப்படி ஐயா அனுமதித்தீர்கள்! அவர்களைப் பின் தொடர்ந்து செல்லும் எண்ணங்கூடத் தங்களுக்குத் தோன்றவில்லையா?" என்று புலம்பினான்.

தலையைச் சுவரில் மோதிக் கொண்டான். மண்ணில் வீழ்ந்து புரண்டான்.

"பல்லவ நாட்டு மக்கள் இப்படிப்பட்ட இழி காரியத்தையா செய்யத் துணிந்து விட்டார்கள்?" என்று கேட்டுத் தலைவரின் தோள்களைப் பிடித்து உலுக்கினான்.

ஊர்த் தலைவர் அமைதியானவர். அவர் புன்முறுவலுடன், "தம்பி, உனக்கு நேர்ந்த வருத்தம் எனக்குப் புரிகிறது உன் நிலையில் யார் இருந்தாலும் இப்படிதான் புலம்புவார்கள். பல்லவ நாட்டு மக்கள் இப்படிப்பட்ட இழி காரியத்தைச் செய்ய மாட்டார்கள். உன் சகோதரியின் கணவரைக் கொன்றவர்கள் நம் நாட்டவர்களல்லர். அந்த ஈட்டியின் பிடியில் வராஹ சின்னம் இருந்தது" என்று கூறி நிறுத்தினார்.

தம்பி என்றழைத்தவுடனேயே கூனன் நெகிழ்ந்து விட்டான். இதுவரை அவனைக் கூனன், குறுங்கழுத்தன் குள்ளன் என்றே இழிவாக அனைவரும் அழைத்து வந்தனர். ஊர்த் தலைவர் அன்பு ஒழுக 'தம்பி' என்றழைத்தவுடன் அவன் சீற்றம் தணிந்தது.

ஈட்டியின் அடிப்பாகத்தில் வராஹ உருவம் பொறித்திருந்தது. வராஹ உருவம் என்றால்?

"வராஹமா?" என்று கூனன் கேட்டான்.

"ஆம்; தம்பி! சாளுக்கியச் சதிகாரர்களின் சேஷ்டை தம்பி! உனக்குத் தெரியாதா, சாளுக்கியர்ப் படைகள் காஞ்சியை நோக்கி வருகின்றன. அதற்கு முன்பே வாதாபி யினின்றுசாளுக்கிய ஒற்றர்கள் காஞ்சி நகரத்தில் ஊடுருவி யிருந்தனர் அவர்களின் கைவரிசைதான் உன் சகோதரி களவாடப்பட்டது" என்றார்.

கூனனுக்கு அவருடைய சமாதானம் சரியாகப்பட வில்லை.

"வாதாபியினின்று படை வருகிறதென்றால் நீங்கள் ஏன் இப்படி மெத்தனமாக இருக்கிறீர்கள்! காஞ்சி நகர மும் என் சகோதரிபோல் அனாதையா? கேட்பவர் கிடை யாதா? 'எதிரிகள் அதை அபகரித்து விடவேண்டும் என்பதுதான் தங்கள் எண்ணமா? பல்லவ சக்ரவர்த்தி' பரமேச்வர வர்மரைக் கண்டால் தங்களுக்குப் பிடிக்கவில் லையா? பெண்களைக் கவர்ந்து செல்லும் நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி, பரமேச்வர வர்மருக்கு அவப் பெயரை ஏற் படுத்த நினைத்த நீங்கள், காஞ்சி நகரையே பலி கொடுத்துவிட முடிவு செய்து விட்டீர்களா?வாதாபியின் படைகள் வருகின்றன என்றால் நீங்கள் ஏன் இங்கேயே தங்கியிருக்கிறீர்கள்? வாதாபிப் படைகள் உங்களைவிட்டு வைத்து விடும் என்ற எண்ணமா?" என்று கூனன், சர மாரியாக ஊர்த் தலைவரைப் பார்த்துக் கேட்டான்; அதற்குள் கிராம மக்கள் பலர் அங்கே கூடி விட்டனர். அவர்கள் போரைப் பற்றிக் கவலைப்பட்டவர்களாகத் தெரியவில்லை. வீட்டுக்கு ஒரு ஆள் பல்லவர்ப்படையில் சேரக் கொடுத்துவிட்டதுடன் தங்கள் பொறுப்பு நீங்கி யது என்று தத்தம் வேலைகளைக் கவனிக்கலாயினர். அவர்களில் பாதிப்பேருக்கு மேல் நெசவாளிகள். மீதிப் பேர் உழவர்கள், சிறுதொழில் செய்வோர். உழைக்கா மல் பிழைப்பவர் ஒருவருமில்லை. அதனால் அவர்கள் தத்தம் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள், நாட்டைக் காக்கும் பணியை அரசரிடம் விட்டு விட்டார் கள்.

கூனன் பேசி முடித்தவுடன் சற்று வயதான ஒருவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மறுமொழி சொல்ல வந்தார்

''தம்பி, உனக்கு வயசு போதாது. அதனால் அநுபவமும் குறைவுதான். வாதாபிப் படைகளைக் கண்டு நாய்கள் ஏன் பயப்பட வேண்டும். அவர்கள் இங்கே வரும் வரையில் நமது வீரர்கள் சும்மாயிருக்க மாட்டார்கள். அதனால் கவலைப்படவே தேவையில்லை. உன் சகோதரியைத் தூக்கிப்போனது சொநத விரோதம் தம் காரணமாயிருக்கலாம். அழகாயிருப்பதிலும் ஆபத்து இருக்கிறது. உன் அத்தான் மாணிக்கத்திற்கும், காஞ்சிபுரம் நல்ல தம்பிக்கும் சொந்த விரோதமிருக்கிறது என்று அவர் கூறி வரும்போது கூனன் குறுக்கிட்டு, ''பெரியவரே, உங்களுக்கே தெரிந்திருக்கிறது. நல்லதம்பி தான் என் அத்தானைக் கொலை செய்தார் என்று. என் சகோதரியையும் அவர்தானே தூக்கிச் சென்றிருக்க வேண்டும். அதில் கூட சொந்த விரோதமிருக்கிறதா? ஒரு பெண்ணைத் தூக்கிச் செல்வதைச் சொந்த விவகாரம் என்று சும்மா விட்டுவிடுவது நியாயமா?'' என்று கேட்டவுடன் பெரியவரால் உடனே மறுமொழி கூற முடியவில்லை.

கூடியிருந்தவர்கள் ஆளுக்கொன்று பேச ஆரம்பித்தார்கள். பேச்சு, கூச்சலாயிற்று. ஊர்த் தலைவர் கையசைத்து அமைதியை நிலைநாட்டி, ''இங்கே பாருங்க! நாம் இப்போது இப்படி கூச்சலிட்டுப் பேசி என்ன பலன்? குற்றம் நடந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது, பஞ்சாயததுக்கூடி நாம் வழக்கைப் பற்றி ஏதும் முடிவு செய்யவில்லை. கூனன் கேட்பதிலும் நியாயமிருக்கிறது, சொந்த விரோதமோ என்னவோ ஓர் உயிரைப் பறிக்கும் உரிமை மற்றவருக்கில்லை. அதிலும் பெண்ணைத் தூக்கிப் போனதை நாம் சகிக்க முடியாது. கொலையுண்ட மாணிக்கத்திற்கு உறவினர் யாருமில்லை என்ற எண்ணத்தில் வழக்கைப் பற்றி மேற்

கொண்டு ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை. நம் ஊருக்கு அது ஒரு களங்கம்தான். இப்போது கூனன் வந்திருக்கிறான், நாம் சபை கூடுவோம். ஓர் முடிவு எடுப்போம்'' என்றார்

கூடியிருந்தவர்கள் அவரது முடிவை ஆமோதித்தனர். ''நாளைக்கு ஊர் அரசமர மேடையில் கூடுவோம்'' என்றார் ஊர்த் தலைவர். அனைவரும் சம்மதித்தனர்

கூனன் கூட்டத்தினரை ஒருமுறை உற்று நோக்கினான். இரவெல்லாம் கண் விழித்து ஓடி வந்தது, பசி. சிறையிலிருந்து தப்பி ஓடிவந்த பயம் எல்லாம் சேர்ந்து அவன் முகத்தில் பயங்கரத்தை ஊட்டியிருந்தன அடுத்து என்ன செய்வது என்ற அச்சம் அவனை அங்கே ஒரு நொடி கூட நிற்க விடாமல் செய்தன.

''இங்கே பாருங்க பெரியவர்களே! நீங்க சபை கூட்டி என்ன செய்யப் போகிறீர்கள்? இறந்துபோன என் அத்தானின் உயிரை மீட்டுத் தரப் போகிறீர்களா? காணாமற் போன என் சகோதரியைக் கண்டுபிடித்துக் காப்பாற்றப் போகிறீர்களா? அதுவரை நான் இங்கே இருக்க வேண்டுமா? நான் போய் வருகிறேன் பெரியவர்களே!'' என்று குரல் தழுதழுக்கப் பேசி விட்டுத் திரும்பிக் கூடப் பாராமல் புறப்பட்டான்.

கூட்டத்தினர் ஏதும் புரியாமல், பேசாமல் நின்றனர்.

எங்கே செல்ல வேண்டும் என்றே தோன்றாமல்கூனன் வேகவேகமாக நடக்கஆரம்பித்தான். மீண்டும் காஞ்சிக்குச் செல்வது அவன் எண்ணமாயிருந்திருக்கலாம்.

ஏரிக்கரையோரமாகச் சென்று கொண்டிருந்தபோது சிறுவன் ஒருவன் ஓடோடி வந்தான் ''கூனா, கூனா'' என்று அவன் கூப்பிட்டவாறு ஓடிவருவது கூனன் காதில் விழுந்தும் அவன் நிற்கவில்லை. சிறுவர்கள் கூனனை ஒரு விளையாட்டுப் பொருளாக நினைப்பர்.

'கூனா, குள்ளா' என்று கேலியாக அழைப்பர். சிறுகல் எடுத்து அவன்மீது வீசுவர். அது போன்று சிறுவன் ஒருவன் வேடிக்கைக்கு அழைக்கிறான் என்ற எண்ணத்தில் திரும்பிப் பாராமல் சென்று கொண்டிருந்தான் கூனன்.

சிறுவன் ஓடிவந்து கூனனின் முன்பாக நின்றான். ''கூப்படுகிறேன், கூப்பிடுகிறேன் காதில் விழவில்லையோ தங்களுக்கு?'' என்று சிறுவன் மரியாதையாக அழைத்த பிறகுதான் கூனன் நின்றான். மரியாதையாக அழைத்த சிறுவனிடம் அவனுக்குப் பிரியம் ஏற்பட்டது.

''என்ன குழந்தே!'' என்று அவன் சிறுவனைநோக்கிக் கேட்டான்.

''கொஞ்சம் இப்படியே நில்லுங்க. எங்க அப்பா உங்கயிடம் பேச வந்து கொண்டிருக்கிறார்'' என்றான்.

''அப்பாவா? நீ யார்?'' என்று கூனன் கேட்டான். சிறுவனின் முகத்தைப் பார்த்தவுடனேயேஅவனுக்குப் பசி, தாகம் மறந்து விட்டது.

''அதெல்லாம் அப்பா சொல்வார். அவரு வந்து கொண்டே யிருக்காரு. நீங்க இப்படி மரத்தடியில் நில்லுங்க'' என்றான் சிறுவன்.

என்னைத் தேடிவருவதற்கு இந்த ஊரில் ஒருவர் இருக்கிறாரா? என்ற எண்ணத்தில் கூனன் சற்று நின்றான். தொலைவில் யாரோ ஒருவர் வருவது தெரிந்தது.

கூனனுக்குக் களைப்பு இப்போதுதான் தெரிந்தது.

'தம்பி, கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து தருகிறாயா?'' என்று கேட்டான்.

''அப்பா, கொண்டு வராரு'' என்று சிறுவன் கூறியவுடன், கூனனுக்கு வியப்புத் தாங்கவில்லை. தன்னிடம்

பேச, குடிக்க நீருடன் ஒருவர் வருகிறார்; ஆகா; கடவுள் நம் பக்கமிருக்கிறார் என்று நினைத்துக் கூனன் நின்றான்.

வயது முதிர்ந்த ஒருவர் கலயம் ஒன்றை எடுத்துக் கொண்டு கூனன் அருகே வநதார்.

அவரைப் பார்த்தவுடனேயே கூனனுக்குக் கண்களில் நீர் தளும்பியது. வயது முதிர்ந்தவரை இப்படிச் சிரமப் படுத்துகிறோமே என்று நினைத்தான். தனக்கே இயற்கை யான ‘ஹி ஹி’ என்ற சிரிப்பை உகுத்தான்.

“தம்பி, உன் சகோதரி இந்தக் கிராமத்திற்கு வந்தது எனக்குத் தெரியும். நானும் பல்லவர்கள் படையில் பல ஆண்டுகள் பணியாற்றியவன். வயது முதிர்ந்து, கத்தி பிடிக்க முடியாமல் ஒருவித நடுக்கம் ஏற்பட்டு விட்டபடி யால் நான் காஞ்சி பக்கமே போகவில்லை. உன் சகோதரி யின் கணவர் மாணிக்கத்தை, எனக்குத் தெரியும். இந்த ஊருக்கு வந்தவுடனேயே அவருக்கு நான் வேண்டியதைச் செய்ய முன் வநதேன்.

ஒருநாள் இரவு பயங்கரமான கூக்குரல் கேட்டது.அது நொடியில் அடங்கி விட்டது. நான் அருகேயுள்ள வைக்கோல் போர் அருகேதான் படுத்திருப்பேன். எனக்கு அடையாளம் தெரிந்துவிட்டது. நல்லதம்பியின் ஆட்கள் தான் உன் சகோதரியின் கணவரைக் கொன்றனர். அவர் களுக்கும் சாளுக்கியர்களுக்கும் மறைமுகத் தொடர்பு உண்டு.

உன் சகோதரியையும் வாயில் துணியடைத்து கை கால்களைக் கட்டித் தூக்கிச் சென்றுவிட்டனர். கடிகா சலத்தில் அவர்கள் உன் சகோதரியை அடைத்து வைத் திருப்பார்கள். இதைச் சொல்லத்தான் நான் வந்தேன். உன்னைப் பார்த்தால் மிகப் பசியுடன் இருப்பதாகத் தெரிந்தது. கஞ்சியை எடுத்துக் கொண்டு ஓடோடி வருகிறேன்” என்றார்.

கூனன் கஞ்சியை வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு, ''கடிகாசலம் எங்கேயிருக்கிறது?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

பெரியவர் வழியைச் சொன்னார். கூனன் நன்றி சொல்லக்கூடத் தோன்றாமல் அவர் கூறிய வழியை மனத்தில் கொண்டு ஓடினான், ஓடினான், களைப்பு ஏற்படும் வரை ஓடினான்.

8

கடிகாசலம் பெரிய குன்றின் அடிவாரத்தில் விளங்கும் ஊர். அங்கே வடமொழியும் தமிழும் கற்றுத்தரும் கல்விச் சாலைகள் (கடிகைகள்) பல இருந்தன. பலநாட்டு மாண வர்கள் அங்கு வந்து தர்க்கம், வியாகர்ணம் கற்று வந்தனர். பண்டைய தமிழ் நூல்களைக் கற்கச் சேரநாடு, பாண்டிய நாட்டினின்றும் மாணவர்கள் வந்திருநதனர். பல மொழி பேசும் மக்கள் அங்கே சேர்ந்து வாழ்ந்து வந்தனர்.

கூனன் அந்த ஊரையடையும்போது நன்றாக இருட்டி விட்டது. சகோதரியைக் கண்டுபிடிக்க வேண்டும் எனும் ஒரே நோக்கத்தில் அவன் விரைந்து வந்ததால் உடலில் ஏற்பட்ட அசதியையும், வழியே முள்ளும் கல்லும் இடர்ப் படுத்தியதால் அடைந்த துன்பங்களையும் பொருட்படுத்த வில்லை.

கடிகாசலத்தில் தன் சகோதரியை எங்கே காண்பான். ஒரு தடவை ஊரைச் சுற்றி வந்தான். பல நாட்களாகக் குளிக்காததால் அழுக்கேறிய ஆடையும் புழுதி படிந்த மேனியுமாக அவன் காட்சியளித்தான்.

அவனை ஊர்மக்கள் விசித்திரமாகப் பார்த்தனர். யாரையோ தேடி அலையும் அவனுடைய பார்வை மற்றவர்களுக்கும் சந்தேகத்தை அளித்தது

கடிகாசலத்துச் சத்திரத்தின் திண்ணையில் சோர்ந்து போய் உட்கார்ந்த கூனன் என்ன செய்வது என்று திகைத்தான். சத்திரத்தின் அருகே விளக்குக் கம்பம் ஒன்று இருந்தது. கருங்கல்லால் ஆன அந்த தீபஸ்தம்பத்தின்மீது எண்ணெய் ஊற்றி அணையாமல் இருக்க மண் அகல் ஒன்று பெரிதாக இருந்தது. விளக்கை ஏற்றக் கையில் ஏணியும் எண்ணெய்த் தூக்குடனும் வந்த விளக்கேற்று பவன் திண்ணையருகே யிருந்த படிக்கட்டுகளில் இளைப்பாறச் சற்று அமர்ந்தான்.

கூனனை வியப்புடன் நோக்கிய அவன் மெல்லப் பேச்சுக் கொடுத்தான். கூன் முதுகு விழுந்தவனாக இருந்தாலும் பலசாலியாக இருந்ததால் அவனை வேலைக்கு வைத்துக் கொள்ள எண்ணினான். கூனனுக்கு விளக்கேற்று பவனிடம் பேச்சுக் கொடுத்துத் தன் சகோதரியைப்பற்றி விசாரித்தறிய ஆவல். இருவரும் ஒருவரையொருவர் சிறிது நேரம் பார்த்துக் கொண்டனர்.

''எநத ஊரப்பா உனக்கு?'' விளக்கேற்றுபவன் கேட்டான்.

கூனன் 'ஹி ஹி ஹி' என்று சிரித்தான். ''எல்லா ஊரும் என்னுடையதுதான்'' என்றான்.

''அது தெரியுமப்பா, வேதாந்தம். நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டான்.

''காஞ்சியிலிருந்து.''

''காஞ்சிபுரத்திற்கு வேலை தேடி இங்கிருந்து செல்வது வழக்கம். நீயோ காஞ்சியிலிருந்து வருகிறாய். ஏன்?'' என்று விளக்கேற்றுபவன் கேட்டான்.

கூனன் மறுமொழி கூறவில்லை. 'ஹிஹி' என்று மீண்டும் சிரித்தான்.

''வேலை தேடி வந்தாயா?'' என்று கேட்டான் விளக்கேற்றுபவன். 'இல்லை'யென்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான் கூனன்.

''அப்படியென்றால் இங்கு ஏன் வந்தாய்? உன் சொந்தக்காரர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?''

''ஆமாம்...''

''எங்கேயிருக்கிறார்கள்? இரவில் வழி தெரியவில்லையா? வீடு தெரியவில்லையா?''

''வழியும் தெரியவில்லை. வீடும் தெரியவில்லை'' என்று கூறிச் சிரித்தான் கூனன்.

''நன்றாகப் பேசுகிறாயே, இரவு ஆகாரத்திற்கு என்ன செய்யப் போகிறாய்?'' என்றான் விளக்கு ஏற்றுபவன்.

''தெரியவில்லை.''

''பட்டினி கிடக்கப் போகிறாயா?''

''என் சகோதரியைப் பார்த்த பிறகுதான் அன்ன ஆகாரம் எல்லாம்.''

''ஓ, உன் சகோதரியைத் தேடிவந்தாயா? வீடு தெரியவில்லையா? இங்கே கூன் முதுகுடன் எந்தப் பெண்ணும் இல்லையே!''

''நான் கூனன் என்றால் என் சகோதரியும் கூனியாக இருக்க வேண்டுமா? அழகாக இருப்பாள் ஐயா, அவள் அழகுதான் அவளுக்குச் சத்துருவாகியது.''

விளக்கேற்றுபவன் கூனனை வியப்புடன் நோக்கினான். உருவத்தைப்போல் உள்ளமும் கூனி வளைந்து

அவன் ஒரு முட்டாளாக இருப்பான் என்று எண்ணியது போக, கூனன் தத்துவ மேதையாகவும், பொருள் புதைந்த சொற்களை வீசுவதும் விளக்கேற்றுபவனுக்கு வியப்பை அளித்தது.

கூனனிடமிருநது மேலும் செய்திகளை அறிய விரும்பினான். சத்திரத்து வாசலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க முடியுமா? அதனால் அவனை அழைத்து நடந்தவாறே பேசலாம் என்று முடிவு செய்தான்.

"கூனா, உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. எண்ணெய்த் தூக்கை நீ எடுத்து வா. இன்னும் ஏழெட்டு வீதிகளில் விளக்கேற்ற வேண்டும். பிறகு எனது வீட்டிற்கு நாம் செல்வோம். அங்கே சுடச்சுட கம்பு அடையும், கேழ்வரகுக் கூழும் கிழவி செய்து வைத்திருப்பாள். வேண்டிய அளவு தின்னலாம். பேசிக்கொண்டட செல்வோம்" என்றழைத்தான்.

விளக்கேற்றுபவன் சொல்வதும் சரியென்று கூனனுக்குத் தோன்றியது. ஊரின் வீதிகள் அனைத்தையும் விளக்கேற்றுபவன் அறிவான். அவன் மூலமாக சகோதரியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துவிடலாம் என்று முடிவு செய்தான்.

எண்ணெய்ச் சட்டியைத் தூக்கிக் கொண்டு செல்லும் போது கூனன் தன் கதையைச் சொல்லிக் கொண்டு போனான். ஆனால் சிறையிலிருந்து தப்பி வந்ததை மட்டும் தெரிவிக்கவில்லை.

விளக்கு ஏற்றுபவனுக்கு கூனன்மீது பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது "காலம் ரொம்பவும் கெட்டுப்போச்சு தம்பி! சாளுக்கிய நாட்டிலிருந்து ஒற்றர்கள் ஏராளமான பேர் நம் நாட்டிற்குள் நுழைந்து இருக்கிறார்கள். வாதாபியிலிருந்து படையெடுத்து வரப்போகிறார்களாம்." என்றான் கவலை நிறைந்த குரலில்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கூனன் கேட்டான்.

''சில நாட்களுக்கு முன்பு பிட்சுகள் சிலர் இங்கிருந்து புறப்பட்டனர். அவர்களுடன் தர்க்கம், இலக்கணம் கற்கும் மாணவர்களும் புறப்பட்டு விட்டனர். எங்கே போகிறீர்கள் என்று அவர்களைக் கேட்டேன். சொந்த ஊரான வாதாபிக்கு என்று சொன்னார்கள். ஏன் போகிறீர்கள் என்று கேட்டேன். தங்கள் பெற்றோர்களைப் பார்க்க வேண்டுமாம். என்ன பொய். திடீரென்று எதற்காகப் பெற்றோர்களைப் பார்க்கும் ஆசை வந்ததாம்? ஏதோ சூழ்ச்சியிருக்கிறது. கூனா வீடு வந்துவிட்டது. வயிறார வேண்டியதை எடுத்துக்கொள். எனக்குச் சில வீடுகளின் மீது சந்தேகமிருக்கிறது. அங்கெல்லாம் சென்று பார்ப்போம். உன் சகோதரியிருக்கிறாளா என்று'' என்று விளக்கு ஏற்றுபவன் அன்புடன் கூறினான்.

கூனனுக்கு இருந்த பசியில் அந்த வீட்டிலிருந்த சுட்டுப்போட்ட அடைகள் அனைத்தையும் ஒரே மூச்சில் தின்று தீர்த்தான்.

''அகோரப் பசி போலிருக்கிறதே கூனனுக்கு. உனக்கு வைத்திருந்த அடைகளையும் தின்று தீர்த்துவிட்டானே!'' என்று மூதாட்டி கூறுவது கூனனின் செவிகளில் வீழ்ந்தது. விளக்கு ஏற்றுபவன் மூதாட்டியைச் சமாதானப்படுத்துவதும் காதில் வீழ்ந்தது.

''பாவம் அவன் தனக்கு வேண்டியதைத் தின்னட்டும்; மிகவும் துரதிர்ஷ்டசாலி. இந்த விஷயத்திலாவது அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருக்கட்டும்'' என்று கூறுவதைக் கேட்ட கூனனின் விழிகளில் நீர் தளும்பியது.

கூனனும், விளக்கு ஏற்றுபவனும் ஊரின் ஒதுக்குப்புறமாக இருந்த சில இடங்களுக்குச் சென்றனர். இரவில்

இப்படி அலைவதைக் கண்டு பிறர் சந்தேகப் படாமலிருக்க கூனன் ஏணியை எடுத்துக் கொண்டான். விளக்கு ஏற்றுபவன் கரத்தில் தீவத்தி இருந்தது.

மலை அடி வாரத்து மாளிகை ஒன்று நீண்ட நாட் களாக பூட்டப்பட்டிருந்தது. அந்த வீட்டில் சில நாட் களுக்கு முன்பு இரவில் வெளிச்சம் தெரிந்தது. ஆனால் பகலில் வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்ததை விளக்கு ஏற்றுபவன் கண்டிருக்கிறான். அந்த வீட்டை நோக்கி இருவரும் சென்றனர்.

அங்கேயிருந்த மரத்தின் மீது ஏறி கிளைகளின் வழியே வீட்டின் மேல் மாடத்தின் மீது தாவிய கூனன், வீட்டின் நடுக்கூடத்தில் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. பரபரப்படையச் செய்தது.

கூடத்தில் தூண்டா விளக்கு மங்கலாக எரிந்து கொண் டிருந்தது. கீழே பாய் விரிக்கப்பட்டிருத்தது. கூனனின் சகோதரி நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். சற்றுத் தொலைவில் நல்ல தம்பியும் உறங்கிக் கொண்டிருந்தார். அவளுடைய வயிறு பெரிதாக இருந்தது. அவள் நிறை மாதக் கர்ப்பிணி என்பதைக் கூனன் தெரிந்துகொண்டான்.

கூனன் வந்த வழியே திரும்பினான். அவனுக்காக நெடு நேரம் காத்திருந்த விளக்கு ஏற்றுபவன் இருந்த இடத்தி லேயே உறங்கிக் கொண்டிருந்தான். அவனைத் தட்டி எழுப்பி "ஐயா, என் சகோதரியைக் கண்டு விட்டேன்" என்று உற்சாகத்துடன் கூறினான். ஒரு விதப் படபடப்பும் பரபரப்பும் அவனிடம் நிறைந்திருந்தது.

"உஸ்" என்று ஒலியெழுப்பி மெல்லப் பேசுமாறு சைகை செய்தான், விளக்கு ஏற்றுபவன்.

"வந்துவிடு! இப்போது இங்கிருந்து போய்விடுவோம். நாளைக் காலையில் தக்க ஆட்களுடன் வருவோம்" என்றான். கூனனுக்கு அந்த இடத்தை விட்டு வரவே

மனமில்லை. அங்கிருந்து தான் என்ன செய்வது? மறுநாள் காலைக்குள் ஒருவரும் மறைந்து விடமாட்டார்கள். தக்க துணையுடன் வருவதே நல்லது—என்று முடிவு செய்து எப்படி ஏறினானோ அவ்விதமே மேலேயிருந்து இறங்கினான்.

பொழுது எப்பொழுது விடியும் என்று கூனன் காத்திருந்தான். உறங்கவில்லை. விளக்கு ஏற்றும் பெரியவரையும் தூங்க விடவில்லை. திடீரென்று அவர் காலைப் பிடித்துக் கொண்டு, "ஐயா, தாங்கள் தான் என் சகோதரியை மீட்டுத் தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

பொழுது விடிந்தது. ஆனால் கூனன் அசதியால் நீண்ட நேரம் தூங்கி விட்டான். விழித்தெழுந்து பரபரப்புடன் பெரியவரைத் தேடினான். பெரியவர்; நரசிம்ஹர் கோவிலுக்குச் சென்றிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டுக் கூனனும் காலைக் கடன்களை முடிக்க ஏரிக்கரைப் பக்கம் போகப்புறப்பட்டான். சிறிது தொலைவு சென்றிருக்கமாட்டான்; பின்பக்கம் குதிரைகள் வரும் ஓசை கேட்டது. கூனன் திரும்பிப் பார்த்தான்.

இரண்டு குதிரை வீரர்கள் அவன் அருகே வந்து நின்றனர். ஒரு வீரன் கையிலிருந்த சாட்டையால் கூனனை அடித்தான்.

"ஏய் கூனா, அவ்வளவு எளிதில் தப்பித்துச் சென்று விடலாமென்று நினைத்தாயா? சிறைக்கூடக் காவல் தலைவன் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டு ஓடி விட்டால் உன்னைப் பிடிக்கவே முடியாது என்று நினைத்து விட்டாயோ? நீ பாதாளத்திற்குச் சென்றிருந்தாலும் உன்னைப் பிடித்து விடுவோம். உம், வா எங்களுடன்" என்று கூறி மீண்டும் சொடுக்குச் சொடுக்கினான். ஒவ்வொரு அடியும் முதுகிலிருந்து பிடிச்சதையைப் பிய்த்துக் கொண்டு வந்தது.

வலிதாங்க முடியவில்லைதான். ஆனால் அதற்கு மேலாக சகோதரியை மீட்க வேண்டும் எனும் பரபரப்பினால் "ஐயா, என் சகோதரியை மீட்டுக் கொடுங்கள் ஐயா. அவளை மீட்டு மீண்டும் காஞ்சிக்கு அனுப்பியவுடன் நான் எந்தச் சிறைக்கும் வருகிறேன்" என்று கெஞ்சினான். குதிரை வீரர்கள் அவன் சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனை இழுத்துக்கொண்டு சென்றனர்.

கோவூர் சிறைச் சாலையில் அடைக்கப்பட்ட கூனனுக்கு கூடுதலாக ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைத்தது.

9

கோவூரின் அதே சிறைதான். ஆனால் கூனனுக்குப் பலமாக காவல் இடப்பட்டது. பழைய காவல் தலைவர் இப்போதில்லை. புதியவர் மிகவும் கண்டிப்பானவர். அவர் கூனனின் கதையை அறிந்தவர் என்றாலும் அதற்காக அவர் மனது இளகிவிடவில்லை. கடினமான வேலைகளை கூனனுக்குக் கொடுத்தார். மீண்டும் குற்றம் செய்யக் கூடாது என்பதற்காகப் பல அறிவுரைகளை அவ்வப்போது கூறினார்.

கூனன் மௌனமாக அனைத்தையும் ஏற்றுக் கொண்டான். ஒரே ஒரு தடவை மட்டும் அவன் சிறைத் தலைவரை நோக்கி ஏதோ கேட்டபோது தலைவர் கடுமையான குரலில் கூறினார்:

"கூனா, நீ ஒன்றுமே பேசமுடியாது. உன் பேச்சைக் கேட்டு மனம் இளகி, தப்பி ஓடுவதற்கு முன்பு இருந்த காவல் தலைவர் வழிசெய்தார். ஆனால் பல்லவ நாட்டில் எங்கும் தப்பி ஓட முடியாது. குற்றம் செய்து விட்டவர் எவரும் தப்பிவிட முடியாது" என்றார்.

கூனன் முதன்முறையாக, 'ஹிஹிஹி' என்று சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கையிலிருந்த சாட்டையை அவர் ஓங்கினார்.

"பல்லவ நாட்டில் குற்றவாளிகள் தப்பி ஓட முடியாது என்றீர்கள். அதற்காக சிரித்தேன்" என்றான் கூனன்.

"இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?"

"என் சகோதரியின் கணவரைக் கொன்றவன் தப்பி ஓடி விட்டானே! கண்டுபிடித்தீர்களா? அவனை நான் கண்டு பிடிக்கத்தான் சிறையினின்று தப்பி ஓடினேன். அவனைக் கண்டு பிடித்தும் விட்டேன். அதற்குள் என்னைப் பிடித்து வந்து விட்டார்கள். அதை நினைக்கும்போது சிரிப்பு வராமல் என்ன செய்யும்?" என்றான் கூனன்.

காவல் தலைவர் உடனே மறுமொழி கூறவில்லை. கூறத் தக்க சமாதானமுமில்லை. அதனால் அவர் கூனனை நோக்கிச் சீறி, "வாயை மூடடா, கூனா! குற்றவாளியைக் கண்டு பிடிக்க நீ யார்? நீயும் ஒரு குற்றவாளிதானே! உனக்கு உரிமை ஏது?" என்றார்.

"குற்றவாளியை நான் கண்டு பிடிக்க இனி முயலமாட்டேன். நீங்களே கண்டுபிடியுங்கள்" என்றான்.

"அதிகப் பிரசங்கி, வாயை மூடு." என்று கூறி கையிலிருந்த சாட்டையை மெல்லச் சொடுக்கினார். கூனன் வலி தாளாமல் அலறினான். இனி சகோதரியைக்கண்டுபிடிப்பது கடினம்தான். தண்டனைக் காலத்தை மிக அமைதியுடன் கழித்து, விடுதலையடைந்த பிறகு சகோதரியைத் தேடுவோம்" என்ற முடிவுக்கு வந்தான் கூனன்.

கூனனை அவர் சாட்டையால் அடித்தாரே தவிர காவல் தலைவர் கூனன் கேட்ட கேள்வியைப் பற்றியே

சிந்தித்தவாறு இருந்தார். கடிகாசலத்திற்குத் தக்க ஆளை அனுப்பினார். கூனனின் சகோதரியைப் பற்றி விசாரித்து வர.

சில மாதங்கள் கழித்து அவர் கூனனிடம் வந்தார். கூனனின் சுக செளக்கியங்களை விசாரித்தார். கூனன் யாரிடமும் அதிகம் பேசுவதில்லை. தனக்கிட்ட வேலையை அப்பழுக்கின்றி அவன் செய்து வந்தான். தலைவர் தன்னிடம் வந்ததைப் பற்றி மகிழ்ச்சியோ, வெறுப்போ அவன் அடையவில்லை.

''கூனா, உன் சகோதரியைப் பற்றி விசாரித்து விட்டேன்'' என்றவுடன் கூனன் பரபரப்புடன் அவர் முகத்தை நோக்கினான்.

''கூனா, உன் சகோதரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாம். சகோதரியையும், பெண்ணையும் அழைத்துக் கொண்டு நல்லதம்பி என்பவர் சாளுக்கிய நாட்டிற்கே சென்று விட்டாராம்'' என்றார்.

''இதைக் கண்டுபிடிக்க இவ்வளவு நாட்களா? அப்படியும் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை'' என்று கூனன் முணுமுணுத்தான்.

''கூனா, வருத்தப்படாதே. நல்லதம்பி சாளுக்கியர்களுக்கு ஆதரவாக இவ்வளவு காலம் காஞ்சியில் இருந்திருக்கிறான் என்பதைப் பல்லவ நாட்டு ஒற்றர்கள் இப்போதுதான் அறிந்தனர். அவனைத் தப்பிச் செல்லுமாறு விட்டதற்காக ஒற்றர்கள் வேதனைப்படுகிறார்கள். அதனால், வாதாபிக்குச் சென்று தந்திரமாக அவனைக் காஞ்சிக்குக் கொண்டுவரத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள்'' என்றார்.

''தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதைதான். என்னை அன்று சிறைப்படுத்தாமல் இருந்திருந்தால் நல்லதம்பியின் முகமூடியைக் கிழித்திருப்பேன்'' என்று கூனன் சற்றுக் கோபத்துடன் கூறினான்.

''இருக்கலாம். ஆனால், நீ உன் சகோதரியைப் பற்றியே நினைத்தாய். நாட்டைப் பற்றி நினைக்க வில்லை. நல்லதம்பி சாளுக்கிய ஒற்றன் என்பதைத் தெரிந் திருந்தால் அப்போதே அவனைச் சிறைப்படுத்தியிருப் போம்'' என்றார் காவல் தலைவர்.

கூனன் ஒன்றுமே பேசவில்லை. தன் சகோதரி எங்காவது உயிரோடிருந்தால், எப்போதாவது ஒருநாள் கண்டுபிடித்து விடலாம் என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டான்.

அவனுடைய கவனம் முழுமையும் இப்போது இறை வனைப் பிரார்த்திப்பதிலேயே இறங்கியது. ''ஆண்ட வனே, என் சகோதரியையும் அவளுடைய மகளையும் காப்பாற்று. என்றாவது அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பை எனக்குக் கொடு. அதுவே என் வாழ்க்கை இலட்சியம்''என்று நாள்தோறும் பிரார்த்தித்து வந்தான்.

ஓராண்டு ஓடி மறைந்தது. ஒருநாள் சிறைக்காவல் தலைவர் கூனனிடம் வந்தார். ''கூனா, அந்த நல்ல தம்பியை மிகவும் சாதுர்யமாகப் பேசி வாதாபியினின்று காஞ்சிக்கு அழைத்து வந்து விட்டோம். பல்லவ சக்கர வர்த்தி பரமேச்வரவர்மருக்கு நல்லதம்பியைக் கண்ட வுடன் உண்டான கோபத்திற்கு எல்லையில்லை. காஞ்சி நகரத்தில் மிக முக்கியமான பிரமுகராக அவர் விளங்கி வந்தார். அவரே இவ்வாறு துரோகியாக இருப்பார் என்று நினைக்கவில்லை. அவருக்கு ஆயுள் தண்டனை அளித்துவிட்டார். இன்னும் சில நாட்களில் நல்லதம்பி இதே சிறைக்குக் கொண்டுவரப் படுவார்'' என்றார்.

கூனன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். நல்லதம்பி அழைத்துவரப்பட்டார். ஆனால் அவரைக் கூனன் சந்திக்க அனுமதி கிடைக்கவில்லை. மீண்டும் கூனன்

அவரைப் பழிக்குப் பழி வாங்கிவிடுவானோ என்ற பயத்தில் கூனனை அவரிடம் நெருங்கவே விடவில்லை.

தன்னைச் சந்திக்கும் காவல்காரர்களிடம் கூனன் பணிந்து மிக வேண்டிக் கொண்டான். ''அந்தக் கொடியவனை நான் சந்திக்கவே வேண்டாம். என் சகோதரி என்ன ஆனாள் என்பதை மட்டும் கேட்டுச் சொல்லுங்கள். அவள் சௌக்யமாக இருக்கிறாளா என்று மட்டும் கேட்டுச் சொல்லுங்கள். அதுபோதும்'' என்று கெஞ்சினான்.

நாள்தோறும் உணவு கொடுக்க வருபவரிடம் இவ்வாறு கேட்பது அவன் வழக்கமாகிவிட்டது. ஒருவரும் கூனனுக்கு மறுமொழி கூறுவதில்லை.

பருவக் காலங்கள் மாறிக் கொண்டிருந்தன. மழை பெய்தது. வெயில் காய்ந்தது. மலர்கள் பூத்தன. மாமரத்தில் கொத்துக் கொத்தாய் மாங்காய்கள் காய்த்துத் தொங்கின. சிறைச் சாலையிலுள்ள மாமரத்தைக் கூனன் பார்த்துக் கொண்டிருப்பான.

அந்த ஆண்டு மாம் பூக்கள் பூத்தவுடனேயே கருகிவிட்டன. மாங்காய் பெயருக்கு ஒன்றுகூட மரத்தில் காய்க்கவில்லை.

வானம் களங்கமின்றி இருந்தது. மெல்லிய மேகம் ஒன்றுகூடக் காணவில்லை. பெரிய எரி நட்சத்திரம் ஒன்று தோன்றியது. இரவில் பார்த்தவர்கள் மறுநாள் அதைப் பற்றியே பேசிக் கொண்டனர்.

பெரும் பாறையைச் சிற்றுளியால் உடைக்கும் பணி கூனனுக்குக் கொடுக்கப்பட்டது. கடும் வெயிலில் அவன் வேலை செய்தான். அவன் உடல் கடினமானது போல் உள்ளமும் கடினமாகிவிட்டது. இந்த உலகில் அவனுக்குச் சுகம் என்று ஒன்று கிடைக்குமா இனி? இதய சுகம் ஒன்றே

ஒன்றைத்தான் எதிர்பார்த்தான்: சகோதரி நன்றாக வாழ்வதைக் காண்பது ஒன்றே அவனது குறிக்கோள். அதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. சகோதரி உயிருடன் இருக்கிறாள். எங்கே இருக்கிறாள்? அவளுக்கு ஒரு குழந்தை, பெண் குழந்தை என் சகோதரியைப் போல் அவள் அழகாயிருப்பாள். அவளுக்கும் தன் தாயைப் போன்ற துயரங்கள் வரச் செய்யாதே இறைவா, என்று வேண்டிக்கொள்வான்.

சகோதரியின் குழந்தைக்கு இப்போது என்ன வயதிருக்கும்? அவனுக்கு இப்போது தேதி, நாள், மாதம் எல்லாம் மறந்து விட்டது. இரவு தெரியும், பகல் தெரியும். அவன் கண்ணெதிரே சிறைச்சாலை வேலைக்காரர்கள் மாறிப் புதியவர்கள் வந்தனர்.

சிறு கன்றாக நடப்பட்ட தென்னை ஓங்கி உயர்ந்து வளர்ந்து விட்டது. பாளைகள் தொங்கின, வாழை ஒன்று குலை தள்ளியது.

சிறைச்சாலைக் காவல் தலைவர் பூபதி தன் மகளை ஒருநாள் சிறையைச் சுற்றிக் காட்ட அழைத்து வந்தார். திருமணம் ஆகு முன்பு தன் சகோதரி இப்படித்தான் தள தளவென்று பூத்துக் குலுங்கி நிற்பாள். அகன்ற விழிகள். நடந்து செல்லும்போது அவளது பின்புற அழகைப் பார்த்து ரசித்தான் கூனன். பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் மறைத்திருந்த ரசனை என்பதே இப்போது தோன்றியிருக்கிறது. மெல்ல அசையும் இடுப்பையும், அள்ளிச் செருகியிருந்த கூந்தலையும் கச்சையின் பின்புற முடிச்சில் தொங்கிய குஞ்சலத்தையும் இடுப்பில் அவள் கை வைத்துக்கொண்டு நிற்கும் அழகையும் கூனன் பார்த்துக் கொண்டே நின்றான். அவன் கண்களின் கோடியில் நீர்த்துளிகள் மெல்ல அரும்பின.

அவனருகே சிறைக்காவலர் தலைவர் வந்தார். மயில் போல அவள் மகளும் நடந்து வந்தாள்.

''கூனா, சௌக்கியமாயிருக்கிறாயா?'' என்று கேட்டார். கூனன் 'ஹி ஹி' என்று மட்டுமே சிரித்துக் குரல் கொடுத்தான்.

''கூனா, என்ன அப்படிப் பார்க்கிறாய்? என் மகள். உலகச் சிறையிலிருக்கும் அவள் சிறைக்கூடத்தைச் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டாள்...'' என்றார் பூபதி.

தலைவரின் மகளா? கூனன் வியப்படைந்தான். இரண்டாவது முறை அவன் சிறைக்குள் அடைக்கப்பட்டபோது தலைவருக்குக் கல்யாணமாகவில்லை என்பது அவன் நினைவு. வாலிப மிடுக்குடன் அதிகாரமும் சேர்ந்து விளங்கிய அவரது இளம்பிராயத் தோற்றத்தை மெல்ல நினைவுப் படுத்திக் கொண்டான்.

''உங்கள் கல்யாணத்திற்கு எங்களுக்கு அழைப்புக் கிடைக்காது. ஆனால் எங்களுக்கு விருந்தாவது கொடுத்திருக்கலாம் இல்லையா?'' என்று கூனன் கேடடான்.

பூபதிக்கு மனம் இளகியது. ''கூனன், பாவம் அவன் செய்த குற்றத்திற்கு அவனுக்குக் கிடைத்த தண்டனை கடுமைதான். அப்பா! என் மகள் பிறந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அவனும் பதினெட்டு ஆண்டுகளுக்குமேல் தண்டனையை அனுபவித்து விட்டானே'' என எண்ணினார்.

''கூனா, விருந்துக்கென்ன! வேண்டியது தருகிறேன். உன்னைக் கண்டு சிறையிலிருப்பவர்களுக்கு மிகுந்த பயம். அதனால் உன்னிடம் நெருங்கவில்லை. ஆனால் நீ இவ்வளவு ஆண்டுகளாக ஒரு சிறு தவறுகூடச் செய்யவில்லை. சிறைக்கு வெளியே இருந்திருந்தால்கூட, நீ குற்றங்கள் செய்திருக்கக்கூடும். உன்னுடைய நன்னடத்தை குறித்து நான் காஞ்சிக்குச்செய்தி அனுப்புகிறேன். நாளைக்கு உன்னை என் வீட்டிற்கு அழைக்துச் செல்கிறேன்'' என்று அவன் முதுகைத் தடவிக் கொடுத்து விட்டுச் சென்றார். அவருடைய மகள், கூனனைத் தனது அகன்ற விழிகளால் ஒரு முறை திருப்பிப் பார்த்து

விட்டுச் சென்றாள். கூனன் விம்மி விம்மி அழுதான். அன்று முழுவதும் அழுது கொண்டேயிருந்தான். ஏன் அழுகிறாய் என்று கேட்டவர்களுக்கு அவன் மறுமொழி ஏதும் கூறவில்லை.

மறுநாள் சிறைக்கூடக் காவல் தலைவர் பூபதி வீட்டிலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது.

சிறைச்சாலையில் பெரிய சுவரின் வெளியே சென்று வெளிக் காற்றைச் சுவாசித்துப் பல ஆண்டுகள் ஆகி விட்டன. காலம் ஓடுகிறது என்பதை அவன் புரிந்து கொண்டு விட்டான். அவனிடம் பலமாறுதல்கள். கூனன் என்றோ அழகற்றவன் என்றோ இயற்கை பார்ப்ப தில்லை. இயற்கையின் திருவிளையாடலில் ஏழைப் பணக்காரன் என்ற பேத உணர்ச்சி கிடையாது. அழகானவன், மிக அழகானவன், குரூபி என்று இயற்கை வித்தியாசம் பார்ப்பது கிடையாது, மாறனை ஏவி விட்டு மலர்க்கணைகளைத் தொடுக்கச் செய்வதில் இயற்கை வேற்றுமையே காட்டாது, கூனனிடம் அது தன் திருவிளையாடல்களைக் காட்ட முயன்றிருக்கிறது.ஆனால் கூனனின் வைராக்கியத்தின் எதிரே அதன் சக்தி இயங்க வில்லை.

உடல் உழைப்பு, சகோதரியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற உறுதி, இவைதான் அவனுடைய நினை வாக இருந்தது. அவனுக்குத் தனித் தேவை என்று ஏது மில்லை. கூழோ, களியோ, அரிசிக்கஞ்சியோ வயிறு நிறையக் கிடைத்து விடும். உழைக்காதிருக்க அவனைச் சிறையில் யார் விட்டார்கள்? உழைப்பு, உணவு, உறக்கம் இவை அன்றாடப் பணியாகி விட்டபடியால் அவனுடைய சிந்தனை சிதறவில்லை. அவனுடைய சிந்தனையைத் திருப்ப முனைந்த இயற்கையும் தோற்று விட்டது.

தோற்று விட்டதுடன் இயற்கை நின்று விடுமா? அது தக்க காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

கூனன் சிறைத் தலைவர் வீட்டின் வாயிலில் போய் நின்றான். தலைவரின் மகள், அழகு மாளிகையின் கோபுரக் கலசம் போல் திகழ்ந்தவள் கூனனைச் சிறிது நேரம் இமைக்மாமல் பார்த்துக் கொண்டு நின்றாள், கூனனும் அவளது பாதாதி கேசம் இம்மியளவுகூட விடாமல் விழுங்கி விடுபவன் போல் நோக்கினான்.

'ஹிஹிஹி' என்று அவன் குரல் கொடுத்துச் சிரித்தான். அன்று அவளுடைய பின்னழகை ரசித்தான். இன்று அவளுடைய முன்னழகை ரசிக்கிறான்.

பெண்கள் என்றால் அவனுக்குத் தன் சகோதரியைத் தான் தெரியும். தன் சகோதரியின் ஒவ்வொரு அங்கமாக அவன் நினைவுப்படுத்திக் கொண்டான். சகோதரியின் முகம் வரையில் தான் அவனுக்குத் தெரிந்தது.

இவளுக்கு உருண்டை முகம். நீண்ட நாசி, கண்கள் அகலமாக இருந்தன. உற்று நோக்கும் போது கண்கள் மேலும் விசாலமாக விரிந்தன. அன்று கூந்தலைச் சுருட்டி கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள். இன்று நீராடி, அகில் புகையில் கூந்தலைக் காய வைத்து, மேலும் காற்றாடத் தோள் மேல் வந்து அலை தவழ கை விரல் களால் கோதி விட்டுக் கொண்டே வாயிற்படியில் நின்ற காட்சி கூனனை ஊமையாக்கி விட்டது.

மெல்லிய துகில் உடுத்தியிருந்தாள். வீட்டிற்குள்ளே இருப்பதால் பட்டுக் கச்சையை அவள் அணியவில்லை. இதயத் துடிப்பிற்கும், மூச்சிற்கும் ஏற்றவாறு மார்பகம் விம்மித் தணியும் நிலையை அவன் இதற்கு முன்பு கண்ட தில்லை. அவனுள்ளத்தில் விகற்பமான எண்ணத்தை அவளுடைய எழில் கோலம் உண்டாக்கவில்லை என் றாலும் ஏதோ சொல்ல முடியாத இன்பத்தை இரத்த நாளங்களில் ஏற்படுத்தியது.

தன் சகோதரிக்கு ஒரு மகள் பிறந்ததாகச் சொன்னார்களே. அந்த மகள் வளர்ந்து இவளைப் போல இன்று தோற்றமளிப்பாளே?

வேண்டாம். சகோதரியின் மகள் இவளைப் போல் அழகாக இருக்க வேண்டாம். அழகு பெண்களுக்கு ஆபத்தைக் கைதட்டி அழைக்கிறது. ஆபத்து முதலில் கோலாகலமாக, குதி நடை போட்டு வருகிறது. பிறகு துன்பத்தை அள்ளித் தருகிறது. அழிவை அளித்து விட்டு மறைந்து விடுகிறது.

''அப்பா'' என்று கூவினாள் அவள். ''கூனன் வந்திருக்கிறானப்பா'' என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே ஒடினாள். அவள் திரும்புவது, குலுங்கி ஓடுவது, எல்லாம் அவனுக்குப் புதுமையாக இருந்தது. பதினெட்டு ஆண்டுகள் பெண்களையே பார்த்திராத கண்களுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை அவனால் வெளிப்படுத்த முடியவில்லை.

'கூனன்' என்று அவள் அழைத்தவுடன்தான், அவன் திரும்பிப் பார்த்தான். அந்த வீட்டின் எதிரே பெரிய மதிள் கொண்ட சிறைச்சாலை கம்பீரமாக நின்றது. பாறைப் பிளவுகளில் சிறுசிறு காட்டு மரங்கள் முளைத்திருந்தன. இன்னும் நாம் கூனன்தான். தண்டனை பெற்ற குற்றவாளிதான் என்பதை உணர்ந்தான்.

சிறைக் காவல்கூடத் தலைவர் பூபதி எதற்காகத் தன்னை வரச் சொன்னார்?

தன் மகளின் குரல் கேட்டு, ''நீலவல்லி, ஏன் கூப்பிட்டாய்?'' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்தார் பூபதி.

கூனன் வெளியே நிற்பதைப் பார்த்து விட்டார் ''கூனா வந்து விட்டாயா? வா, வா'' என்று அன்பொழுக அழைத்தார்.

''நீலா! கூனனுக்குக் கிணற்றங்கரையைக் கட்டாடு. கிணற்றில் நீர் இழுத்து அவன் குளிக்கட்டும்'' என்றார்.

அந்த வீட்டின் தோட்டத்தில் தென்னை, மா, பலா மரங்கள் நிறைந்திருந்தன. பெரிய கிணறு இருந்தது. காற்று சுகமாக வீசியது, தென்னை ஓலைகள் சலசலத்தன. பலாப்பழம் மரத்தின் வேர் அருகே தன்னுடைய முதுகைப் போல் காய்த்துத் தொங்கின.

'கீச்கீச்' சென்று குருவியொன்று கத்தியது. கரிய குயிலொன்று எங்கிருந்தோ குரல் கொடுத்தது, அவன் மனத்தில் புதுத் தெம்பை ஊட்டியது. ஆசை தீரக் குளித்தான், உடல் துவட்டிக்கொள்ள புதிய துணி கிடைத்தது. உடுத்திக் கொள்ள புதிய ஆடை கிடைத்தது.

''ஹி ஹி'' என்று நகைத்தான் கூனன்.

''உனக்குத் தான் கூனா. என் மகள் நீலவல்லிக்கு இன்று பிறந்த நாள். அதனால்தான் உன்னை அழைத்துப் புத்தாடை தந்தேன். அதோ விருந்துச் சோறு'' என்றார் பூபதி.

புறக்கடையில் உள்ள திண்ணையருகே தலை வாழை இலை போடப்பட்டிருந்தது. வீட்டிலுள்ள மூதாட்டி சோறு, கறி, கூட்டு என்று அவனுக்குப் பரிமாறினார்கள்.

அவன் வேகமாக எல்லாவற்றையும் சோற்றுடன்கலந்து உருண்டையாக்கி அடைத்துக் கொள்வதை நீலவல்லி மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். மெல்லிய சிரிப்பு அவளிடமிருந்து வந்தது.

''சிரிக்காதே, நீலா. அவன் இதைப் போன்ற சோறு கண்டு எவ்வளவோ வருடங்கள் ஆகின்றன...'' என்று மெல்லக் கடிநது கொண்டார் பூபதி.

நீலா ஒரு பாத்திரத்தில் திருக்கண்ணமுது எடுத்து வந்தாள். அவள் தந்தையும் உடன் வந்தார்.

இலையில் விழுந்ததை எடுத்துச் சுவைத்தவுடன் அவனுக்கு ஏற்பட்ட இன்பத்திற்கு எல்லையில்லை. நிமிர்ந்து பார்த்தான். நீலா குனிந்து அகப்பையால் ஊற்றினாள்.

கூனன் அவள் மெல்லிய மேலாடையையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

''போதுமா?'' என்று குரல் கேட்டுத் திடுக்கிட்டு இலையை நோக்கினான். பால்விட்ட பாயசம் இலையில் வழிந்து ஓடிக் கொண்டிருந்தது.

கூனனுக்குத் தன் செயல் வெட்கத்தை அளித்தது. 'ஹி ஹி' என்று சிரித்தான்.

நீலா, புரிந்து கொண்டாள். அவள் விரைந்து உள்ளே சென்றாள். நீண்ட நேரங்கழித்தே திரும்பி வந்தாள். இப்போது பட்டுக் கச்சையை அணிந்திருந்தாள். அது அவளுடைய அழகை மேலும் எடுத்துக் காட்டியது.

''கூனா, வயிறார உண்டாயா?'' என்று பூபதி கேட்டார்.

'ஹிஹிஹி' என்ற சிரிப்பைத் தவிர வேறொன்றும் அவனிடமிருந்து மறுமொழியாக வரவில்லை.

''உன்னைப் பற்றிக் காஞ்சிபுரத்திற்கு எழுதியிருக்கிறேன்...'' என்றார் தலைவர். 'ஹிஹிஹி' என்பதைத் தவிர வேறொன்றும் சொல்லத் தெரியவில்லை அவனுக்கு.

''உனக்கு விடுதலை வாங்கித் தரப் போகிறேன்'' என்று அவர் கூறியதும் கூனன் முகம் மாறியது. அவன் முகத்தில் நன்றியைத் தெரிவிக்கும் ஒளி சேர்ந்தது. விழிகளில் நீர் சேர்ந்தது. கைகள் இரண்டும் ஒன்று சேர்ந்தன.

தடாலென்று அவர் கால்களில் வீழ்ந்து விட்டான்.

''எழுந்திரு, எழுந்திரு கூனா. என்ன இது? ஏன் என் கால்களில் வீழ்கிறாய்? கடவுளின் பாதங்களில் வீழ்ந்து கும்பிடு,'' என்றார் பூபதி.

''நீங்கள்தான் கடவுள். நான் கடவுளை வேண்டிய மட்டும் துதித்து விட்டேன். என்னை அவர் சோதனை செய்து விட்டார். என்னைத் துன்புறுத்தி விட்டார். என் சகோதரியை என்னிடமிருந்து பிரித்தார். என்னைச் சிறையிலடைத்தார். என் சகோதரியைக் கைம்பெண்ணாக்கினார். நீங்களோ எனக்கு வயிறார உணவளித்தீர்கள். அன்பாகப் பேசுகிறீர்கள். விடுதலை வாங்கித் தரப் போகிறீர்கள். நீங்கள்தான் கடவுள்'' என்று கூறி விம்மினான் கூனன்.

10

சிறைக் கூடக் காவல் தலைவர் பூபதி கூறியதுபோல் கூனனுக்கு விடுதலை உத்தரவு வந்து விட்டது. மறுநாள் முதல், கூனன் சுதந்திர மனிதன்.

பொழுது புலர்ந்தது. இதுவரைக் கண்டிராத கதிரவனின் பொற் கிரணங்களைச் சிறைச்சாலைக்கு வெளியே தன் மேனியில் தாங்கிக் கொண்டான் கூனன்.

இனி எங்கு வேண்டுமானாலும் அவன் செல்லலாம். ''நல்லதம்பிக்கு விடுதலையில்லையா! அவரும் விடுதலையாகி வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அவருக்கு அரசர் கொடுத்த தண்டனை போதாது. அந்தத் தண்டனை, விரோதிகளுக்கு உளவு சொல்லி வந்த குற்றத்திற்கு

மட்டுமே. என் சகோதரியின் கணவரைக் கொன்ற குற்றத்திற்குத் தண்டனை கொடுக்க வேண்டாமா? அதற்குத் தண்டனை: மரணம்தான்'' கூனன் சிந்தித்தவாறு நின்றான்.

''மறுபடியும் நீதியையும், சட்டத்தையும் நம் கரங்களில் எடுத்துக் கொள்வது தவறல்லவா?'' என்று எண்ணினான். அவனது வக்ரமான எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது தலைவரின் குரல்.

''கூனா, வெளியே போய் என்ன செய்யப் போகிறாய்'' என்று கூறிக் கொண்டே வந்து அவன் முதுகைத் தட்டினார் பூபதி.

ஆமாம்; என்ன செய்யப் போகிறோம்? எங்கே போகப் போகிறோம்? அடுத்த வேளை ஆகாரத்திற்கு எங்கே போவது? எங்கே உறங்குவது?''-கூனனுக்குக் கவலை வந்து சூழ்ந்து கொண்டது.

பூபதி பேசினார்: ''கவலைப்படாதே கூனா! என் வீட்டிற்கு வந்துவிடு. என் மகளுக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறது'' என்றார்.

கூனனுக்கு வியப்புத் தாங்கவில்லை. அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். அவர் என்ன சொல்கிறார். அவன் செவிகளை அவனால் நம்ப முடியவில்லை.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்காமல் கேட்டான் கூனன்.

''நான் ஏதோ விளையாட்டுக்காகப் பேசுவதாக நினைத்து விட்டாயா? உண்மைதான் கூனா! நீ நேரே என் வீட்டிற்குப் போ. ஊர்க் குடிமகனிடம் செல் முகத்தை மழுங்க வழித்துக் கொள். புதிய உடை தரச் சொல்கிறேன்'' என்றார்.

'ஹிஹிஹி' என்று கூனன் சிரித்தான். "ஐயா, எனக்கு அதிர்ஷ்டம் வர ஆரம்பித்து விட்டதா? என்னுடைய தொல்லைகள் தீர்ந்து விட்டனவா? எனக்கா உங்கள் வீட்டில் இடம் கொடுக்கிறீர்கள்?" என்று பரவசம் மிகக் கேட்டான்.

"ஏன், உனக்கு எந்தவிதத்தில் தகுதிக் குறைவு? உன் முதுகுக் கூனல் என்றால் உள்ளமும் கூனலா? பலசாலியாக இருக்கிறாய். தினமும் கிணற்றிலிருந்து நீர் இறைத்துத் தொட்டியில் நிரப்பு. மாடுகளைக் குளிப்பாட்டு. செடிகளுக்குத் தண்ணீர் விடு. வாரம் ஒருமுறை சந்தைக்குச் சென்று வீட்டிற்கு வேண்டிய பண்டங்களை வாங்கிவா. சமையல் செய்யும் மூதாட்டிக்கு உதவியாக இரு. என் மகள் நீலாவிற்குப் பேச்சுத் துணையாய் இரு. அவளுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்து வைக்கப் போகிறேன்" என்றார்.

கூனன் அசையாது நின்று கொண்டிருந்தான். அவர் விருப்பப்படி வேலைக்குச்செல்வதா அல்லதுசகோதரியைத் தேடி வாதாபிக்குச் செல்வதா என்ற பிரச்னை அவனுள் எழுந்து அவனைக் குழப்பியது.

"என்ன சிந்தனை செய்கிறாய்; சிறைச்சாலை நினைவையே மறந்துவிடு. சிறையிலே எனக்குப் பயந்து கொண்டிருந்தாய்; இனி எனக்குப் பயப்பட வேண்டாம். உன் மனச் சாட்சிக்குப் பயப்படு போதும். நீ இனிக் குற்றவாளி அல்லன். சுதந்திரமாக நடமாடக்கூடிய பல்லவநாட்டு பிரஜை. என் வீட்டில் ஒருவனாக இருந்து கொண்டு உன் வாழ்நாளைக் கழிக்கலாம்" என்றார்.

கூனன் 'ஹிஹிஹி' என்று சிரித்தான். ஏதோ சொல்வதற்கு முயன்றான்.

"உம், சொல்லு கூனா. சொல்ல வேண்டியதைச் சொல்லு. மனத்தில் பட்டதைத் தைரியமாக சொல்லலாம்" என்றார் பூபதி.

''என் சகோதரி என்ன ஆனாளோ என்று பார்க்க வேண்டும். சகோதரிக்காகத்தானே நான் இவ்வளவு தொல்லைகளையும் மேற்கொண்டேன்'' என்று மெல்லக் கூறினான் கூனன்.

அவன் கேட்பதிலும் நியாயமிருந்தது. அவனுடைய சகோதரியை எப்படிக் கண்டுபிடிப்பது?

''கூனா, பதினெட்டு வருடங்களுக்கும் மேலாகி விட்டனவே. அவள் எங்கேயிருப்பாளோ, அவளை எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்றார் தலைவர்.

''பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, நீங்கள் கண்டிப்பாகக் கூறிய சொல்லைக்கேட்டு நான் மௌனமாயிருந்தேன். இல்லாவிட்டால் நான் கண்டுபிடித்திருப்பேன். பல்லவ நாட்டு ஒற்றர்கள் மனம் வைத்தால் கண்டுபிடித்து விடலாம்'' என்று கூனன், மிகவும் பயத்துடன் கூறினான்.

தலைவர் 'ஹோஹோ' என்று நகைத்தார். ''பல்லவ நாட்டு ஒற்றர்களுக்கு இந்த வேலையைக் கொடுக்கலாமா?'' என்றார்.

''ஏன், இந்தப் பணியைக் கொடுப்பதில் தவறு என்ன? என்னுடைய சகோதரி என்பதை மறந்து விடுங்கள். பல்லவ நாட்டில், பரமேச்வர சக்கரவர்த்தி ஆட்சி நடத்தும் நாட்டில், நடைபெற்ற சம்பவம் அழகான ஒரு பெண் நிம்மதியாக வாழவிடாமல் ஒரு கொடியவன் செய்தான். அந்தப் பெண்ணின் கணவனைக் கொன்றான். அந்தப் பெண்ணைப் பல்லவ நாட்டினின்று அபகரித்துச் சென்றான். அந்தக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு பல்லவ நாட்டுக் காவலர்களுடையதல்லவா?'' என்று கூறி கூனன் நிறுத்தினான்.

பிறகு, சற்று அழுத்தமான குரலில் சொன்னான்; ''குற்றவாளியைக் கடிகாசலத்தில் நான் கண்டுபிடித்த

விவரம் தங்களுக்குத் தெரியும். ஆனால், அந்த குற்ற வாளிக்குக் கிடைத்த தண்டனை, பல்லவ நாட்டுக்கு விரோதமாக அவன் இருந்தான் என்பதற்காக மட்டுமே.''

காவல்கூடத் தலைவர் தலையசைத்தார். ''ஆமாம்; அந்த நல்லதம்பி இன்னும் இந்தச் சிறையில்தான் இருக் கிறான்'' என்றார்.

''தெரியும், என்னுடைய பரம விரோதியும் நானும் ஒரே சிறையில் பல ஆண்டுகள் இருந்தோம். பரமவிரோ திக்கு ஏற்ற தண்டனை கிடைக்கவில்லை என்பதுஎனக்குத் தெரியும். தண்டனையை நான் கொடுத்திருந்தால் மேலும் பல ஆண்டுகள் இதே சிறையில் நான் வாடும்படியாக நேர்ந்திருக்கும். அதனால் பல்லைக் கடித்துக் கொண்டு, கோபத்தை அடக்கிக்கொண்டு இருந்தேன். அதற்குத் தங்களுடைய அறிவுரையும் காரணம்'' என்று கூனன் கூறினான், குரலில் பணிவு பொங்க.

''கூனா, உன்னுடைய நல்ல குணத்தை எப்போதோ புரிந்து கொண்டேன். நீ பிறவியிலேயே கொடியவன் அல்லன் என்பதை மிக எளிதில் முதலிலேயே தெரிந்து கொண்டேன். உன் மனத்தில் அடக்கி வைத்திருக்கும் வேதனையையும், சீற்றத்தையும் அறிந்து கொண்டேன் நான் அதற்கு ஒரு வழி செய்கிறேன். நீ எங்குப் போய்உன் சகோதரியைக் கண்டு பிடிப்பாய்?'' என்று அவர் பேசும் போது அதில் பரிவு பரிமளிப்பதைக் கண்டான் கூனன்.

அவருடைய அன்பு அவனை ஆட்கொண்டது. அவரையே விழிவாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என் வீட்டில் எங்களுள் ஒருவராகத் தங்கியிரு. என் பெண் நீலவல்லிக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. தாயற் றவள் அவள். சமையல் செய்து போடும் மூதாட்டியைத் தவிர வேறு ஒருவரும் அவளுக்கு பேச்சுத்துணைக்கு

இல்லை. உன் சகோதரியின் இருப்பிடத்தை நான் கண்டு பிடிக்கிறேன். கவலையின்றி இரு'' என்றார்.

கூனன் கண் கலங்கினான். அன்பு மழையை தலைவர் பொழிந்ததால் அவன் திக்குமுக்காடி விட்டான். 'நீலவல்லிக்கு என்னைப் பிடித்திருக்கிறதாம்'—அதை நினைக்கும் போது அவன் உடல் சிலிர்த்தது.

தலைவர் அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வீட்டு வாசலில் இருந்த மல்லிகைக் கொடியைச் சரிசெய்து கொண்டிருந்தாள், நீலவல்லி யாரோ வரும் காலடியோசை கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள்.

''நீலா! இதே பார் கூனன். நீ கேட்டபடியே உனக்குத் துணையாக வந்து விட்டான்'' என்று தலைவர் கூனனை அறிமுகப்படுத்தினார்.

நீலவல்லி தன் விழிகளை அகல விரித்து அவனை வரவேற்றாள். கூனன் அவள் விழிகளை ஒரு தடவை பார்த்துத் தலைகுனிந்து கொண்டான். படரத் தவிக்கும் மல்லிகைக் கொடியை சற்று நிமிர்ந்து பந்தலின் மீது ஏற்றிவிட அவள் முயல்வதைக் கீழ்க்கண்ணால் ரசித்தான் கூனன். அவள் குதிக்காலில் நின்று கைகளை உயர்த்தி கொடிகளைப் படரவிடும் போது அவளுடைய தோற்றம் கூனனின் உடலைச் சிலிர்க்க வைத்தது.

கூனன் மொட்டையடித்துக் கொண்டான். சடைகள் ஒழிந்தன. தாடியும் மீசையும் காணவில்லை. கூனனைப் பார்க்க விசித்திரமாக இருந்தது. அழுக்கு ஆடை அகற்றி புதிய ஆடை உடுக்கக் கிடைத்தது.

நீலவல்லி கைகொட்டிச் சிறு குழந்தைபோல் சிரித்துக் குதித்தாள். அவனது மொட்டைத் தலையை ஒரு முறை தடவிவிட்டாள். பனிக்கட்டியைத் தலையில் வைத்தது போல, சிலீர் என்ற குளுமை உணர்ச்சியைக் கூனன் உணர்ந்தான்.

புதிய வாழ்வே உதயமாகி விட்டது போன்ற புத்துணர்வுடன் அந்த வீட்டில் சகல வேலைகளையும் செய்யலானான். காலையில் இருள் பிரியும் முன்பே கூனன் எழுந்து விடுவான். கிணற்றிலிருந்து நீரைக் குடங்குடமாக இழுத்துத் தொட்டி, பரனை, அண்டா அனைத்திலும் நிரப்பி விடுவான். 'டப்டப்' என்று துணிகளைத் துவைக்கும் ஒலி எழுந்தவுடன் பூபதி புரண்டு படுப்பார். நடு நிசிக்குப்பிறகுதான் அவர் வந்து படுத்திருப்பார்.

''இந்தக் கூனனுக்கு உறக்கமே வராதா?'' என்று முணு முணுப்பார். நீலவல்லியும் அப்போது நன்றாகக் கண் ணயர்ந்திருப்பாள். அவள் மஞ்சத்திலும், சமையல் செய்யும் மூதாட்டி தரையிலுமாகப் படுத்திருப்பார்கள். அறையில் குத்துவிளக்கொன்று மங்கிய ஒளி வீசிக் கொண் டிருக்கும், அந்த இடத்தைக் கடக்கும்போது கூனன் சற்று நின்று பார்த்துவிட்டுத்தான் போவான். அப்படிப் பார்ப் பதற்கு முன்பு ஒரு முறை இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்ப்பான். தனக்குள்ளே மெல்ல சிரித்துக் கொள்வான். தன்னுள் கள்ளத்தனம் ஒன்று வளர்வதை அவன் உணர்ந் தான்.

''எந்தக் கோணத்தில் பார்த்தாலும் நீலவல்லி, அல்லி மலர்போல் அழகாக இருக்கிறாள்'' என்று முணுமுணுத் துக் கொள்வான்.

என் சகோதரிக்குப் பிறந்தபெண் இப்போது வளர்ந்து நீலவல்லியின் வயதை அடைந்திருப்பாள். நீலவல்லியைப் போல் அழகாக இருப்பாள். நீலவல்லியைவிட வயது கூடுதலாகவும் இருக்கலாம். நல்லபடியாக இருந்தால் அவளை எனக்குக் கல்யாணம் செய்து வைத்திருக்க மாட் டாளா? இதை நினைக்கும்போது கூனனுக்குச் சிரிப்பு வந்தது. உதட்டை மெல்ல மடித்துக் கொண்டு சிரித்தான்.

''கூனா என்ன, தனக்குத்தானே சிரித்துக் கொள் கிறாய்?'' என்று நீலவல்லி கூனனின் அருகே வந்து நின்று கேட்டாள். அவன் துணிகளை உலர்த்திக் கொண்டிருந் தான்.

'ஹிஹிஹி' என்று சிரிப்பதைத் தவிர வேறு அவனுக்குச் சொல்லத் தெரியாது.

''இந்தப் பட்டுப் புடவை உன்னுடையது தானே?'' என்று சம்பந்தமில்லாத கேள்வியை அவன் கேட்பான்.

நீலவல்லி, 'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்துவிட்டு, ''என்னுடையதுதான். இங்கே வேறு யார் இருக்கிறார்கள் பட்டுப்புடவையைக் கட்டிக் கொள்ள?'' என்று சொல்லி அவளும் சிரிப்பாள். இருவரும் சேர்ந்து சிரிப்பார்கள். அதற்கு என்ன பொருள் என்று இருவருக்கும் தெரியாது.

''கூனா, இந்தப் புடவையை உடுத்திக் கொண்டால் எனக்கு நன்றாக இருக்குமல்லவா?'' என்று நீலா கேட்பாள்.

கூனன் தலையைப் பலமாக ஆட்டுவான். பட்டுப் புடவையின் மென்மையை ஸ்பரிசித்துப் பார்ப்பான். நீலவல்லியின் கரங்களும் பட்டினைப் போல, மென்மையாக இருக்குமல்லவா?— தொட்டுப் பார்ப்போமா என்று எண்ணுவான். கையை மிக அருகே கொண்டு சென்று விடுவான். சட்டென்று தனக்குத்தானே 'ஹூங்கார'மிட்டு அடக்கிக் கொள்வான். கள்ளமனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்வான்.

''கூனா, இன்று இந்த செவ்வந்தி நிறப்புடவையை உடுத்திக்கொள்ளப் போகிறேன்'' என்று பளபளக்கும் பட்டுத் துகிலைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து நீலவல்லி கூனன் எதிரே நின்றாள்.

''ஆகா, உடுத்திக்கொள். என்னைக் கேட்பானேன்?'' என்று அவளைத் திரும்பிப் பார்க்காமல் கூறினான் கூனன்.

"எதற்காக உடுத்திக் கொள்ளப் போகிறாய் என்று எதிர்ப்பார்த்தேன்" என்று நிலா முத்துப் பற்கள் தெரிய நகைத்தவாறு கூறினாள்.

"எதற்காக?"

"என்னை நீ வண்டியில் மணிமங்கலத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும்"

"மணிமங்கலத்திற்கா?"

"குறுக்கு வழியாகப் போய்விடலாம்..."

"அங்கே என்ன?"

"அர்ச்சுனன் தபசு கூத்து நடக்கிறது. மிக நன்றாக இருக்கும்" என்று கூறிக் கன்னங்குழியச் சிரித்தாள் நீலா.

"தந்தை அனுமதிக்க வேண்டுமே."

"நான் கேட்டு விட்டேன். கூனன் அழைத்துச் சென்றால் போய்வா என்று கூறி விட்டார். அதனால் தான் உன்னைக் கேட்டேன்." என்று அவன் முதுகை மெல்லத் தடவினாள் நீலா.

ஆகா, அந்த ஸ்பரிசத்திற்குத் தான் எத்தனை சக்தி. மல்லிகை இதழ்கள் தூவப்பட்டனவா? அன்னப்பறவை யொன்று அவன் முதுகின் மேல் மெல்ல தன் உடலை உராய்கிறதா? சந்தனக் குழம்பெடுத்துத் தேவ மாதர்கள் அவன்மீது ஊற்றுகின்றனரா?

கூனன் 'ஹி ஹி' என்று நகைத்தான். அவளுடைய கரத்தை எடுத்துத் தன் கன்னத்தின்மீது வைத்துக் கொள்ளத் துடித்தான். தன் விழிகளின் மீது வைத்துக் கொள்ளத் துடித்தான். அவன் உடல் சிலிர்த்தது. ஜில்லென்று ஓர் உணர்ச்சி உடலெங்கும் பரவியது.

'ஹுங்காரம்' எழுகிறது, உடலை ஒரு முறை குலுக்கிக் கொண்டு சற்று நகர்ந்து "உன் தந்தையிடம் சென்று அனுமதி கேட்டு வருகிறேன்" என்றான்.

"ஏன், நான் சொல்வதில் நம்பிக்கை இல்லையா? நான் சொன்னால் கேட்க மாட்டாயா?" என்று நீலா சிணுங்கினாள்.

"ஓ கட்டாயம் கேட்பேன். வான மண்டலத்தை எட்டிப்பிடித்து வரச் சொல்கிறாயா? வருகிறேன். ஆனால் மணிமங்கலத்திற்கு என்றால் குறுக்கு வழியாகப் போக வேண்டுமே! ஆபத்து நிறைந்த இடம். எதற்கும் குறுவாள் ஒன்றாவது வேண்டும். உன் தந்தையிடம் கேட்டு வாங்கி வருகிறேன்" என்றான்.

நீலவல்லி ஒன்றும் மறுமொழி கூறவில்லை. மணிமங்கலத்திற்குக் கூத்துப் பார்க்கப் போவதற்கு தந்தை சம்மதிக்க மாட்டார் என்று அவளுக்குத் தெரியும். தந்தையிடம் சொல்லாமல் போய் வருவோமென்று அவள் திட்டமிட்டது நடக்கவில்லை. கூனன் நீலாவின் தந்தையிடம் சென்றான்.

திரும்பி வரும்போது கூனன் என்ன செய்தி கொண்டு வருவானோ என்று பயத்துடன் எதிர்பார்த்தாள். கூனன் குறுவாளை ஆட்டியபடியே வந்தான். "தந்தை அனுமதி கொடுத்து விட்டார். புறப்படு" என்றான் கூனன்.

நீலா சிறு குழந்தையைப் போல் குதித்தாள் "என் சமத்துக் கூனா" என்று அவன் முதுகின் மீது சாய்ந்தாள். "தந்தை வேறு என்ன சொன்னார்?" என்று கேட்டுத் துளைத்து எடுத்து விட்டாள் நீலா.

11

மணிமங்கலத்திற்குச் சென்று பாதி வழியிலேயே கூனன் நீலாவை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து விட்டான். வழியில் ஏதும் பேசாமல்மௌனயாகவேகூனன் வந்தான். அவன் உள்ளம் அமைதியிழந்திருந்தது நீலாவுக்கு உள்ளத்தில் புதுக் குதூகலம் பொங்கி வழிந்தது.

''கூனா, ஏன் பேசாமல் வருகிறாய்? ஒரு பாட்டுப் பாடேன்'' என்று நீலா அவனைச் சீண்டினாள்.

நீலாவின் மீது அவனுக்குக் கோபங்கோபமாக வந்தது. ஒரு சமயம் பெருமையாகக் கூட இருந்தது முதன் முதல் அவளைச் சந்தித்ததிலிருந்து அவனுடைய இதயத்தில் மறைந்திருந்த ஏதோ ஒன்று மெல்ல மெல்ல விசுவரூபம் எடுப்பது போன்ற உணர்வு அவளுக்குத் தோன்றியது. உறங்கும் போது, தனியே உட்கார்ந்திருக்கும்போது ஒரு சமயம் யாரோ அவன் உடல் முழுவதும் பனிக் கட்டியைத் தூவுவது போலிருக்கும். சில சமயம் தணல் கட்டியைத் தூவுவது போலிருக்கும். கீழே விழுந்து மண் தரையில்புரள வேண்டும் போல் தோன்றும். அருகேயுள்ள ஏரியில் குதிக்க வேண்டும் போல் தோன்றும். 'ஓ ஓ' வென்று கூச்சலிட வேண்டும் போல் தோன்றும்.

ஏன் இப்படியெல்லாம் மனம் படாதபாடுபடுகிறது என்று அவனுக்குப் புரியவில்லை. யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை. மாலையில் வண்டியை ஓட்டிச் சென்ற போது நீலாவிடம் கேட்டுவிட்டான்.

நீலா களுக்கென்று சிரித்து விட்டாள்.

''ஏன் சிரிக்கிறாய் நீலா, நான் கேட்டது பைத்தியக் காரத்தனமாக இருக்கிறதா?'' என்று கூனன் கேட்டான். அவள் அருகே சென்று அமர்ந்து கேட்க வேண்டும் போல் தோன்றியது. மாட்டின் முகக் கயிறை விட்டு விட்டுஎப்படி வண்டிக்குள் செல்ல முடியும்?

''உன் பேச்சு பைத்தியக்காரத்தனமாக இல்லை.மிகவும் அநுபவ பூர்வமாக இருக்கிறது'' என்றாள் நீலா.

''அநுபவம் என்றால்?''

''அநுபவம் என்றால் என்னவென்று சொல்வது? காதால் கேட்டதை, கண்ணால் பார்த்ததைத் தொட்டு ணர்வதுதான் அநுபவம்'' என்றாள் நீலா.

''நீ எப்படி அறிந்து கொண்டாய்?'' என்று கூனன் கேட்டான்.

''நான் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. சமையல் செய்து போடும் கிழவி இருக்கிறாளே அவள் கதை கதை யாகச் சொல்வாள்.''

''என்ன கதை சொல்வாள்?''

''பாரதக் கதை சொல்வாள். தமயந்தி கதை சொல் வாள். சகுந்தலை கதை, தாரையின் கதை சொல்வாள்.'

''ஆமாம், அந்தக் கதைக்கும் அநுபவத்திற்கும் என்ன சம்ப்நதம்?''

''எவ்வளவோ சம்பந்தமிருக்கிறது. உனக்கென்ன வய திருக்கும்?'' என்று நீலா சட்டென்று கேட்டு விட்டாள்.

கூனன் 'ஹி ஹி ஹி' என்று சிரித்தான். ஆமாம், அவ னுக்கு என்ன வயதிருக்கும்? அவனுக்கே தெரியாது. பல வசந்தங்கள் வந்து போய்விட்டன. மழைக்காலங்கள் பல வந்து சென்று விட்டன. கடுங் கோடை வந்து வந்து போயிருக்கின்றன.

''என் வயசு இருக்கட்டும்; உன் வயசு என்ன நீலா?' என்று கூனன் கேட்டான்.

நீலாவின் முகத்தில் நாணம் படர்ந்தது. 'நீதான் சொல்லேன், எனக்கு என்ன வயதிருக்குமென்று?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன்னைப் பார்த்தால் என் சகோதரியின் மகள் போலிருக்கிறாய்?''என்றான் கூனன்.

''உன் சகோதரியின் மகளை நீ பார்த்திருக்கிறாயா?''

''இல்லை, இல்லை. ஆனால், இப்படித்தான் அழகாயிருப்பாள் என்பது என் முடிவு.''

''அப்படியென்றால் நான் அழகாயிருக்கிறேன் இல்லையா?''

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் கூனனின் உடல் முழுவதும் ஏனோ வியர்த்தது.

'ஹிஹிஹி' என்று சிரித்தான்.

''பார்த்தாயா, நான் அழகாயிருக்கிறேன் என்று நீ நினைக்கிறாயல்லவா, அதுதான் அநுபவம்'' என்றாள் நீலா.

கூனன் வியப்பு நிறைந்த விழிகளுடன் அவளைப் பார்த்தான். இந்தச் சின்ன வயதில் இவ்வளவு திறமை இவளுக்கு எப்படி வந்தது? தாயற்றவள்: ஆனால் வாதத்தில்திறமைப் பெற்றிருக்கிறாள். அநுபவத்தைப் பற்றிப் பேசுகிறாள்.

''நீலா, உன்னைப் போன்ற கல்வி அறிவு எனக்கு இல்லை. வாழ்நாளைச் சிறையிலேயே கழித்து விட்டேன். 'எனக்கு அநுபவம் எப்படி வரும்?'' என்றான்.

''நானும் வீடெனும் சிறையில்தான் இதுவரை காவல் கழித்து வருகிறேன். என் தந்தை மிகக் கண்டிப்பானவர் என்பது உனக்குத் தெரியாதா?'' என்றாள் நீலா.

''அப்படியென்றால் இவ்வளவு துணிவு, அறிவு எப்படி வந்தது?''

நீலா மறுமொழி கூறவில்லை. மெல்ல நகைத்தாள்.

''கூனா, பெண்களுக்கு உலக அநுபவம் மிகவும் சீக்கிரம் புரிந்துவிடும். ஒருவர் சொல்லித் தெரிவதில்லை. ஆடவர் நினைப்பதுபோல பெண்கள் ஞான சூன்யங்களல்லர். நான் பெரிய மனுஷி ஆனவுடனேயே இயற்கையாகவே பல விஷயங்கள் எனக்குப் புரியத் தொடங்கிவிட்டன'' என்று நீலா சொன்னாள். கூனனை ஓர் அந்நியன் என்று நினைக்காமலேயே பேசினாள்.

''பெரிய மனுஷியானவுடன் உனக்குப் பல விஷயங்கள் புரிந்தன. என் சகோதரிக்கோ துன்பம்தான் தொடங்கியது. கல்யாணத்திற்கும் போட்டி போட்டுக் கொண்டு இருவர் வந்தனர்.'' என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

''எனக்கும்தான் என் தந்தை கல்யாணத்திற்கு நிச்சயம் செய்திருக்கிறார்'' என்றாள் நீலா.

''ஆகா; அப்படியா! மிகவும் நல்ல செய்தி சொன்னாய் நீலா. சீக்கிரமாக கல்யாண விருந்தொன்று இருக்கிறது என்று சொல்'' என்றான் கூனன். அவனுடைய வெளித் தோற்றத்தில் மகிழ்ச்சி புலப்பட்டதே தவிர, உள்ளூர ஏனோ ஒருவித ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்பட்டன.

நீலா உடனே ஒன்றும் பேசவில்லை. பிறகு, ''கூனா. ஒரு செய்தி சொல்வேன். அதை என் தந்தையிடம் சொல்லி விடக்கூடாது?'' என்றாள்.

''என்ன செய்தி, சொல்லேன், என்னை நீ நம்பலாம்'' என்றான் கூனன்.

''சத்தியமாகச் சொல்லக் கூடாது'' என்று உறுதி கேட்டாள் நீலா.

''இதென்ன, இதற்கெல்லாம் சத்தியம் செய்யச் சொல்கிறாய் நீலா. அஸ்தமன வேளையில் அப்படியெல்லாம் கேட்காதே'' என்று கூறி, நீலாவின் முகத்தைப் பார்த்தான். மங்கிய வெளிச்சத்தில் அவள் முக உணர்ச்சி ஏதும் புலப்படவில்லை.

நீலா, அவன் கரத்தைச் சட்டென்று பிடித்தாள். ''உம், சத்தியம் செய்து கொடு'' என்றாள்.

ஆ! அந்தக் கரங்கள் தாம் அல்லிக் கொடியால் ஆனதோ? பொதிகையின் சந்தனம் கரத்தின் வழியே பொங்கிப் பிரவகிக்கின்றதோ? வானத்து வெண் பஞ்சுக் கூட்டங்கள் ஒன்றுசேர்ந்து அவன் கரத்தைப் பற்றியுள்ளனவோ?

கூனன் சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் திகைத்தான். அவள் கரத்தை அப்படியே விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. அப்படியே அழுத்தமாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றியது. அப்படியே...அப்படியே...

வண்டி நடுச் சாலையில் நின்று கொண்டிருந்தது.

''கூனா, உம்...உன் உறுதியைச் சொல்'' என்று நீலா வற்புறுத்திக் குரல் கொடுத்துத் தன் கரத்தைத் தன்பக்கம் இழுத்துக் கொண்ட பிறகே அவன் தன் நிலையை உணர்ந்தான்.

ஓர் ஹூங்காரம் அவனுள் எழுந்தது. அவன் உடல்ஒரு முறை சிலிர்த்து ஓய்ந்தது.

''சொல், நீலா, நான் ஏதும் உன் தந்தையிடம்தவறாக சொல்லிவிட மாட்டேன்; உறுதி, உறுதி'' என்றான்.

''கூனா, எனக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளையை எனக்குப் பிடிக்கவில்லை'' என்று நீலா கூறியவுடன் கூனன் 'ஹோஹோ' என்று பெரிதாகச் சிரித்துவிட்டான்.

'பிடிக்காத மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது; அதுதான் சரி. இதில் நீ பயப்பட வேண்டியது ஒன்றும் தவறில்லை'' என்றான் கூனன்

நீலா நடுங்கினாள். ''கூடாது, கூடாது. கூனா, அதனால் தான் உன்னிடம் உறுதி பெற்றேன். என் தந்தைக்குத் தெரிந்தால் என்னை வெட்டிப் போட்டு விடுவார்''என்று கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது. விம்மல் ஒலியும் எழுந்தது.

''பயப்படாதே நீலா, நான் சொல்ல மாட்டேன் நான் உன் பக்கம்'' என்று கூறிக்கொண்டு அவள் அருகே நகர்ந் தான். அவள் அழுகிறாள் என்று எண்ணிய கூனன் அவள் கண்களைத் துடைத்தான்.

நீலா அதை விரும்பவில்லை. அவன் கரத்தை மெல்ல நகர்த்தி, ''எனக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை வயதானவர்'' என்றாள்.

''வயதானவர்களை இளம்பெண்கள் விரும்பமாட் டார்களா?'' என்று கூனன் கேட்டான்.

நீலா 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

''எனக்குத் தெரியாது நீலா. உனக்குத்தான் அநுபவம் இருக்கிறது'' என்றான்.

''ஐயோ, கூனா! இதிலெல்லாம் அநுபவம் எனக்குக் கிடையாது.'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

''சரி,சிரிக்காதே! வயதான மாப்பிள்ளையை உனக்குப் பிடிக்கவில்லை. அப்படியென்றால் உனக்கு யாரைப் பிடிக் கிறது?'' கூனன் கேட்டான்.

வண்டி சென்று கொண்டிருந்தது'ஜல்ஜல்' என்ற ஓசை யுடன்.

நீலா மறுமொழி கூறவில்லை. இருள் படர்ந்தது. வானத்தே நிலவு உதயமாகியது. இருபுறமும் அடர்ந்த மரங்கள் நிறைந்த சாலைவழியே வண்டி சென்றது. பிறகு குறுக்கு வழியாக, ஓர் ஓடக்கரையைக் கடந்து செல்ல வண்டி திரும்பியது.

ஓடையில் நீர் சிறிதளவுதான் ஓடியது. நீரின் சலசலப்பு ஓசையும், காற்றில் மரங்கள் மெல்ல அசையும் ஓசையும், வானத்தே காயும் நிலவும், அந்த இடத்து அமைதியும் அங்கேயே தங்கி விடலாமென்ற உணர்ச்சியை ஏற்படுத்தின.

''கூனா, கூனா'' என்ற குழைவான குரலில் நீலா கூனனின் அருகே நெருங்கி, ''இங்கே நாம் சிறிது நேரம் தங்கி விட்டுச் செல்லலாமா?'' என்று கேட்டாள்.

காற்றில் மெல்லிய மணம் பிறந்து வந்தது. காற்று உடலைத் தழுவும் போது சிலிர்ப்பு ஏற்பட்டது.

''எதற்கு, ஏன்?'' என்று கூனன் கேட்கவில்லை. நீலா துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினாள். ஆடையைத் தூக்கிக் கொண்டு ஓடினாள். முழங்கால் வரையில் ஓடையின் நீர் நனைக்க அவள் சிறு குழந்தைபோல் கூவென்று கத்திக்கொண்டு ஓடினாள்.

அவள் குரல் கேட்டு வந்தானோ, அவனே அங்கே தற்செயலாக வந்தானோ இளம் வாலிபன், ''நீலா வந்து விட்டாயா?'' என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தான்.

கூனன் வண்டி மாடுகளை மரவேர் ஒன்றில் கட்டி விட்டு உட்கார்ந்து கொண்டான். யார் அந்த இளைஞன் என்று கூனன் மங்கிய இருளில் உற்று நோக்கினான்.

நீலாவும் அந்த இளைஞனும் கைகோர்த்துக் கொண்டு அருவியிலேயே கால் பதியச் சிறிது தொலைவு ஓடினார்கள். பிறகு மங்கிய ஒளியில் அவன் அவளது இடையை அணைத்துக் கொள்ள அருகேயுள்ள மரங்களின் மறைவுக்கு இருவரும் சென்றனர்.

கூனனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்கள் போன திசையையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். இருள் கவிழ்ந்து இரண்டு நாழிகை ஆகியிருக்கும். நட்சத்திரங்கள் கண்சிமிட்டத் தொடங்கிவிட்டன

கூனன் தன் குறுவாளைக் கையில் எடுத்துக் கொண்டான். அவனிடம் சிறைக்கூடத் தலைவர் பெரும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். அதிலிருந்துத் தவறி விடலாமா!

மணிமங்கலத்துக்கு, நீலா கூத்துப் பார்க்கச் செல்ல விரும்புகிறாள் என்று கூனன் தலைவரிடம் கூறியவுடனேயே, ''கூனா, நீலாவின் ஆசையைத் தடுக்க நான் விரும்பவில்லை. அவள் தாயில்லாப் பெண். நீ அவளை ஜாக்கிரதையாக அழைத்துப்போய்த் திரும்பவும் அழைத்து வா. கூத்து முடியும் வரையில் நீங்கள் இருக்க வேண்டாம். விரைவில் திரும்பி வந்துவிடுங்கள்'' என்று கட்டளையிட்டு விட்டார்.

அவளை ஜாக்கிரதையாக அழைத்து வந்துவிட வேண்டும் என்ற கவலை கூனனை ஆட்கொண்டது.

''நீலா'' என்று உரத்துக் குரல் கொடுத்தான். அருகே புதரிலிருந்து முயல் ஒன்று தடதடவென்று ஓடியது. காய்ந்த சருகுகளின் மீது அழுந்த அழுந்த அடியெடுத்து வைத்துக் கொண்டு ''நீலா, நீலா'' என்று கூவினான். தங்கள் அமைதியைக் கெடுத்தது போல் கூடுகளிலிருந்து பறவைகள் சிதறி ஓடின.

ஓடையைக் கடந்து கிராமத்து மக்கள் சிலர் பெண்டு பிள்ளைகளுடன் வந்துகொண்டிருந்தனர். ''இருட்டிவிட்டது, சடுதியில் வா'' என்று குடும்பத் தலைவன் மனைவியைத் துரிதப்படுத்தினான். கூனன் நின்று அவர்களைத் திரும்பிப் பார்த்தான். பிறகு மீண்டும் 'நீலா, நீலா' என்று கூவினான்.

ஓடைக்கரை வழியே சிறிது தூரம் நடந்து சென்றான். நீலா எங்கே இருக்கிறாள்—''ஐயோ, நீலா எங்கே?'' என்று வாய்விட்டு அலறினான் கூனன்.

இங்கும் அங்கும் ஓடினான். தலையில் கையை வைத்துக் கொண்டு மரவேர் ஒன்றில் அமர்ந்து விட்டான். அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

''ஐயோ, நீலா இல்லாமல் வீடுதிரும்பினால் என்னைத் தலைவர் கொன்று போட்டு விடுவாரே'' என்று வாய் விட்டுப் புலம்பினான். தன் தலையில் 'பட்டுப்பட்டென்று' அடித்துக் கொண்டான். மீண்டும் வண்டி நிறுத்தப்பட்டிருக்கும் இடம் வரையில் ஓடினான். ஒன்றும் புரியாமல் திகைத்தான். திணறினான்.

''ஓ, நீலா!'' என்று தனக்குள்ள பலம் முழுவதையும் கொட்டி அலறினான்.

யாரோ, கலகலவென்று சிரிக்கும் குரல் கேட்டது. கூனன் ஒரே பாய்ச்சலாக ஓடினான்.

நீலா நகைத்தவாறு நின்று கொண்டிருந்தாள். ''நீலா, நீலா எங்கே போய்விட்டாய்? நீ செய்வது உனக்கே நன்றா யிருக்கிறதா?'' என்று கூனன் கோபத்துடன் கேட்டான்.

அவனுக்கு அப்போது ஏற்பட்ட ஆத்திரம் அவள் கழுத்தை அப்படியே அழுத்திக் கொன்று விடலாம் என்று கூடத் தோன்றியது. நீலா ஆடையைச் சரிபடுத்திக் கொள்கிறாள் மார்க்கச்சை முடிச்சுகளை சரிசெய்து கொள்கிறாள். செவ்வந்தி நிறப்புடவை சீர்குலைந்து காணப்படுவது தெரிகிறது. ஓடையில் இறங்கி ஓடியதால் புடைவை பாதிக்கு மேல் நனைந்திருக்கிறது.

''பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்து ஆடையை உடுத்தி வந்தாளே, இதற்குத்தானா? என்று கேட்க வேண்டும் போல் தோன்றியது கூனனுக்கு.

''நனைந்த ஈரம் வீடு போவதற்குள் காய்ந்து விடும்'' என்று நீலா சொன்னாள்.

''இதயத்தில் இப்போது ஏற்பட்ட சந்தேகக் கறை காயவே காயாதே'' என்று கூனன் நினைத்தான். சொல்லவில்லை.

''ஓடையில் சலசலவென்று நீர் ஓடுகிறது'' என்றாள் நீலா.

''நீ எங்கே ஓடினாய்?'' என்று கூனன் கேட்கவில்லை.

''தண்ணீரில் அமிழ்ந்து நீராட வேண்டும் போல் தோன்றியது'' என்றாள் நீலா.

''நீ யாருடன் ஓடி ஆடினாய்?'' என்று கூனன் கேட்கவில்லை.

''என்னைக் கூப்பிட்டாயா கூனா?'' என்று நீலா கேட்டாள்.

''இந்த வனப்பகுதிக்குக் காது இருந்தால் அது நான் ஓலமிட்டதைக் கூறும்'' என்று கூனன் கூறவில்லை.

''இன்னொரு நாளைக்கும் வரவேண்டும் கூனா'' என்று நீலா கூறிய போது மட்டும், ''நீலா, எவ்வளவு நேரமாக என்னைப் பரபரக்க வைத்து விட்டாய்?'' என்று மட்டும் கூனன் சொன்னான்.

''என்னைக் காணோம் என்று பயந்து விட்டதால், நீ இவ்வளவு நேரம் வாயே திறக்கவில்லையா?'' என்று நீலா அவன் முகத்தை நேருக்கு நேர் பார்க்க விரும்பாமல் கேட்டாள்.

''பயம் இல்லை, கோபம்'' என்றான் கூனன்.

''கோபமா, ஏன்?'' என்று நீலா கேட்டாள். அவள் குரலில் குழைவு இருந்தது. தூக்கம்வரும்போல்இருந்ததால் வண்டிச் சக்கரத்தின் மீது மெல்லச் சாய்ந்து கொண்டாள்.

''மணிமங்கலத்தில் கூத்துப் பார்ப்பதற்காகப் புறப் பட்டோம். ஓடைக் கரையிலேயே கூத்து நடத்திவிட்டாயே 'அர்ச்சுனன் தபசை' நான் பார்க்கவில்லை'' என்றான் கூனன்.

''கூனனின் தபசு நடந்ததோ? கூனா, என்னைக் காண வில்லையே என்று பயந்து விட்டாயா?'' என்று நீலா மீண்டும் கேட்டாள, விழிகளைச் சுழற்றியபடி.

''கூனன் வண்டியில் காளைகளைப் பூட்டினான். வண்டி மறுபடியும் வீட்டை நோக்கித் திரும்பியது. ''கூனா, மணி மங்கலம் போகவில்லையா?'' என்று நீலா கேட்டாள்.

''இங்கேயே நேரமாகி விட்டது'' என்று ஒரே வார்த் தையில் கூனன் சொன்னான்.

''கூத்துப் பார்க்காமல் ஏன் திரும்பி விட்டீர்கள் என்று என் தந்தை கேட்டால்?''

''பார்த்து விட்டேன் என்று சொல்கிறேன். ஓடைக் கரையில்தான் கூத்துப் பார்த்து விட்டேனே!'' என்றான் கூனன் சிரித்தவாறு. அந்தச் சிரிப்பின் பின்புறத்தில் ஆத்திரம் பொங்கியது.

நீலா திடுக்கிட்டாள் ஓடைக்கரை ஓரமாக அந்த இளைஞனுடன் சென்றதை கூனன் சொல்லிவிடுவானோ? அவனுடன் இருளில் மறைவான இடத்தில தன்னை இழந் திருந்த நிலையைக் கூனன் பார்த்திருப்பானோ? அதைச் சொல்லிவிடுவானோ?

கூனன் ஏதும் பேசவில்லை. வண்டியைப் பூட்டினான். நீலா அமர்ந்து கொண்டாள், சிறிது நேரம் கழிந்த பிறகு கூனனே பேசினான்.

''நீலா, நான் ஒன்று கேட்கிறேன் சொல்வாயா?'' என்று கேட்டான்.

நீலாவின் பயம் விலகியது. கூனன் தன்னைச் சிக்கு வைத்துவிட மாட்டான் என்று நம்பினாள்.

''கேள், கூனா?'' என்றாள் நீலா.

''உன் தந்தை உனக்குப் பார்த்து வைத்திருக்கும் மாப் பிள்ளை உனக்குப் பிடிக்கவில்லை, அப்படித்தானே?''

''ஆமாம், கூனா. அதுதான் சொன்னேனே. என் தந்தை யிடம் சொல்வதில்லை என்று நீ சத்தியம் செய்து கொடுத் திருக்கிறாய்'' என்றாள் நீலா.

''அது வேறு விஷயம். அந்த மாப்பிள்ளையைப்பிடிக்க வில்லைஎன்றாய். வேறு யாரை உனக்குப் பிடித்திருக்கிறது அதைக் கேட்டேன் நீ சொல்லவில்லை?'' என்று கூனன் கேட்டான்.

நீலா திடுக்கிட்டாள். நாம் நினைப்பதுபோல் கூனன் சாதாரண ஆளில்லை; விவரம் தெரிந்த ஆள் என்று புரிந்து கொண்ட நீலா மறுமொழி சொல்லாமல் மௌனமாயிருந் தாள்.

வண்டி ஜல்ஜல் என்ற ஒலியுடன் சென்று கொண் டிருந்தது ''என்ன நீலா பேச்சைக் காணவில்லை?'' என்றான் கூனன்.

நீலா மெல்லச் சிரித்தாள். ''அந்த மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை என்பதால் வேறு ஒருவரைப் பிடித்திருக்க வேண்டுமா?'' என்று கேட்டாள்.

கூனனால் இதற்கு மறுமொழி கூறமுடியவில்லை.

''என்ன, கூனா பேச்சைக் காணவில்லை?'' என்றாள் நீலா.

''பேசுவதற்கு நிறைய இருக்கிறது'' என்றான் கூனன்.

''பேசு, பேசிக்கொண்டே வந்தால்தான் உற்சாகமாயிருக்கும். இல்லாவிடில் தூக்கம் வந்துவிடும்'' என்றாள் நீலா.

''தூக்கம் வருமா?''

''ஆமாம்; களைப்பாக இருக்கிறது.''

''களைப்பா, புறப்படும்போது மிகவும் உற்சாகமாக இருந்தாயே! கூத்தைக் கூடப் பார்க்கவில்லையே!''

''இப்போதும் உற்சாகத்திற்கு ஏதும் குறைவில்லை. மிகவும் குதூகலமாயிருக்கிறேன். ஓடைக் கரையிலேயே இருக்க வேண்டும் போல் தோன்றுகிறது, ஆனால்...''

''ஆனால்...நான் உன்னைக் கூப்பிட்டு உன் குதூகலத்தைக் கெடுத்துவிட்டேனில்லையா?'' என்று கூனன் கூறவும் நீலா திடுக்கிட்டாள். தனது அதிர்ச்சியைப் புலப்படுத்தாமல், ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, கூனா எனக்கு அந்த இயற்கைச் சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது. நான் வெளியுலகிற்கு எங்கே வருகிறேன்: சிறைச்சாலைக்கு அருகேயுள்ள வீடும் சிறையைப் போலத்தான். நீதான் பார்க்கிறாயே? சுற்றிலும் வீடே இல்லை. கோவூர்-தெருக்களுக்கு செல்ல நெடுந் தொலைவு நடக்கவேண்டும். மனிதர்களிடம் பழகுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. அதனால் ஓடைக் கரைக்கு வந்தவுடன் உற்சாகமாயிருந்தது''

''ஓடைக் கரையில் பழகுவதற்கு மனிதர்கள் எங்கே கிடைத்தார்கள்? ஒரே ஒரு மனிதர்தானே—'' கூனன் கேட்டவுடன் நீலா திகைத்தாள்.

''என்ன சொல்கிறாய் கூனா?''

''ஒரே ஒரு மனிதன் என்றவுடன் என்னைக் கூறிக் கொள்ளவில்லை. அந்த இளைஞனைத்தான் கூறினேன்.

அவன் யார் நீலா? நீயும் அவனும் ஓடையிலேயே நடந்து சென்றீர்கள். அவன் உன்னை மிக நெருங்கி நடந்தான். இருவரும் மரங்கள் மறைவில் சென்றீர்கள்...'' கூனன் மெல்ல, அழுத்தந்திருத்தமாகவே பேசினான்.

''கூ...னா...''—நீலா கூவினாள்.

''நீலா, மரங்களுக்கு நடுவில் ஒரே இருட்டாக இருந்திருக்குமே. இருளில் என்ன செய்தீர்கள்?'' கூனன் வெள்ளை உள்ளத்துடன் கேட்டான்.

''ஓ. கூனா...நீ கொஞ்ச நேரம் பேசாமலிருக்க மாட்டாயா?'' நீலா அதட்டுவதுபோல் கேட்டாள்.

''அவன் யார் நீலா? நீ வரப்போவது அவனுக்குத் தெரியுமா? நீ அவனை வரச்சொல்லியிருந்தாயா? அவன் உன் தந்தைக்கு அறிமுகமானவனா? நீலா, நீலா என்று தொண்டை வலிக்கக் கூவினேன். 'இதோ இருக்கிறேன்' என்று நீ மறுமொழி கொடுத்திருந்தால் நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். அவனும் நீயும் பேசிக்கொண்டேயிருந்தீர்களா? இருட்டில் பார்வை தெரியாது, பேச்சுக் கூடக் கேட்காதா?'' கூனன் பேசுவதை நடுவில் தடுத்த நீலா.

''கூனா, நீ சிறிது நேரம் சும்மாயிருக்க மாட்டாயா?'' என்றாள் கடுமையான குரலில்.

'' நான் சும்மாயிராமல் என்ன செய்து விட்டேன்? நீலா? அந்த இளம்பிள்ளையைப் போல் உன் இடுப்பை சுற்றி வளைத்தேனா? நீலா, நீலா, அவன் யாரென்று சொல்ல மாட்டாயா? அவனும் நீயும் இருளில் என்ன பேசிக்கொண்டீர்கள்? அதை என்னிடம் சொல்லக்கூடாதா?'' கூனன், வண்டியை நிறுத்திவிட்டு அவள் பக்கம் திரும்பிக் கேட்டான் கள்ள உள்ளம் விஸ்வரூபமெடுக்கத் தொடங்கியது. அவள் உள்ளம் நடுங்கியது. சிலிர்த்தது. மார்பு படபடத்தது.

"கூனா, நீ அதைப்பற்றியெல்லாம் கேட்கக் கூடாது. உன்னிடம் சொல்லக் கூடியவை ஏதுமில்லை." என்று நீலா கண்டிப்பான குரலில் பேசினாள்.

"அப்படிப்பட்ட ரகசியமா?" என்று கேட்ட கூனன் 'ஹிஹிஹி' என்று சிரித்தான்.

"நீலா..." என்றான் கூனன்.

"என்ன; வண்டியை ஏன் நிறுத்திவிட்டாய்?" என்று அதட்டினாள் நீலா.

"நீலா, அவனும் நீயும் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள். சொல்ல மாட்டாயா?" என்று கேட்டுக் கொண்டே கூனன் தாவி அவள் கரத்தைப் பிடித்து, அவள் எதிர்பாராமல் அணைத்துக் கொண்டான்.

நீலா அவனைப் பலங்கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளி, "கூனா, என்ன காரியம் செய்து விட்டாய்?" என்று கூவினாள்.

கூனன் உடல் சிலிர்த்தது. ஹுங்காரம் ஒன்று எழுநதது. தான் செய்யத் துணிந்தது தவறு என்பதை உணர்ந்தான். திரும்பி ஏர்க்காலில் உட்கார்ந்துவண்டியை ஓட்டலானான்.

"நீலா, உன் தந்தையிடம் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

"நீ சத்தியம் செய்திருக்கிறாய். சத்தியத்தையும் மீறும் ஒழுக்கமற்றவனாகி விடமாட்டாய் என நினைக்கிறேன்" என்று நீலா அழுத்தந் திருத்தமாகப் பேசினாள்.

"நான் உறுதி கொடுத்தது இதற்கு அன்று. நீ இரகசியமாக அந்த இளைஞனுடன் சந்தித்ததை உன் தந்தையிடம் சொல்லப் போகிறேன். கூத்துப்பார்க்கப் புறப்பட்டு ஓடைக் கரையிலே வண்டியை நிறுத்தச் சொன்னதைப் பற்றிச் சொல்கிறேன். அந்த இளைஞனனும் நீயும்..."

என்று கூனன் கூறி முடிப்பதற்குள் நீலா, "கூனா, பயமுறுத்த நினைக்காதே! நீயும் சொல்லு. நானும் சொல்கிறேன். நீ சிறிது நேரத்திற்கு முன்பு செய்யத் தகாத செயலைச் சொல்கிறேன். நீ இரையைத் தின்ன நீண்ட நாட்களாக எதிர் பார்த்துக் கொண்டிருப்பதைப் பற்றி என் தந்தையிடம் சொல்லிவிடுகிறேன். மனத்திற்குள்ளேயே தவறாக நினைத்துவந்த நீ சரியான சந்தர்ப்பம் கிடைத்தவுடன் ஓடைக்கரையில் தவறாக நடக்க முயன்றதைச் சொல்லி விடுகிறேன். "கூத்து வேண்டாம்; வண்டியை உடனே வீட்டை நோக்கித் திருப்பு" என்று நான் வற்புறுத்தினேன். கேட்க மறுத்ததால் குறுவாளை எடுத்து நெஞ்சுக்கு நேரே நீட்டினேன். பிறகுதான் கூனன் சம்மதித்தான் அப்பா, கூனனை வீட்டோடு சேர்க்கும் போதே சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. இப்போது தவறாக நடந்துகொண்டு விட்டானே. அவன் தன் தவறை மறைக்க என்மீது பழியைச் சுமத்துகிறான் என்று சொல்லி அழுவேன்" என்று கூறி, சடக்கென்று கூனனின் இடையில் செருகியிருந்த குறுவாளைப் பறித்துக் கொண்டாள்.

கூனனால் ஒன்றுமே பேசமுடியவில்லை. அவன் பேசவும் விரும்பவில்லை. ஒரு கணத்தில் மனந்தடுமாறி அடாது செய்து விட்ட செயலை எண்ணும்போது அவனுக்கு வெட்கமாகவே இருந்தது. இப்படியொரு அசுர எண்ணம் உண்டாக என்ன காரணம் என்று நினைத்தான். அப்படியே வண்டியினின்று குதித்துவண்டிச் சக்கரம் தன்மீது உருளுமாறு செய்து கொள்ளலாமா என்று தோன்றியது. மீண்டும் நீலாவிடமிருந்து அந்தச் சிறு வாளைப் பறித்துத் தன்னைத் தானே குத்திக்கொண்டு மாய்ந்து விடலாமா என்று தோன்றியது.

கூனன் மறுமொழி பேசாமல் வண்டியை வேகமாக ஓட்டிக்கொண்டு வந்தான்.

வீட்டை வண்டி நெருங்கிக் கொண்டிருந்தது. சிறைச்சாலையின் உயர்ந்த கோபுரம், நிலவொளியில் தெரிந்தது.

நீலா பேசினாள். ''கூனா, நான் சொன்னதைக் கேட்டு உனக்கு வருத்தமா?'' என்று கேட்டு அவனது தோளை மெல்லத் தடவினாள்.

கூனன் உடல் சிலிர்த்தது. மெல்ல அவள் கரத்தை விலக்கிவிட்டு ''நீலா, என்னைப் பொறுத்தருள வேண்டும் உன்னிடம் தவறாக நான் நடந்து கொண்டதற்கு என்னை அந்தக் கத்தியால் குத்திவிடு. ஏரிக்கரைமீது வண்டி செல்லும்போது நானே வண்டியிலிருந்து ஏரியில் குதித்து உயிரை விடுகிறேன். தவறி விழுந்துவிட்டான் என்று சொல்லிவிடு,'' என்று கூனன் கூறிவிம்மி விம்மி அழுதான்.

நீலா அவன் விழிநீரைத் தன் சேலைத்தலைப்பால் துடைத்தாள்.

''கூனா, நாம் ஓர் ஒப்பந்தத்திற்கு வருவோம். நீயும் நடந்ததை என் தந்தையிடம் சொல்லாதே நானும் சொல்ல மாட்டேன். இது சத்தியம்'' என்று கூறி குறுவாளை அவனிடமே கொடுத்து விட்டாள்.

வண்டி வீட்டு வாசலில் வந்தபோது நீலாவின் தந்தை வீட்டு வாசலில் நின்றிருந்தார்.

''அதற்குள்ளா கூத்து முடிந்துவிட்டது?'' என்று கேட்டார்.

''கூத்து எங்களுக்குப் பிடிக்கவில்லை'' என்றான் கூனன்.

அப்பாடா என்று பெருமூச்சு விட்டாள் நீலா. அவன் காதில் மட்டும் விழும்படியாக, ''கூனா, நான் சொன்னது நினைவிருக்கட்டும். ஒப்பந்தத்தை நாம் நிறைவேற்று வோம்'' என்றாள்.

12

கூனனுக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. நீலாவின் முகத்தில் விழிக்கவே பிடிக்கவில்லை. நீலாவின் பேச்சும் நடவடிக்கையும் அவனுக்குப் பயத்தை அளித்தன.

காலையில், தலைவர் சிறைக் கூடத்திற்குப் புறப்படும் போது கூனனும் அவருடன் சென்றான்.

''என்ன, கூனா?'' என்று பரிவுடன் கேட்டார் தலைவர் கூனன் 'ஹிஹிஹி' என்று சிரித்துக் கொண்டான்

''நீலா, நல்ல பெண்ணுங்க...'' என்று பேச்சைத் தொடங்கினான்.

''ஆமாம், அவள்—தன் தாயைப் போல் தைர்யம், கலப்பான பேச்சு, பிறரிடம் அன்புடன் பழகும் தன்மை அனைத்தையும் கொண்டிருக்கிறாள். உன்னை அவளுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதனால் தான் உன்னுடன் தைர்யமாக அவளைத் தனியே அனுப்பினேன்'' என்றார் தலைவர்.

கூனனுக்கு அவர் கூறுவது புரியவில்லை. இருந்தாலும் தலையை ஆட்டினான்.

''நீலாவுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்து வைத்து விடுங்கள் ஐயா'' என்றான் கூனன்.

''ஆமாம், ஆமாம், மாப்பிள்ளையைப் பார்த்து விட்டேன். பெருஞ் செல்வந்தர். செல்வாக்கு உள்ளவர் திருமண நாள் குறிக்க அவர் வீட்டிற்குப் போய் வரப் போகிறேன். வருவதற்கு நான்கைந்து நாட்கள் ஆகலாம்'' என்றார்.

''மாப்பிள்ளை எந்த ஊர் ஐயா?''

' திருக்கழுக் குன்றம்.''

''நீங்கள் கவலையில்லாமல் போய் வாருங்கள்.''

''எனக்குக் கவலையே இல்லை. நீ இருக்கும்போது நான் ஏன் கவலைப்பட வேண்டும். நீ மட்டும் கூனாக இல்லாமலிருந்தால் உனக்கே என் மகளைக் கல்யாணம் செய்து கொடுத்திருப்பேன்.''

தலைவர் இப்படிக் கூறும் போது கூனனின் உடல் சிலிர்த்தது தன்னிடம் அவருக்கு எவ்வளவு அன்பும் எவ்வளவு நம்பிக்கையும்? என்று நினைக்கும் போது, அவர் காலில் வீழ்ந்து, தான் முதல் நாள் செய்த தவறைக் கூறிவிட வேண்டும் என்று தோன்றியது.

''ஐயா, ''என்றான் குரல் நெகிழ.

''என்ன கூறு?''

''நீங்கள் என்னிடம் கொண்டிருக்கும் அன்புக்கும், நம்பிக்கைக்கும் என்ன கைமாறு செய்யப் போகிறேன். எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும் என் சகோதரியின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்துத் தருவதாக வாக்களித் திருந்தீர்கள். இப்போதெல்லாம் என் கண் எதிரே என் சகோதரி அடிக்கடி வருகிறாள். அவரைப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு ஏற்படுகிறது.'' என்றாள்.

''ஆமாம், ஒற்றர்களிடம் தெரிவித்தேன். அவர்களும் அதைப் பற்றிக் கவனிக்கவில்லை. நானும் மறந்து விட்டேன். மீண்டும் ஒற்றர்ப் படை வாதாபிக்குச் செல்லப் போகிறது'' என்று கூறியவர் சட்டென்று, ''அட்டா, இரகசியத்தை தெரிவிப்பது மிகப் பெரிய குற்றம்'' என்றார்.

''நான் வேறு எங்கும் இரகசியத்தை வெளிப்படுத்தி விடமாட்டேன். சிறைச் சாலையில் என் பரமவிரோதி நல்ல தம்பி இருககிறார் அவரைக்கேட்டால் என் சகோதரி

யைப் பற்றி தெரியுமல்லவா?'' என்று கூனன் யோசனையைத் தெரிவித்தான்.

தலைவர், அப்போதே நினைவு கொண்டவராய் ''ஆமாம், ஆமாம், மறந்தே விட்டேன். நல்ல தம்பி நோய் வாய்ப்பட்டிருக்கிறார். அவருடைய ஆயுட் காலம் நெருங்கி விட்டது என்றுதான் தோன்றுகிறது. இனி நீ அவரைச் சந்திப்பதில் தவறு நேர்ந்து விடாது. அவரை நீ சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். நீ விசாரித்துத் தெரிந்து கொள்'' என்றார்.

''நல்ல யோசனை ஐயா. ஏற்பாடு செய்யுங்கள் ஐயா. ஆனால், நான் அவருடன் பேசும் போது யாராவது அருகே இருக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான் கூனன்.

''ஏன் அவர் உனக்கு ஏதாவது தீங்குச்செய்து விடுவார் என்று பயப்படுகிறாயா?'' என்றார் பூபதி.

''இல்லை, இல்லை. நான் ஏதாவது செய்து விடக் கூடும். என்னுள் இருக்கும் மிருக உணர்ச்சி வெளிப்பட்டு விடலாம் அல்லவா? அந்த நல்ல தம்பியால் தானே என் குடும்பம் சீர் குலைந்தது. அவரைக் கண்டவுடன் எனக்கு ஆத்திரம் பொங்காது என்பது என்ன உறுதி? அதனால் தான் என்னிடம் யாராவது இருக்கச் சொல்லுகிறேன்'' என்று கூனன் பணிவுடன் பேசினான்.

''கூனா, நீ ஒரு நாளும் மிருகமாக மாட்டாய். உன் தோற்றத்தில் மிருக வாடையிருக்கலாம். ஆனால் உனது குணம் உயர்ந்தது'' என்றார் தலைவர்.

''இல்லை, ஐயா, இல்லை. என் உள்ளத்தில் இப்போது அசுர குணம் திடீர் திடீர் என்று மேலோங்குகிறது'' என்று விம்மியவாறு கூறினான் கூனன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. உனது வாழ்நாளின் நல்ல செழுமையான பகுதியைச் சிறையில் கழித்து

விட்டாய். இப்போது வெளி உலகத்தைக் காணும்போது குணமாறுபாடு எப்போதாவது உண்டாகலாம். அதில் தவறில்லை. நல்ல தம்பியைச் சந்திக்க நான் தக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் தலைவர்.

கூனன், திடீரென்று நெடுஞ்சாண் கிடையாக அவரது பாதத்தில் வீழ்ந்து வணங்கினான். அவனது கண்ணீரில் அவரது பாதங்கள் நனைந்தது.

நல்லதம்பி, சிறையில் தனி அறையில் படுத்திருந்தார். அவர் மெலிந்து காணப்பட்டார். கண்கள் குழி வீழ்ந்திருந்தன. விழிகளை மூடியவாறிருந்தார்.

யாரோ தன் அருகே வந்து நிற்கும் காலடி ஓசை கேட்டவுடன் அவர் கண் திறந்தார். பூபதியே கூனனுடன் வந்திருந்தார்.

''யாரது?'' என்று மெல்லியக் குரலில் கேட்டார் நல்ல தம்பி.

''பூபதிக்கே பரிதாபமாக இருந்தது. ஒரு காலத்தில் அவருக்கிருந்த செல்வாக்கு என்ன, அவர் சுகபோகங் களிலே ஆழ்ந்து திளைத்தது என்ன, அவர் சுகபோகங் களிலே ஆழ்ந்து திளைத்தது என்ன, இன்று சிறைக் கூடத்தில் ஒருவர் துணையுமின்றி வாடுவது என்ன...

சிறைத் தலைவர் அநுதாபப் படக் கூடாது. குற்றவாளி களிடம். ''நல்லதம்பி, உடல் நிலை எப்படி இருக்கிறது?'' என்று தலைவர் குரல் கொடுத்தார்.

''இன்றோ. நாளையோ என்று நாட்களை நீட்டிக் கொண்டே போகிறார் கடவுள். இன்றே இப்படியே கொண்டு போய் விட்டால் நல்லது. நான் பட்ட துன்பம் போதாதா?'' என்று மெல்லக் கூறினார்.

''துன்பப்படுமாறு தங்களைச் செய்தது நியாமா, அநியாயமா? கடைசிக் காலத்தில் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லுங்கள்'' என்றார் தலைவர்.

''இறைவனை ஏமாற்ற முடியுமா? நான் செய்த குற்றத்திற்கு எல்லாம் போதுமான அளவுக்கு எனக்குத் தண்டனை கிடைத்துவிட்டது என்று சொல்ல மாட்டேன்'' என்றார் நல்லதம்பி.

''பல்லவ நாட்டிற்குத் துரோகியாக மாறினீர்கள் அதற்குத்தான் ஆயுள் தண்டனை... வேறு குற்றங்கள் உண்டா?'' என்று தலைவர், கூனனை ஓரக் கண்ணால் பார்த்தவாறு, நல்லதம்பியைக் கேட்டார்.

''ஆகா, எவ்வளவோ பொல்லாத் தனங்கள்...''

''குறிப்பாக...''

''பவழவல்லி என்ற பெண்ணுக்கு நான் செய்த கொடுமைக்கு எனக்குத் தண்டனை இன்னும் கிடைக்க வில்லை.''

''யார் அந்த பவழவல்லி?''

''ஐயா, இந்த சிறையில் கூனன் ஒருவன் இருக்கிறான். நல்ல வேளை அவன் என்னை நெருங்கக் காவலர்கள் விட வில்லை. என்னை அவன் பார்த்திருந்தால் ஒரே போடாகப் போட்டுக் கொன்றிருப்பான்... அவனுடைய சகோதரியை நான் படுத்திய பாடு. அவளது கணவனைக் கொல்ல ஆட்களை ஏற்பாடு செய்தேன். உம்; அதெல்லாம் பழைய கதை. உடலிலே அப்போது தெம்பு இருந்தது. செல்வம் இருந்தது. செல்வாக்கிருந்து.'' என்று அவர் சொல்வதற்குள் இரண்டு முறை பேச்சுத்தடைப்பட்டது. மூச்சு அடைத்தது போலும்.

பூபதி, அவரிடமிருந்து செய்தியைச் சீக்கிரமாக அறிய விரும்பி, பரபரப்புடன், ''ஐயா, இந்த உலகத்தில் செய்த குற்றத்திற்குத் தண்டனையை இந்த உலகிலேயே அநுபவித்து விடவேண்டும். தாங்கள் தேசத் துரோகக் குற்றத்திற்குஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்

கிறீர்கள். ஒரு பெண்ணை, திருமணமான பெண்ணைக் கற்பழித்த குற்றத்திற்கு இன்னும் தண்டனை அனுபவிக்கவில்லையே. நீங்களே இப்போது ஒபபுக்கொண்டு விட்டீர்கள். பவழவல்லிக்குத் தீங்கு செய்ததாக...'' என்று தலைவர் கூறி முடிப்பதற்குள் நல்லதம்பி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, தன் கரத்தால் தலைவர் கரத்தை மெல்லப்பிடிக்க முயன்று ''ஐயா, பவழவல்லிக்குத் தீங்கு செய்தேன் என்று சொன்னேனே தவிர அவளைக் கற்பழித்ததாகச் சொல்லவில்லையே? அந்தப் பெண் உத்தமி. தன் கணவனைத் தவிர மற்றொருவரை நினையாதவள். எவ்வளவோ முயன்றும் அவளை இணங்க வைக்க முடியவில்லை!

அவள் அழகு என் புத்தியைக் கலங்கச் செய்து விட்டது. எனக்கு அவளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று அவள் வயது வந்த அன்றே, அவள் வேலை செய்து வந்த இடத்தின் வீட்டுத் தலைவரைக் கேட்டுக் கொண்டேன்...!'' என்று பழைய கதையைக் கூறுவதற்குள் அவன் மூச்சு இரைத்தது.

பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவற்றைக் கூனன் நினைத்துப் பார்த்துக் கொண்டான். பவழவல்லியின் கல்யாணம் சம்பந்தமாக அவள் வேலை செய்து வந்த வீட்டுத் தலைவருக்கும் அவருடைய மனைவிக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதையும், அந்தஅம்மாவின் விருப்பமே வென்றதையும் நினைவுப்படுத்திக் கொண்டான்.

''அந்தச் செய்தியெல்லாம் தெரியுமே. இப்போது பவழவல்லி எங்கிருக்கிறாள்? என்று சொன்னால் போதும்'' என்று கூனன் தலைவரிடம் மெல்லக் கேட்டான்.

''ஐயா, யார் தங்கள் அருகே? பவழவல்லி எங்கிருக்கிறாள் என்று யார் கேட்கிறார்கள்?'' என்று நல்லதம்பி கேட்டார்

''யாருமில்லை, எங்கள் வீட்டு வேலைக்காரன். உம் சொல்லுங்கள். உங்கள் இம்சைக்குப் பவழவல்லி கடைசி வரை இணங்கவேயில்லை; பிறகு அவளை விட்டுவிட வேண்டியது தானே?'' என்று தலைவர் கேட்டார்.

''அப்படிச் செய்திருக்கலாம், ஆனால் என் உள்ளத்தே எழுந்த வெறி அவ்வளவு எளிதில் அடங்கவில்லை. நான் அவள் கணவரிடமிருந்து அவளைத் தூக்கி வந்து விடுமாறு தான் என் ஆட்களுக்குக் கட்டளையிட்டேன். அவர்கள் தூக்கியும் வந்தார்கள். அவள் கணவரைக் கொலையும் செய்து விட்டார்கள்.

நான் பவழவல்லியைக் கடிகாசலத்திற்கு அழைத்து வந்து ஓர் வீட்டில் அடைத்து வைத்தேன். அப்போது அவள் சுர்ப்பிணி. அதை அறிந்தவுடன் என் மனம் மெல்ல மாறியது. அதற்குள் வாதாபியினின்று எனக்கு அழைப்பு வந்தது. அவளையும் அழைத்துக்கொண்டு சென்றேன். தன் வயிற்றிலுள்ள குழந்தைக்காக அவள் உயிர் வாழ விரும்பினாள். குழந்தை பிறந்தது. பெண் குழந்தை. அவளைப் போலவே அழகாக இருந்தது. வாதாபி நகரம் அவளுக்குப் பிடித்து விட்டது. நான் அவளை எவ்வளவோ வற்புறுத்தினேன்! பயமுறுத்தினேன்! ஆசை காட்டினேன். அவள் சம்மதிக்கவில்லை. மீண்டும் திருமணம் செய்து கொள்வதாகக் கூறினேன். சீறி எழுந்தாள். வாதாபிச் சக்கரவர்த்தியிடத்தில் தன் வேதனைகளைத் தெரிவிப்பதாகப் பயமுறுத்தினாள். வாதாபிச் சக்கரவர்த்தி விக்கிரமாதித்தன் ஒழுக்கசீலர். பெண் குலத்தை மதிப்பவர். இப்படி யாராவது தவறு செய்திருந்தால் உடனே கடுந்தண்டனை விதித்து விடுவார்'' என்று கூறும் போது சிறைத் தலைவர் சிரித்தார்.

''நல்ல தம்பி, வாதாபி சக்கரவர்த்தியைப் பற்றி என்னிடமே புகழ வேண்டாம், அவர்களுடைய பெண்ணாசையைப் பற்றி எனக்குத் தெரியாதா? உம், மேலே சொல்லுங்கள்'' என்றார்.

"அப்படி இல்லை ஐயா, யுத்தத்தின் போது ஓர் அரசர் அந்த தர்மப்படிதான் நடப்பார். எதிரி நாட்டுப் பெண்களைச் சிறைப்பிடித்தல், கிராமங்களை அழித்தல் எல்லாம் யுத்த தர்மங்கள். அது போகட்டும்; பவழவல்லி இவ்வாறு பயமுறுத்தியவுடன் நான் அவளை வற்புறுத்துவதை நிறுத்திக் கொண்டேன். அவளுடைய அழகெனும் தீ என்னைப் பொசுக்கியதால் அவளை நேருக்கு நேர் பார்ப்பதையே குறைத்துக் கொண்டேன். அதற்கும் மேலாக எனக்கு வேறு ஒரு கட்டளை காத்திருந்தது. காஞ்சிக்கு மாறு வேடத்தில் செல்லும் உத்தரவை வாதாபிச் சக்கரவர்த்தி எனக்கு இட்டிருந்தார். பவழவல்லிக்கும் வாதாபி மாளிகைப் பாடகிக்கும் சிநேகம் ஏற்பட்டது. அரண்மனைப் பாடகிக்குக் குழந்தை கிடையாது. பவழவல்லியின் குழந்தையின் அழகு அவளைக் கவர்ந்தது. குழந்தையைத் தான் காப்பாற்றுவதாக அவள் வாக்குக் கொடுத்தாள். ஆனால் பாடகியின் வீட்டில் பவழவல்லியால் அதிக நாட்கள் இருக்க முடியவில்லை. இசை கேட்க வருபவர்கள், பவழவல்லியின் அழகின் மீது நாட்டம் கொண்டனர். நீண்ட கருங்கூந்தலும் மழைக்கால மேகம் போன்ற கரியவிழியும், சிரிக்கும்போது சிந்தையை அள்ளும் செவ்விதழும் அதற்குள் மறைந்திருக்கும் பல்வரிசையும் ஒவ்வொருவரையும் மயக்கமடையச் செய்தன.

பவழவல்லி தனக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை உணர்ந்தாள். பிஹுக்களின் சங்கத்திற்குச் சென்று சரணாகதி அடைந்தாள்.

அவள் தன் அழகிய கூந்தலைக் களைந்தாள். பட்டாடையைத் துறந்தாள். புத்தரையும் சங்கத்தையும், தர்மத்தையும் மேற்கொண்டு பிட்சுணியானாள். பிறகு நான் அவளைக் காணவில்லை. ஆனால் பாடகி வீட்டில் பவழவல்லியின் குழந்தை வளர்வதை எப்போதாவது காண்பேன். பவழவல்லியின் சாயலை அப்படியே பிரதிபலிக்கும் அக்குழந்தையைப் பார்த்துப் பெருமூச்சு விடுவேன்.

நான் காஞ்சிக்கு மாறு வேடத்தில் புறப்பட்டுக் காஞ்சியை நெருங்கிய போது பல்லவ ஒற்றர்களிடம் சிக்கியதுடன் எனது சரித்திரம் முடிந்து விட்டது: சிறைச் சாலை என்னை மாற்றி விட்டது. இன்னும் சில நாட்களோ, சில நாழிகையோதான் என் வாழ்வு முற்றுப் பெறும். ஐயா, என் உயிர் போவதற்குள் காஞ்சிக்கு விசுவாசமுடையவனாய் இறந்தேன் என்ற பெயரை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். காஞ்சிக்குப் பெரும் ஆபத்து வரப் போகிறது. பல்லவ நாட்டையே பூண்டோடு அழிப்பதற்காக பெரும்படையைத் திரட்டிக் கொண்டிருக்கிறார் வாதாபிச் சக்கரவர்த்தி பல்லவர் படையைப் போல் பல மடங்கு பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சியுடன் இந்தத் தடவை அவர் படையெடுத்து வருவார். சில நாட்களுக்கு முன்பே எனக்குச் செய்தி வந்து விட்டது'' என்று கூறி முடிப்பதற்குள் நல்லதம்பியின் வாய் குழறியது. மூச்சுத் திணறியது. நெஞ்சில் ஒருவித ஒலி எழுந்தது.

''சில நாட்களுக்கு முன்பே தங்களுக்குச் செய்தி வந்ததா? சிறைக் காவலுள்ளும் துரோகியா? சாளுக்கிய ஒற்றர்கள் சர்வவியாபியாக, எங்கும் நிறைந்திருக்கிறார்களா? நல்லதம்பி, யார் அந்தத் துரோகி, சொல்லுங்கள், சொல்லுங்கள்'' என்று பரபரப்போடு கேட்டு அவர் முகத்தருகே குனிந்தார் பூபதி.

நல்லதம்பியின் சரித்திரம் அத்துடன் முடிந்து விட்டிருந்தது. துவண்டு விழுந்திருந்த கரங்களை மார்புமீது சேர்த்து வைத்து, தொங்கிய தலையை நேராக்கிவிட்டு சிறைக்கூடத் தலைவர் வெளியே விரைந்தார்.

13

"கூனா, நான் காஞ்சிக்கு உடனே செல்லவேண்டும். நீ வீட்டைப் பார்த்துக்கொள். நல்லதம்பி சொன்ன செய்தியை ஒற்றர் படைத்தலைவரிடம் தெரிவிக்க வேண்டும். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாதலால் நானே செய்யவேண்டும். சிறையிலேயே, சாளுக்கியநாட்டு ஒற்றன் யாரோ இருக்கின்றான். அவனைக் கண்டு பிடிக்க வேண்டும். காஞ்சி சென்று வந்த பிறகுதான் நான் நீலவல்லியின் திருமண விஷயமாகப் பேசுவதற்குப் பிள்ளை வீட்டாரிடம் செல்ல வேண்டும்" என்றார். அவர் பேச்சில் பரபரப்பு மிகுந்திருந்தது.

"உடனே, நீலாவுக்குக் கல்யாணத்தை முடித்து விடுங்கள் ஐயா," என்று கூனன் கூறினான். பிறகு கண்களில் நீர் ததும்ப "ஐயா, என் பொருட்டுத் தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு என்ன கைம்மாறு செய்வது என்றே தெரியவில்லை. என் சகோதரிக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் வாதாபியில் இருக்கிறாள். என் சகோதரி பிக்குணியாக மாறி விட்டாள். புத்தராக அருள் வேண்டித் தவமிருந்த அவள் இவ்வளவு காலமும் அவரது திருவடித் தாமரையை அடையாது இருக்கிறாளா என்பது தெரியாது. வாதாபிக்கு நான் செல்ல வேண்டும். நீங்கள் காஞ்சிக்குச் சென்று வந்த பிறகு நான் வாதாபிக்குப் புறப்படுகிறேன். அனுமதிக்க வேண்டும் ஐயா" என்றான்.

தலைவர் கூனனை அன்புடன் முதுகில் தடவி. "கூனா உன் சகோதரி உயிருடன் இருப்பாள் என்றே தோன்றுகிறது. இந்த நிலையில் நீ வாதாபிக்குச் செல்ல முடியுமா என்பது சந்தேகம். உன்னையும் சாளுக்கிய நாட்டு

ஒற்றன் என்று முடிவு செய்து விடுவார்கள். பெரிய போர் ஒன்று மூளக் கூடிய சூழ்நிலை உருவாக்கி விட்டால் நீ என்ன செய்வாய்." என்று கேட்டார் பூபதி.

"ஐயா, என் சகோதரியைப் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு ஒரு கணம்கூட இங்கே என்னால் தாமதிக்க முடியாது. தங்களுடைய அன்பு என்னை இப்போது தடுத்திருக்கிறது. தாங்கள் காஞ்சி சென்று வந்த பிறகு அதைப்பற்றிப் பேசிக் கொள்வோம். இரண்டு நாட்களில் தாங்கள் வந்து விடுவீர்கள் என்று நினைக்கிறேன். அதுவரை உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக் கொள்கிறேன்" என்று கூனன் கூறினான்.

சிறைக்கூடத் தலைவர் காஞ்சிக்குப் புறப்பட்ட மறு நாள் இரவு அஸ்தமித்து இரண்டு நாழிகை ஆகியிருக்கும். முழு நிலா இன்னும் பரிபூரணமாக வானத்தில் ஆட்சி செய்யத் தொடங்கவில்லை கூனனும். நீலாவும் சற்று நேரம் வாயிற்புறத்தே இருந்த மரவேர் ஒன்றில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர் என்ன நினைத்தாளோ நீலா, கூனனை நோக்கி, "தொழுவத்தில் இப்போது சினையா யிருக்கும் பசுவை இடம் மாற்றிக் கட்டி விட்டு வா கூனா" என்று கூறினாள்.

கூனன் உடனே புறக்கடைப் பக்கம் சென்றான். பசுவை அவிழ்த்துக் கட்டும் போது அவனுக்கு ஏதோ சந்தேகம் தோன்றியது. யாரோ அந்நியர் வீட்டிற்குள் நுழைய முற்படுகிறார் என்று உள் மனதிற்குள் உணர்வு எழுந்தது. கூனன் வெளியே ஓடி வந்தான். வேலி ஓரமாக நிழலின் இருளில் நீலா ஒருவருடன் நிற்பது வெளியே இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாது. உற்று நோக்கி னான். இருவர் நெருங்கியிருப்பதுண்டா?

"யாரது" என்று கூனன் குரல் கொடுத்தான். நீலா இருளோடு இருளாக மறைந்து வீட்டின் பின் பக்கம்

சென்று விட்டாள். அந்த உருவம் மரத்தோடு மரமாக ஒட்டிக் கொண்டு மறைய முயன்றது.

மீண்டும் "யார் அங்கே?" என்ற குரல் கொடுத்தான் கூனன். இரண்டே எட்டில் அந்த உருவம் மறைந்திருக்கும் இடம் நோக்கித் தாவி ஓடினான். மறுமொழி வராததால் கூனன். உருவத்தை நெருங்கினான். தலைப்பாகையும் மேல் அங்கியும் அணிந்த அந்த உருவம் இடையில் சிறு வாள் வைத்திருநதது. "நில், அருகே வராதே" என்று குரல் கொடுத்தது அந்த உருவம்.

"கூனா, உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ. எங்கள் விஷயத்தில் தலையிடாதே" என்று மெல்ல, ஆனால் அழுத்தந் திருத்தமாகத் தொடர்ந்து கூறியது, அந்த உருவம்.

"நீ யார், 'எங்கள்' விஷயம் என்றால் யார் யாருடைய விஷயம். ஏன் மறைவிடத்தில் இருந்து பேசுகிறாய்? வெளிச்சத்திற்கு வா" என்று கூனன் கூறினான்.

"நான், நானா, இந்த வீட்டுத் தலைவனின் சொந்தக்காரன்," என்ற குரல் வந்தது.

"சொந்தக்காரர் நிழலில் மறைந்து நிற்பதை நான் கேள்விப்பட்டதில்லை." என்று கூனன் அழுத்தமான குரலில் கூறினான்.

'சிறையில் இருந்த நீ கேள்விப்படாத பல விஷயங்கள் இருக்கின்றன." என்று அந்த உருவம் பேசியகுரலில், கேலி இருந்தது.

"எல்லா விஷயங்களையும் அறியும் சக்தி எனக்கு இருக்கிறது. உன்னைப் போன்றவர்கள் திருட்டுத்தனமாக ஒளிந்து கொள்வது எதற்காக என்பதைப் புரிந்து கொள்வதற்கும் எனக்குச் சக்தி இருக்கிறது." என்றான் கூனன்.

"குள்ளா, கூனா உன்னிடம் விவாதம் செய்ய நான் வரவில்லை. போய் படுத்துத் தூங்கு. என் விஷயத்தில் நீ தலையிடாதே. நான் இந்த வீட்டுத் தலைவனின் சொந்தக்காரன். அவர் வந்தால் என்னிடம் நீ நடந்து கொண்ட முறையை நான் தெரிவிப்பேன்." என்றது அந்த உருவம்.

'ஆகா; நன்றாகச் சொல்லு. நானும் அவரிடம் இப்படிச் சொல்கிறேன்: இப்படி இருளில் மறைந்து நிற்கிறாரே தங்கள் சொந்தக்காரர், அவரை வீட்டிற்குள்ளே வாருங்கள் என்று உபசாரம் செய்தேன். அவர் இணங்கவில்லை. மரியாதையாகக் கேட்டேன். நல்லதனமாகக் கேட்டேன். அதட்டினேன். பயமுறுத்தினேன். அதற்கும் பலனில்லை. உடனே அவர்மீது பாய்ந்து பலவந்தமாக அவரை வீட்டிற்குள்ளே அழைத்து வந்து இதோ கட்டிப் போட்டிருக்கிறேன்" என்று கூறிய கூனன், ஒரு கணங்கூடத் தாமதிக்காமல் மறைந்திருந்த உருவத்தின் மீது பாய்ந்தான்.

அந்த உருவத்தின் தலைப்பாகை அவிழ்ந்தது. கூனன் அந்த உருவத்தின் முகத்தை நோக்கி பலமான குத்துவிட்டான். இரத்தம் கொட்ட அந்த உருவம் பாய்ந்து வெளியே ஓடியது. மங்கிய நிலவொளியில், ஓடைக்கரையில் நீலாவுடன் சேர்ந்திருந்த அதே இளைஞன்தான் அந்த உருவம் என்பதைக் கூனன் கண்டு கொண்டான். அவனை ஓடிப் போய்ப்பிடித்து அவமானப்படுத்த விரும்பவில்லை. அப்படிச் செய்தால், நீலாவுக்கே அவப்பெயர்.

நீலா அந்தப் பக்கமே வரவில்லை. மரத்தடியில் வீழ்ந்து கிடந்த தலைப்பாகையை மட்டும் கூனன் எடுத்து வைத்துக் கொண்டான். பட்டுத்துணியால் ஆன தலைப்பாகை, அந்த இளைஞன் செல்வாக்குள்ளவன் என்பதைப் புலப்படுத்தியது.

உள்ளே நீலா விசும்பி அழும் ஒலி கேட்டது. கூனன் நீலாவைச் சந்திக்க விரும்பவில்லை என்றாலும், அவள்

அழுங்காரணம் கேட்பதற்காக உள்ளே சென்றான். மஞ்சத்தில் அவள் படுத்திருந்தாள். கண்களிலிருந்து நீர் அருவிபோல் ஓடியது.

"நீலா, எதற்காக அழுகிறாய்?" என்று கூனன் கேட்டான். அவள் உடனே மறுமொழி கூறவில்லை. விசித்து விசித்து அழுங்குரல் மட்டும் ஒலித்தது.

"நீலா, நீ எதற்காக அழுகிறாய் என்பது எனக்குத் தெரியும். அந்த இளைஞன் இங்கே வந்த விஷயத்தை உன் தந்தையிடம் நான் கூறிவிட மாட்டேன்" என்றான்.

நீலா கண்களைத் துடைத்துக் கொண்டாள், கோபத்துடன் "நீ ஏன் அவரை அடித்தாய்?" என்றாள்.

"உனக்கு வேண்டியவன் அவன் என்று எனக்குத் தெரியாது. இந்த வீட்டைப் பார்த்துக் கொள்ளுமாறு உன் தந்தை கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார். அதை நிறைவேற்ற வேண்டியது என் கடமை."

'வீட்டைத்தானே பார்த்துக்கொள்ளச் சொன்னார்? பிறகு என் விஷயத்தில் நீ ஏன் தலையிட்டாய். நான் அவரை விரும்புகிறேன்" என்றாள் நீலா.

"சரி; மிகவும் சந்தோஷம். இருட்டில் மரத்தின் மறைவில் அவனுடன் பேசுவது உனக்கும் அழகல்ல; உன் தந்தை வசிக்கும் பொறுப்பான பதவிக்கும் சிறப்பல்ல"

"நான் அவரைக் காதலிக்கிறேன்."

"உன் தந்தையிடம் சொல்லிவிட்டுச் செய்து கொள். இப்படித் திருட்டுத்தனமாகச் சந்திக்கக் கூடாது. எனக்குப் பிடிக்கவில்லை."

"உனக்குப் பிடிக்கும் விஷயங்களை நான் செய்ய முடியாது. உன்னை நான் விரும்பவில்லை என்பதற்காக நீ என்னை அவமானப்படுத்த விரும்புகிறாய். அதை நீ செய்வது வரம்புக்கு மீறிய செய்கை."

"இல்லை; நீ செய்வதுதான் வரம்புக்கு மீறியது. உன் தந்தை வந்தபிறகு நீ உன் அன்புக்கு இனியவனை அழைத்து இரகசியமாகப் பேசு. அவர் இல்லாதபோது, உன் செய்கைக்கு நான் உடந்தையாக இருக்க மாட்டேன்."

"உன்னால் எனக்கு இடையூறு அதிகம்..."

"நீலா, நான் பிறருக்கு உதவியாக இல்லாவிடினும் இடையூறாக இருக்க மாட்டேன். உன் தந்தை வரும்வரையில் பொறுத்துக்கொள். நான் இந்த ஊரைவிட்டே போய் விடப் போகிறேன்" என்றான்.

நீலா, முகமலர்ச்சியுடன் எழுந்தாள். கூனனின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, "கூனா, உன் உருவம் மட்டும் அழகாக இருந்தால் நான் உன்னைக் காதலித் திருப்பேன். உள்ளத்தால் உயர்ந்தவன் நீ. இப்பொழுது நடந்ததை நீ என் தந்தையிடம் சொல்வாயா?" என்று குழைந்தாள்.

கூனன் அவள் கரத்தை உதறி, தலையை அசைத்தான். "நீலா, பயப்படாதே. நான் சொல்ல மாட்டேன். ஆனால் நான் இங்கே இருக்கும்வரை, அந்த இளைஞனைச் சந்திக்க அனுமதிக்க மாட்டேன்" என்றான்.

"ஏன்? அவர்மீது உனக்கு என்ன கோபம்?" என்று நீலா கேட்டாள்.

"எனக்கு அவனை யார்என்றே தெரியாது, அவன் மீது எனக்குக் கோபம் வர நியாயமில்லை. ஆனால் மற்றவருக்கு திருமணம் நிச்சயித்திருக்கும் பெண்ணைத் திருட்டுத்தனமாக சந்திப்பது முறையாகாது; அதை நான் அனுமதிக்க மாட்டேன், நான் இந்த வீட்டைவிட்டுப் போனபிறகு உன் விருப்பப்படிநடந்து கொள்" என்றான்.

நீலா கலகலவென நகைத்தாள். "கூனா சிறையிலே பல ஆண்டுகளைக் கழித்துவிட்ட நீ இவ்வளவு விஷயங் களை எப்படிக் கற்றுக் கொண்டாய்?" என்று கேட்டாள்

"அனுபவந்தான்" என்று கூனன் கூறி மெல்லச் சிரித்தான்.

நீலாவும் சிரித்தாள்.

"நீலா, என் சகோதரியின் இருப்பிடம் எனக்குத் தெரிந்துவிட்டது. தன் கணவர் இறந்தபிறகு அவள் விரும்பியிருந்தால் பெரிய செல்வந்தரை மணந்திருக்கலாம் ஆனாள் அவள் முற்றுந் துறந்த பிக்குணியாகி விட்டாளாம். அந்த உயர்ந்த நிலையை அறிந்த அனுபவம்தான் என்னை இப்படிப் பேச வைக்கிறது" என்றான்.

"உன் சகோதரிக்கு ஒரு மகள் இருப்பதாகக் கூறினாயே" என்றாள் நீலா.

"ஆம்; உன் வயது அவளுக்கு இருக்கும். என் சகோதரியைச் சந்திக்க வாதாபி செல்கிறேன் சகோதரியைச் சந்திக்காவிட்டாலும், என் சகோதரியின் மகளை யாவது சந்திப்பேன்" என்று கூறிய போது கூனன் உணர்ச்சி வயப்பட்டு அழுது விட்டான்.

நீலாவின் மெல்லிய கரங்கள் அவனது விழிநீரைத் துடைத்தன. கூனன் அந்தக் கரத்தைத் தள்ளவில்லை

14

நீலாவின் தந்தை காஞ்சியினின்று திரும்பி வந்து விட்டார். சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் பெரும் படையைத்திரட்டி வருவதையும், அவை வாதாபியினின்று பறப்பட்டு விட்ட செய்தியையும் தக்கவர்களிடம் தெரிவித்து விட்டு வந்து சேர்ந்தார். அவர் சில பாதுகாப்புகளைச் சிறைக்கூடத்தில் செய்ய வேண்டியிருந்தது. காஞ்சிக் கோட்டையை விட்டுப் பல்லவர் படைகள்

சுற்றுப்புறக் கிராமங்களில் நிறுத்தி வைக்கப்பட ஏற்பாடாயின சாளுக்கியர் படைகள் காஞ்சி வரை செல்லாமல் வழியிலேயே அவர்களைத்தடுத்து நிறுத்துவது அவர்கள் நோக்கம். அதற்கு முன்பு கடல் கடந்த நாட்டு வணிகர்களைப் போன்று வேடமணிந்த பல்லவநாட்டு ஒற்றர்கள் வாதாபிக்குச் சென்று அங்குள்ள நிலையை அறிந்து வர முடிவு செய்தனர். பூபதி, ஒற்றர் படைத் தலைவரை அணுகிக் கூனனின் சோகக்கதையைக் குறிப்பிட்டு அவனை வாதாபிக்கு அழைத்துச் செல்ல வேண்டிக் கொண்டார்.

ஒற்றர் படைத்தலைவர் சற்று யோசித்தார். கூனனை அவர் நன்றாக அடையாளம் தெரிந்து வைத்திருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு அவனைக் காஞ்சியில் கண்டிருக்கிறார். அந்தத் தோற்றம் அவர் நெஞ்சை விட்டகலவில்லை

''வண்டியோட்டி வருவதற்குச் சரியான ஆள். கடல் கடந்த நாட்டு வணிகர்களுக்கு அவன் உதவி செய்பவனாக நடிக்கச் செய்வோம்'' என்றார்.

பூபதிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. தானே வாதாபிக்குச் சென்று சகோதரியைச் சந்திக்கப் போவது போன்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது.

வீட்டிற்குள் நுழையும் போதே மகிழ்ச்சியுடன் கூனனை அழைத்தார் நீலாவின் தந்தை.

''கூனா, நீ வாதாபிக்குப் புறப்படப் போகிறாய்'' என்றார். கூனன் கூத்தாடினான். 'எப்போது எப்போது?' என்று அவரை விடாமல் கேள்வி மேல் கேள்வி கேட்டான்.

''கூனா. பெரியராஜாங்க இரகசியம். உன்னிடம் இப்போது சொல்ல மாட்டேன். எந்த நொடியும் நீ புறப்பட ஆயத்தமாக இருக்க வேண்டும்'' என்றார்.

"நல்லதம்பி சாகும்போது சொன்னது உண்மைதான். வாதாபியில் படை திரட்டுகிறார்களாம். அதற்குள் நீலாவின் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் யுத்த பீதியையும் பயத்தையும் வைத்துக் கொண்டு நீலாவுக்குக் கல்யாணம் செய்ய முடியுமா?" என்றார்.

பிறகு உற்சாகமான குரலில் "நீலா, நீலா" என்றழைத்தார். தந்தை வந்துவிட்டதையும், தன்னை அழைப்பதையும் அறிந்து நீலா தயக்கத்துடன் வந்தாள். கூனன் ஏதாவது சொல்லியிருப்பானோ என்று அவன் முகத்தை நோக்கினாள். கூனன் முகத்தில் வழக்கத்தைவிட மகிழ்ச்சி நிறைந்திருந்தது.

"நீலாவுக்குக் கல்யாணம், நீலாவுக்குக் கல்யாணம்" என்று கூனன் கை கொட்டிக் குழந்தைபோல் சிரித்தது கண்டு, நீலா அங்கு ஏதும் விபரீதம் நடக்கவில்லை என்பதை உணர்ந்தாள்.

"நீலா, இன்று நாம் பல்லவபுரம் புறப்படுகிறோம். திங்கட்கிழமை அங்கு வாரச் சந்தை கூடும். கல்யாணத்திற்கு வேண்டிய பாத்திரங்கள், விருந்துக்கு வேண்டிய நவதான்யங்கள் வாங்கி வருவோம்" என்றார்.

கூனனைப் பார்த்து, "கூனா, குன்றத்தூருக்குப் போய் இரட்டை மாட்டு வண்டியொன்று கொண்டு வா. நாம் அதில் ஏறிச் செல்வோம். நீ வண்டியோட்டி வர வேண்டும்" என்றார்.

பிறகு மெல்லிய குரலில், "வண்டி ஓட்டிப் பழகிக் கொள். பல காத தூரம் நீ வணிகர்களுக்கு வண்டி ஓட்டிச் செல்ல வேண்டியிருக்கும்" என்றார். கூனன், வெளியூர் செல்லப் போகிறானென்பதை அறிந்தவுடன் நீலா மகிழ்ச்சி அடைந்தாள்.

குன்றத்தூரிலிருந்து கூனன் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்து நிறுத்தினான். கம்பீரமான காளைகள்.

கழுத்து மணி ஓசையும் கால் சதங்கையும் ஒலிக்க வண்டி புறப்பட்டது. நிலாவுக்கு உள்ளூர வேதனைதான். எப்படியாவது திருமணத்தை நிறுத்தி விடவேண்டும் என்று எண்ணினாள். கூனன் இருக்கும் வரை அது முடியாது என்பதும் அவளறிவாள்.

நீலாவின் தந்தை உற்சாகமாகப் பேசிக் கொண்டு வந்தார், சந்தையில் வாங்கப் போகும் பண்டங்களைப் பற்றியும், காஞ்சியில் ஆபரணங்கள் செய்யுமாறு பொற் கொல்லரிடம் கூறியிருப்பதையும் தெரிவித்தார்.

''கல்யாணம் எங்கு நடக்கும்?'' என்று கூனன் கேட்டான் நீலாவைப் பார்த்துக் கொண்டே.

''திருக்கழுகுக் குன்றத்தில், பிள்ளை வீட்டில் தான்'' என்றார் பூபதி.

நீலா, தன் தந்தை பார்க்காதவாறு கூனனைப் பார்த்து உதட்டைக் கோணி, வாயைப் பிளந்து வேடிக்கை செய் தாள்.

''சீக்கிரமாக நல்ல நாள் பார்த்து முகூர்த்தத்தை வையுங்கள். நானும் கல்யாணத்தில் கலந்து கொள்ள வேண்டுமல்லவா?'' என்றான் கூனன்.

''ஆமாம். ஆமாம் நீ இல்லாமலா கல்யாணம்'' என்றார் பூபதி.

''நான் கூனனாகவும், குரூபியாகவும் இல்லாமலிருந் தால், நீலாவை எனக்குக் கல்யாணம் செய்து கொடுத் திருப்பீர்களில்லையா?'' என்று கேட்டான் கூனன். சந்தோஷ மிகுதியில் என்ன கேட்கிறோமென்று அவனுக்குத் தெரியவில்லை.

''முட்டாள். பார்த்து வண்டியை ஓட்டு. அடுத்த ஜன்மத்தில் அறிவும், அழகும் ஒன்று சேரப் பிறவி எடு.

அப்போது பார்க்கலாம்'' என்று கூறும்போது தலைவருக்கு ஏனோ ஆத்திரம் பொங்கியது.

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை. கூனனுக்கு வருத்தந்தான். சாட்டையைச் 'சுளீர் சுளீர்' என்று வீசி மாட்டை வேகமாக ஓட வைத்தான்.

தடதடவென்ற சப்தத்துடன் வண்டி ஓடியது. ஓட்டத்தில் வண்டி குலுங்கியது

''மெதுவாக. மெதுவாக—பார்த்து—பார்த்து'' என்று கடிந்து கொண்ட பூபதி, கயிற்றைக் கூனனிடமிருந்து வாங்கிக் கொண்டு, வண்டியோட்டியின் இடத்தில் அமர்ந்தார். ''நான் ஓட்டுகிறேன் பார்'' என்றார்.

வண்டி 'ஜல் ஜல்' என்ற சப்தத்துடன் ஓடிக்கொண்டிருந்தது.

''ஐயா, பார்த்து— பார்த்து—'' என்றான் கூனன். அங்கே ஒரு பள்ளம். அவன் சொல்லிவாய் மூடவில்லை; ஒரு திருப்பத்தில் திடீரென்று வண்டி குடை சாய்ந்தது. நீலாவும் கூனனும் ஒருபக்கம் விழுந்தனர். பூபதி மீது வண்டி சாய்ந்தது.

''ஐயோ, அப்பா'' என்று நீலா அலறினாள். கூனனும், நீலாவும் புதரொன்றின் மீது விழுந்தார்கள். அவர்களுக்கு ஏதும் நேரவில்லை.

கூனனும் நீலாவும் வண்டிக்கருகே ஓடோடி வந்தனர். தலைவருக்கு மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது.

''ஓடிப்போய் யாரையாவது அழைத்துவா கூனா, இப்படி நிற்கிறாயே, ஓடிப் போய் அழைத்துவா கூனா'' என்று நீலா அலறினாள்.

கண்ணுக்கெட்டிய தொலைவு வரை ஊரோ மக்கள் நடமாட்டமோ தெரியவில்லை. கூனன் செய்வதறியாது இப்படியும் அப்படியும் ஓடினான். பிறகு அவனே வண்டிக்கருகே வந்தான். தன் தோளைக் கொடுத்து வண்டியைத் தாங்கிக் கொண்டான். நீலா தந்தையை மெல்ல நகர்த்தினாள்.

கையுடன் கொண்டு வந்திருந்த உணவு மூட்டையும், குடத்தின் நீரும் உருண்டோடி மண்ணில் கிடந்தன. குடத்தை எடுத்துக் கொண்ட கூனன் அருகேயுள்ள குளத்திற்கு ஓடினான். தண்ணீரைக் கொண்டு வந்து முகத்தில் தெளித்து குடிக்கவும் கொடுத்தான்.

பூபதி கண் விழித்தார். தன் வலது காலை அசைக்க முடியாது கடும் வலி ஏற்பட்டிருப்பதை உணர்ந்தார். கூனன் மெல்ல வண்டிச் சக்கரத்தை எடுத்துச் சரிவர நிறுத்தினான். வண்டிக்கும் ஏதும் பழுது ஏற்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்தான். மாடுகளைப் பூட்டி. மெல்லத் தலைவரை தூக்கி வண்டியில் கிடத்தினான்.

''ஆகா என்ன பலம். பலம்... கூனனுக்கு'' என்று நீலா வியந்தாள்.

''புறப்பட்ட சகுனம் சரியில்லை வீட்டிற்கு வண்டியை திருப்பி ஓட்டு'' என்றார் தலைவர். நீலாவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கூனன் காணத் தவறவில்லை.

தலைவருக்கு வலது காலில் எலும்பு முறிந்துவிட்டது. அதனால் ஏற்பட்ட நோவு தாள முடியாததாயிருந்தது. அவர் கூனனின் உதவியைப் பாராட்டிக் கொண்டே வந்தார்.

வீட்டிற்கு வந்தவுடன் வண்டியிலிருந்து அவரைக் கீழே பிடித்து இறக்க சிறைக் காவலர்கள் ஓடோடி வந்தனர். ஒவ்வொருவரிடமும் கூனன் புரிந்த சேவையைப் பாராட்டினார் பூபதி.

முன்னாள் குற்றவாளிக்குக் கிடைக்கும் பாராட்டுதல் குறித்து முதலில், காவலர்களுக்குப் பொறாமையாக இருந்தது. பிறகு அவர்களும் பாராட்டத் தொடங்கினர்.

15

வாதாபிக்குச் செல்லும் ஒற்றர்கள் கூட்டம் காஞ்சியினின்று புறப்பட்டது. கோட்டைக்கு வெளியே செல்லும் போது அவர்கள் வணிகர்கள் உடையில் இருந்தனர். ஒற்றர் படைத்தலைவர் கூனனுக்குச் சொல்லியனுப்பினார்.

நீலாவின் தந்தையிடம் விடை பெறும்போது கூனன் கதறி அழுதுவிட்டான்.

''கூனா, நலமாகச் சென்று திரும்பி வா'' என்று ஆசி கூறினார்.

''தங்களை விட்டுப் பிரியவே எனக்கு மனமில்லை. என் சகோதரியைக் காண்பதைவிடத் தங்களுக்கும் பணிவிடைகள் செய்வதையே இப்போது பெரிதாகக் கருதுகிறேன். கால் முறிந்து நடக்க முடியாமல் தாங்கள் இருக்கும் இந்த நிலையில் தங்களை விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை'' என்று கூறி கூனன் விம்மினான்.

கூனனின் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்த தலைவர், ''திருத்தணிகையினின்று வந்திருக்கும் அபூர்வப் பச்சிலையை மருத்துவர் வைத்துக் காலில் கட்டியிருக்கிறார். ஒரு மாதத்தில் குணமாகிவிடும். கவலைப்பட வேண்டாம்'' என்று அவனைத் தேற்றினார்.

நீலவல்லி தந்தையின் அருகே நின்று கொண்டிருந்தாள். அவள் பக்கம் திரும்பிய பூபதி, "நீலா, நம் குடும்பத்திற்குக் கூனன் மிகவும் உதவியாக இருந்தான். உன் திருமணத்திற்கு அவன் இல்லாதது மிகவும் குறையாகத் தானிருக்கிறது" என்றார்.

"நீலா, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உன் அழகுக்கு உன்னைக் கவர்ந்து செல்லப் பலர் காத்திருக்கிறார்கள். மணிமங்கலத்திற்குக் கூத்துப் பார்க்கச் செல்லாதே" என்று கூனன் நீலாவை நோக்கிக் கூறினான். நீலா பதறினாள். கூனன் நடந்த சம்பவங்களைக் கூறி விடுவானோ என்று பயந்தாள்.

"என்ன சொல்கிறாய் கூனா? நீலாவைக் கவர்ந்து செல்ல யார் காத்திருக்கிறார்கள். யாருக்குத துணிவு இருக்கிறது. அவர்கள் பெயரைச் சொல்லு" என்று தலைவர் கேட்டார். எழ முயன்றார் முடியவில்லை.

நீலா சைகை மூலம் கூனனைகைகூப்பி வேண்டினாள்.

"குறிப்பிடத் தக்கவர்கள் ஒருவருமில்லை ஐயா, வயது வந்த பருவப்பெண் அழகியாகவுமிருந்து விட்டால் சபலம் ஏற்படுவது இயற்கைதானே! என் சகோதரிக்கு அப்படித் தானே நேர்ந்தது" என்று கூறினான் கூனன். நீலாவைப் பார்த்து மெல்ல நகைத்தவாறு.

"நீலா, அறிவுடையவள்; அடக்கமுடையவள்; அதே போல் தைர்யம் நிறைந்தவள். அவளுக்குத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியும்" என்றார் பூபதி.

கூனன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். நான்கு கூண்டு வண்டிகள் வாதாபி செல்லும் சாலையில் விரைந்து சென்றன. ஒரு வண்டியைக் கூனன் ஓட்டினான். ஆறுகளை, பாலைகளை, கானகங்களை, மலைச் சரிவைக் கடந்து அவை சென்று கொண்டிருந்தன.

இடையிடையே மலைச் சரிவுகளில் வராகக் கொடி பறக்கும் சாளுக்கிய வீரர்கள் பாடி வீடமைத்துப் படையெடுத்து வரும் தங்கள் நாட்டுப் படைகளுடன் சேரத் தருணம் நோக்கிக் காத்திருப்பது தெரிந்தது.

வண்டிகளைப் பல இடங்களில் ஏராளமான துணி வகைகளும், முத்தாபரணங்களும், பாண்டிய நாட்டு கைவினைஞர்கள் செய்த அபூர்வப் பொருள்களும் இருந்தமையாலும் அவை வாதாபிக்குச் செல்கின்றன என்பதாலும் வீரர்கள் வண்டிகளைச் செல்ல அனுமதித்தனர்.

மழைக் காலம் ஓய்ந்து, பனிக் காலம் வந்தது. காலை வேளைகளில் பனிப்படலம் வழியைத் திரையிட்டு மூடியிருக்கும். கதிர்க்கரங்கள் பனிப் போர்வையை விலக்கிப் பூமி தேவியை எழுப்பும் அழகை வண்டியிலிருந்தவர்கள் ரசித்ததாகத் தெரியவில்லை. கூனனும் வாதாபி எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான்.

பெரும் நதிக் கரைகளில், ஆற்றைக் கடக்கத் தேவையான தோணிகளுக்காகக் காத்திருக்கும் நாட்களில் கூனனிடம் தாங்க முடியாத பரபரப்பு ஏற்படும். வண்டியை ஓட்ட வேறு காளைகளைத் தேடுவதிலும், ஓடங்கள், படகுகள் ஓட்டுபவர்களை அழைத்து வருவதிலும் அவன் மிகுந்த சுறுசுறுப்பைக் காட்டுவான்.

கூனனின் சுறுசுறுப்பும், இயற்கையாக அவனுக்கிருந்த பலமும் பல்லவ ஒற்றர்களை வியப்படையச் செய்தன. அவர்களுக்குக் கூனனின் சோகக் கதை தெரியும்.

''முத்துமாலையும், பட்டாடைகளும் விரும்பாத பாடகிகள் உண்டா? அரண்மனைப் பாடகியைச் சந்திப்பதற்கு அவை நல்ல சாதனம்'' என்றார் ஒற்றர் படைத் தலைவர்.

"உனது சகோதரியைச் சந்தித்தவுடன் நீ அங்கேயே தங்கிவிடுவாயா, அல்லது திரும்பவும் காஞ்சிக்கு வருவாயா?" என்று தலைவர் கேட்டார்.

கூனனுக்கு உடனே மறுமொழி கூறமுடியவில்லை.பல ஆண்டுகளுக்குப் பிறகு சகோதரி பவழவல்லியைக் காண்கிறோம்; அவள் மகளைக் காண்கிறோம். பார்த்தவுடன் ஏற்படுகிற உணர்ச்சி எப்படியிருக்குமோ?

"இப்போது எப்படிச் சொல்வது தலைவரே!பாசமும் பந்தமும் என்னை எப்படி ஆட்கொள்ளுமோ?"என்றான் கூனன்.

தலைவர் சிரித்தார். "கூனா, போர் வீரர்களிடையே ஒருவிதக் கட்டுப்பாடு உண்டு. ஒற்றர்களுக்கோ அந்தக் கட்டுப்பாடு மேலும் கடுமையாக இருக்கும். சொந்தம், பந்தம், உற்றார் உறவினர் என்று பேதம் பார்க்கக் கூடாது. சலுகை காட்டக் கூடாது. விதியைத் தளர்த்தக் கூடாது. விட்டுக் கொடுக்கக் கூடாது. உன்னை எங்களுடன் அழைத்து வந்தது, உன்மீது உள்ள கருணையினால் அன்று. வாதாபியில் உன்னைப் பல்லவ நாட்டு ஒற்றனாக நியமிக்கும் எண்ணத்தில் தான். நீ துரோகியாக மாற மாட்டாய் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், சகோதரியின் பாசம், சகோதரியின் மகளுடன் புதிய அறிமுகம் உன் மனத்தை மாற்றிவிடலாம். பல ஆண்டுகளாக சாளுக்கிய நாட்டில் இருப்பதால், சாளுக்கிய நாட்டிற்கு நன்றி விசுவாசத்துடன் உன் சகோதரியும், சகோதரியின் மகளும் இருக்கலாம். உன்னைப் பல்லவ நாட்டிற்கு விரோதமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். எதையும் நாங்கள் எதிர்பார்த்துமுன்எச்சரிக்கையுடனிருப்போம்..." என்றார் ஒற்றர் தலைவர் கூனனைக் கூர்ந்துநோக்கி.

கூனன் உணர்ச்சி வயப்பட்டான். "ஐயா உடன் பிறந்த பாசத்தைவிட நாட்டுப் பாசம் எனக்கு முக்கியமானது. சாளுக்கிய நாட்டு ஒற்றனாக என்னை மாறச் செய்யாதீர்கள்" என்றான்.

''சாளுக்கிய நாட்டு ஒற்றனாக மாறுவதும் ஒரு விதத்தில் நாட்டிற்குச் செய்யும் தொண்டுதான். அங்கிருந்து இரகசியச் செய்திகளை நீ பல்லவ நாட்டிற்குத் தெரிவிப்பதால் நாட்டிற்குப் பெரும் நன்மை ஏற்படும்'' என்றார் தலைவர்.

''அதெப்படி? சாளுக்கியர்கள் என்னைப் பல்லவ நாட்டிற்கு விரோதமாகக் காஞ்சிக்கு வந்து, சாளுக்கிய ஒற்றனாக இருக்குமாறு சொன்னால்?'' என்று கூனன் கேட்டான்.

''அதுவும் நல்லதுதான். காஞ்சிக்கு வந்துவிடு. காஞ்சியில் உன் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க முடியுமானால் நடந்துகொள். அதன்பலன்,விளைவு எப்படியோ அதைப் பற்றி பிறகு பார்ப்போம்'' என்றார் தலைவர்.

''ஐயா, ஐயா. எனக்குத் சோதனை ஏற்படவேண்டாம். இவ்வளவு நாட்கள் நான் மன வேதனையுற்றது போதும். வாழ்வின் வளமான நாட்களைச் சிறையில் அனுபவித்தது போதும்'' என்று கூனன் விம்மினான்.

''இப்போதே எல்லாவற்றையும் யூகம் செய்து கொள்ள முடியாது. போகப்போகப் பார்ப்போம். வாதாபி நகரம் காஞ்சியை நோக்கிப் படையெடுத்துச் செல்லும் பரபரப்பில் இருக்கும். அவர்களுக்குக் காஞ்சியில் ஒற்றர்கள் தேவைப் படுவார்கள். உன்னைத் தங்கள் ஒற்றனாகத் தேர்ந்தெடுப்பதில்தான் அவர்கள் கவனம் செலுத்துவார்கள்'' என்றார்.

வாதாபி நகரைப் பார்த்தவுடனேயே கூனன்பிரமித்து விட்டான். மலை சூழ்ந்த இயற்கையழகின் பின்னணியுடன் வாதாபி கம்பீரமாகத் திகழ்ந்தது. காஞ்சியின் சிற்பக்கலைக் கூடம் எல்லாம் வாதாபியினின்று கொண்டு வரப்பட்டனவோ என்று தோன்றும் வகையில் கோயில்கள் விளங்கின. மாளிகைகள் கலையழகுடன் திகழ்ந்தன. மக்கள் பகட்டாக ஆடை ஆபரணங்களுடன் விளங்கினார்கள்.

தட்ப வெப்பநிலைகூட காஞ்சியினின்று மாறுபட்டிருந்தது. மன்னரின் மாளிகை, காஞ்சி மாளிகையைவிட மிகப் பெரிதாக இருந்தது. அரண்மனைப் பாடகியைக் கண்டு பிடிப்பதன் மூலம் இராஜ இரகசியங்களை அறிய முடியும் என்று ஒற்றர் தலைவர் திட்டமிட்டதால், பட்டாடைகள் விற்பனை செய்யும் வணிகர்களோடு சேர்த்துக் கூனனை அனுப்பினார்.

கூனன் வண்டியை ஓட்டுவதை வாதாபி நகர மக்கள் விசித்திரமாக நோக்கினார்கள். கூனனின் அழகற்ற உருவத்தைக் கண்டு சிலர் முகஞ் சுளித்தனர்.

பட்டாடை விற்கும் வணிகர்கள்கீழ்க் கடலைக்கடந்த நாடுகளிலிருநது வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட செல்வந்தர்கள் 'எங்கள் வீட்டிற்கு வா, உங்கள் வீட்டிற்கு வா' என்று போட்டி போட்டழைத்தனர்.

இரண்டு நாட்கள் வாதாபி நகரைச் செல்வந்தர்கள் வீடுகளில் கழிந்தன. செல்வந்தர் வீடுகளைப் பார்க்கும் போது வாதாபி நகரத்தின் பொருளாதார உயர்வு புலப்பட்டது. ஒவ்வொருவர் வீட்டிலும் மாலை வேளைகளில் அழகிய பெண்களின் நாட்டியம் நடைபெற்றது. பிரபல பாடகிகளின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒவ்வொருவர் வீட்டு வாசலிலும் வண்டியை நிறுத்திக் காளைகளை அவிழ்த்து விட்டு கூனன் சிந்தனையிலாழ்ந்த வாறு உட்கார்ந்திருப்பான். அவன் நினைவெல்லாம் சகோதரியை எப்போது காண்போம். என்பதிலேயே இருந்தது. சகோதரியைக் காண புத்த விகாரைக்குச் செல்ல முடியாவிடினும், அரண்மனைப் பாடகியின் வீட்டில் வளரும் சகோதரியின் மகளையாவது எப்போது காண்போம் என்ற கவலையுடன் உட்கார்ந்திருந்தான்.

அந்த மாளிகைக்குள்ளே நடன நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. நகரத்துப் பிரமுகர்கள், குதிரைகளிலும் இரட்டைக் குதிரைகள் பூட்டிய இரதங்களிலும் வந்து

சேர்ந்தனர். கூனன் மாளிகையின் வாயிலை விட்டுச் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்தான்.

சிறு பெண் ஒருத்தி கூனன் அருகே வந்து கொச்சைப் பிராகிருதத்தில் ஏதோ பேசினாள். கூனனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் சிரித்தாள். பிறகு அவன் கரத்தைப் பிடித்து அழைத்தாள். அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. அவள் தன்னை எங்கேயோ அழைப்பதாக, கூனன் சிறுமியைப் பின் தொடர்ந்தான். அருகிலுள்ள சந்தொன்றில் நுழைந்து சென்றாள் சிறுமி. கூனனுக்கு முதலில் சற்று யோசனைதான். ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்ற பயமிருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சென்றான்.

சந்து ஒரு பெரிய வீதியில் கொண்டு விட்டது. அங்குள்ள சற்றுப் பெரிய வீடொன்றை அடைந்து கதவைத் தட்டினாள் சிறுமி.

கூனன் வெளியிலேயே நின்றிருந்தான். ''கூன மாமா வாருங்கோ'' என்று குரல் உள்ளிருந்து கேட்டது. வாதாபியில் தமிழ்க்குரல் கேட்டது. கூனனை வியப்பில்ஆழ்த்தியது. அதுவும் 'கூன மாமா' பெயர் சொல்லி யாரோ அழைக்கிறார்கள். சகோதரியின் குரல்போலவே இருந்தது. ஒரு வேளை — ஒருவேளை அவளாக இருக்குமோ?

தயங்கியவாறு கூனன் உள்ளே நுழைந்தான். கூடத்தின் ஓரத்தில் உள்ள மஞ்சத்தில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். கூனனைக் கண்டவுடன் எழுந்து வரவேற்று, அவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள்.

கூனனுக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்துப் போய் நின்றான் வேற்று மனிதர்கள் சூடாக இருந்திருந்தால் அவனது உருவத்தையும், தோற்றத்தையும் கண்டு கேலி செய்து கும்மாளமிட்டுச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால், அங்கு அவனுக்குப் பரிவு கலந்த மரியாதை

நிறைந்த வரவேற்புக் கிடைத்தது திகைத்து நின்ற கூனனை மறுபடியும் அந்தப் பெண் புன்சிரிப்புடன் வரவேற்றாள்.

''வாங்கோ, மாமா! என்னைத் தங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் சிறிது கூடவா, என் தாயின் சாயல் என்னிடம் தெரியவில்லை?'' என்று அவள் அவன் அருகே நெருங்கிக் கேட்டாள்.

கூனன் புரிந்து கொண்டான் ''ஆ! பவழவல்லியின் மகள்'' என்று கூறித் துள்ளிக் குதித்தான்.

''என் செல்வமே! என் இரத்தினமே! உன்னைத் தேடித் தானே நான் காஞ்சியினின்று வந்தேன். நான் உன்னைக் கண்டுபிடிப்பது போக நீயே என்னைக் கண்டு பிடித்து விட்டாயே! எப்படிக் கண்டு பிடித்தாய் என் தங்கமே!'' என்று அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டு கூத்தாடினான்.

அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் பொங்கி வழிந்தன.

''என்னை எப்படி அடையாளந் தெரிந்து கொண்டாய்?'' என்று கூனன் கேட்டான்.

''என் அம்மா தங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். எப்போதும் தங்கள் நினைவுதான் தாயாருக்கு. தங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே யிருப்பார். தங்கள் கூன் முதுகைப்பற்றிப் பெருமையாகக் கூறுவார்'' என்றாள் பவழவல்லியின் மகள்.

''கூன் முதுகைப்பற்றிப் பெருமையாகக் கூற என்ன இருக்கிறது?'' என்று கூனன் கேட்டான்.

''கூனலாக இருக்கிறதேயென்று கவலைப்படமாட்டீர்களாம், கடுமையாக உழைப்பீர்களாம்'' என்றாள் அவள்.

அவள் பேசுவதைக் கேட்கக் கேட்கக் கூனனுக்குத் தன் சகோதரியின் நினைவுதான் வந்து கொண்டிருந்தது. அவ

ளுடைய ஒவ்வொரு அங்க அசைவும், நடை பாவனைகளும் சகோதரியை நினைக்குமாறு செய்தன.

திடீரென்று "பவழவல்லி, என் அருமை அக்கா தாங்கள் எங்கிருக்கிறீர்கள்?" என்று கூவிய கூனன் தேம்பித் தேம்பி அழுதான். அவன் சிறு குழந்தைபோல் அழுவதைக் கண்ட பவழவல்லியின் மகளுக்கு அழுகை வந்தது. அவர்கள் அழுவதைக் கேட்டு விழித்தெழுந்த அவளுடைய ஒரே வயது மகன் ஒன்றும் தோன்றாமல் விசித்து அழத் தொடங்கினான்.

16

பவழவல்லியின் மகளுடைய பெயர் பூமகள். அவளை பூமா என்று அழைத்தனர். அரண்மனைப் பாடகியின் வீட்டில் வளர்ந்ததால் அவளுக்கு இசை ஞானம் எளிதில் ஏற்பட்டது. நல்ல குரலும் இயற்கையாகவே இருந்தது. வளர்ப்புத் தாய் அவளுக்குச் சங்கீத சாஸ்திரத்தைக்கற்றுக் கொடுத்தாள், தனக்குப்பிறகு வாதாபி மாளிகையில் பூமாவின் குரல் ஒலிக்க வேண்டுமென்பது அவளுடைய ஆசை.

பிக்குணியாக மாறிவிட்ட தன் தாய் பவழவல்லியை முடிந்தபோதெல்லாம் சந்தித்துக் கொண்டிருந்தாள் பூமா. கடுமையான தவமும், விரதமும் மேற்கொண்டுஉடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்திக் கொண்ட பவழவல்லி அவ்வப்போது வாதபியை விட்டு சொந்த ஊரான காஞ்சிக்குச் சென்றுவிடுமாறு கூறுவாள். கூனனின் அங்க அடையாளங்களைச் சொல்லி, எப்படியும் அவனைச் சந்திக்குமாறு வற்புறுத்துவாள்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பிக்குணியான பவழ வல்லியின் உயிர் பிரிந்தது.

பூமாவுக்கு அரண்மனைப் பாடகியின் ஒரே ஆதரவு. தாயற்ற பெண்ணை மிகவும் உயர்ந்தவளாக வளர்த்து வந்தாள். அவளுக்குப் பவழவல்லியின் கதை தெரியும். அவள் சகோதரன் கூனனைப் பற்றியும் கேள்விப்பட்டிருக் கிறாள். அவள்தான், வாதாபி வீதியில் கூனனை முதல் முதல் கண்டாள். தொடர்ந்து இரண்டுமூன்று நாட்கள்பல இடங்களில் அவனைக் கண்ட பிறகுதான் பவழவல்லியின் சகோதரன் என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்டு பூமாவிடம் தெரிவித்தாள்.

அரண்மனைப் பாடகியானஅவள் செல்வந்தர் ஒருவர் வீட்டில் நாட்டியத்துக்குப் பதம்பாடும் நிகழ்ச்சி நடக்கும் வேளையில் கூனன், வணிகர்களின் வண்டியை ஓட்டி வருவார் என்பதறிந்து, அவனை அழைத்து வர ஏற்பாடு செய்திருந்தாள்.

கூனன் தனது அழுகையை ஒருவாறு நிறுத்தி, பவழவல்லி இறந்து விட்ட செய்தி கேட்டு அதிர்ச்சி யடைந்து அதனின்று மீள வெகு நேரம் பிடித்தது.

"பூமகளே! எங்கள் குலக் கொடியாக நீயாவது மிஞ்சினாயே" என்று கூனன் மகிழ்ச்சியுடன் கூறினான்.

பூமகள், மஞ்சத்தில் உறங்கும் குழந்தையைச் சுட்டிக் காட்டி, "நான் மட்டும் குலத்தின் அழியாத கொடி யல்லள். இதோ இவனைப் பாருங்கள்; நமது குலத்தை இவன் விளங்க வைப்பான்" என்றாள்.

கூனனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. பூமாவுக்குக் கல்யாணமாகிக் குழந்தையும் இருக்கிறதே 'அவளுடைய கணவர் யார் என்ற ஐயத்தை எப்படிப் போக்குவதுஎன்று கவலைப்படலானான்.

பூமாவே அதைத் தீர்த்தாள். இரண்டாண்டுகளுக்கு முன்பு, சங்கீதக் கோஷ்டியைச் சேர்ந்த குழலூதுபவனை அவள் காதலித்தாள். அதன் விளைவாக ஆண் குழந்தை பிறந்து இப்போது குழந்தைக்கு ஓராண்டாவதாகவும் செய்தித் தெரிவித்தாள்.

கூனனுக்கு, பூமாவின் செய்கை மனச் சம்மதத்தைத் தரவில்லை. பிறந்திருக்கும் குழந்தை சாளுக்கியன் தானே! விரோதி நாட்டுப் பிரஜையும் விரோதிதானே என்று எண்ணினான். கூனன் சந்தேகப்படுவதைப் பூமகள் தெரிந்து கொண்டு விட்டாள்.

''மாமா, என் காதலர், சாளுக்கியராயினும் இந்த நகரத்தில் வாழ்வதே அவருக்குப் பிடிக்கவில்லை. தெற்கே காஞ்சியில் கலைக்குச் சிறந்த வரவேற்பு இருப்பதாக அவர் கேள்விப்பட்டிருக்கிறார் அடிக்கடி சொல்வார் 'நாம இரண்டுபேரும் காஞ்சிக்கு ஓடிவிடுவோமா?' என்று. அதனால், நீங்கள் எப்படியாவது காஞ்சிக்கு எங்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தீர்களானால் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைவார்'' என்றாள்.

''உன் வளர்ப்புத் தாய் சம்மதிப்பாளா?'' என்று கேட்டான் கூனன்.

''நான் அவர்களை எப்படியும் சமாதானபபடுத்தி விடுவேன்'' என்றாள் பூமா.

கூனன் சிந்தித்தான். நேரமாவதால் மறுநாள் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றான். தன்னை மீண்டும் அழைத்து வந்த இடத்திலேயே கொண்டு விட்டுவிடுமாறும் தனக்கு வழி தெரியாது என்றும் கூறினான்.

அவனுக்கு வழிகாட்ட வேண்டிய அவசியமே இல்லாது போய்விட்டது. வீட்டைவிட்டு வெளியே அவன் வந்த உடனேயே சாளுக்கிய வீரர்கள் அவன் தோளைத்

தொட்டு நிறுத்தினர். அவர்கள் என்னவோ பேசினர். கூனனுக்குப் புரியவில்லை கூனனைத் தங்களுடன் வருமாறு சைகை காட்டினர்கள்.

கூனன் அவர்களைப் பின் தொடர்ந்தான். ஒற்றர் படைத் தலைவரிடம் கூனனை அழைத்துச் சென்றார்கள். அங்கே தமிழ்ப் பேசும் ஒற்றன் ஒருவன் இருந்தான். அவன் தான் கூனனை விசாரித்தான். குறுக்குக் கேள்விகள் பல கேட்டான்.

கூனன் தன்னைப்பற்றிய வரலாற்றைக் கூறினான்; ஆனால் சிலவற்றை மட்டும் மறைத்துக் கூறினான். சிறைச் சாலையிலிருந்து விடுதலையானவுடன் தன் சகோதரியைக் காண வாதாபிக்கு வந்த விபரத்தைக் கூறினான். நல்ல தம்பியின் பெயரை அவன் மிகவும் கவனத்துடன் குறிப் பிட்டான்.

அவரைக் கொல்ல முயன்றதைத் தெரிவிக்கவில்லை. வழிப்பறி குற்றத்திற்காகத் தன்னைச் சிறையிலடைத்ததை யும், தான் தப்பிச் சென்றதையும் மீண்டும் அதற்காகத் தண்டனை பெற்றதையும் தெரிவித்தான்.

''உன் சகோதரியைச் சந்தித்தாயா?'' என்று ஒற்றர் தலைவர் கேட்டார்.

''அவள் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டனவாம்'' என்றான் கூனன்.

''அப்படியென்றால் நீ இங்கு யாரைச் சந்தித்தாய்?'' என்று தலைவர் கூரிய பார்வையைக் கூனனின்மீதுசெலுத் தியவாறு கேட்டார்.

''சகோதரியின் மகளை...''

''அவள் பெயர் என்ன?''

''பூமா...''

''ஓ! அரண்மனைப் பாடகியின் வீட்டிலிருக்கிறாளே, அவளா?''

''ஆமாம்...''

ஒற்றர் தலைவரும் மற்றவர்களும் பிராகிருதத்தில் பேசிக் கொண்டனர்.

சிறிது நேரம் தலைவர் ஏதும் பேசவில்லை. கூனனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார் அப்படியே விழுங்கி விடுபவர் போலப் பார்த்துக் கொண்டிருந்தார். தமிழிலே பேசும் உதவியாளன் மூலம் அவனைக்கேட்டார்.

''வாதாபியிலேயே தங்குவதற்கு உனக்கு இஷ்டமா?'' என்று அவன் கேட்டவுடன் கூனனுக்கு வியப்புத் தாங்கவில்லை. பல்லவ நாட்டு ஒற்றர்படைத் தலைவர் சொல்லியது போல சாளுக்கிய ஒற்றர் கேட்கிறார்.

கூனன் சிறிது நேரம் யோசித்தான்.

''என்ன யோசிக்கிறாய்? உன் சகோதரியின் மகளுக்கு உதவியது போலிருக்கும், அரசாங்கத்திலிருந்து தக்க சன்மானம் வாங்கித் தருகிறோம்...'' என்றான்.

''என்ன வேலை?''—கூனன் கேட்டான்.

''என்ன வேலை வேண்டுமானாலும். உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?''

''மரம் வெட்டுவேன்; கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துக் கொட்டுவேன். வண்டி ஓட்டுவேன்'' என்று கூனன் கூறியவுடன், ஒற்றர்படைத் தலைவர் நகைத்தார்.

தலைவர் சிரித்தார் என்றால், அவருக்கு மிகவும் பிடித்தமானவருடன்தான் அவர் தொடர்பு கொள்கிறார் என்று பொருள்.

"மரம் வெட்ட வேண்டாம்; தண்ணீர் இழுக்க வேண்டாம். எங்களுடன் நாங்கள் சொல்லும் வேலையைச் செய்து கொண்டிருந்தால் போதும்" என்றார் தலைவர்.

கூனன் தலையசைத்தான். பிறகு சொன்னான்: "நான் வணிகர்களுக்கு வண்டி ஓட்டி வந்திருக்கிறேன். அவர்களை நாட்டியமாடும் இடத்தில் விட்டு வந்து விட்டேன். நாட்டியம் முடிந்து என்னைக் காணாது திகைப்பார்கள். நான் அவர்களிடம் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்" என்றான்.

"அந்தச் சிரமம் உனக்கு வேண்டாம். அவர்கள் வணிகர்கள் அல்லர். நாட்டியம் பார்க்கவும் வரவில்லை. அவர்களுடன் தங்கியிருப்பதால் உனக்கு இனி எந்தப் பலனுமில்லை. அவர்கள் சௌகரியமாக சிகையில் இருக்கிறார்கள்" என்றார் தலைவர்.

கூனன் திடுக்கிட்டு, "அப்படியென்றால், அந்த வண்டி, மாடுகள்?" என்று சூதுவாது தெரியாத குழந்தைத தன முள்ளவன் போல் கேட்டான்.

"வண்டி, மாடு, அவற்றிலிருந்த பண்டங்கள் யாவும் ஜாக்கிரதையாக உள்ளன. இப்போது நீ பூமா வீட்டிற்குப் போகவேண்டுமென்றால் போகலாம். இல்லாவிடில் இங்கேயே படுத்துக் கொள்ளலாம்" என்றார் தலைவர்.

தன்னைச் சாளுக்கியர்களின் ஒற்றர்படையில் சேர்த்துக் கொண்டு விட்டார்கள் என்பது கூனனுக்குப் புரிந்து விட்டது. பூமாவின் வீட்டிற்கு அவன் செல்ல விரும்பவில்லை. அங்கேயே படுத்துக் கொண்டான்.

இரவு அவன் தூங்கும்போது, அவனருகே யாரோ பேசும் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். ஆனால் எழுந்திருக்கவில்லை. உறங்குபவன்போல் நடித்தான். தமிழ் தெரிந்த மற்றொருவனுடன் ஒற்றர் தலைவன் மொழி பெயர்ப்பாளரின் உதவியுடன் பேசுகிறார் என்று புரிந்து கொண்டான்.

''இந்தக் கூனனை எனக்குத் தெரியும்'' என்று அவன் சொல்கிறான்

''இவனை நம்பலாமா?'' என்று தலைவர் கேட்கிறார்,

''படையெடுப்பின்போது கூனனை வைத்துக் கொண்டு பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம்'' என்றான் அந்தத் தமிழ் தெரிந்தவன்.

கூனனை வைத்துக்கொண்டே ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க வேண்டும். அவன் சகோதரியின் மகள் ஒரு பாடகி. அழகி. அவளையும் படையெடுப்பின் போது அழைத்துச் செல்லப் போகிறோம். நடனக் குழு ஒன்றும் வருகிறது. காஞ்சி மக்கள் கலை ரசனை உடையவர்கள். பாடல், நடனகோஷ்டி இவர்களைக் கொண்டு காஞ்சியில் பலவற்றை நாம் சாதித்துக்கொள்ளலாம்'' என்றான்.

பல்லவ நாட்டு ஒற்றர் தலைவர் கூறியபடியே காரியங்கள் நடந்து வருவது கூனனுக்கு வியப்பை அளித்தன. ஆனால், வணிகர் வேடத்தில் வந்த ஒற்றர்கள் பிடிபட்டனர். ஒற்றர் தலைவர் மட்டும் தப்பிவிட்டார்.

17

காஞ்சியின் மீது படையெடுக்க சாளுக்கிய மன்னன விக்கிரமாதித்தன் தக்க நாளை எதிர்பார்த்து வந்தார். அது எந்த நாள், ஏன் தாமதிக்கிறார் மன்னர் என்பது வாதாபியில் ஒருவருக்கும் தெரியாது.

பல்லவ மன்னன் பரமேச்வரவர்மன் நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்தி விக்கிரமாதித்தனை எட்டியது. உடனே,

தன் மகன் கீர்த்தி வர்மனை அழைத்து உடனே படைகளுடன் புறப்படுமாறு கட்டளையிட்டார்.

படைகள் புறப்பட்டன. அணி அணியாகப் புறப்பட்டன. அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சுமந்து வரும் வண்டிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. சமையல் செய்பவர், குற்றேவல் செய்பவர், மருத்துவர்கள், மற்றர்கள் என்று சிறுநகரமே நகர்ந்து வருவது போல் தோன்றியது. பூமாவும், அவளுடைய கணவனும் மற்றும் நடனமாதர்களும், பாடகிகளும் பாடகர்களுமாக ஒரு கோஷ்டி உடன் வந்தது.

களைப்பு ஏற்படாதிருக்க ஆங்காங்கே அவர்கள் தங்கி வந்தனர். முன்பே பல இடங்களில் தங்கியிருந்த வீரர்களும் படையெடுத்து வரும் படைகளுடன் சேர்ந்து கொண்டனர்.

ஒரே மூச்சில் காஞ்சிமா நகரத்தைத் தாக்கிப் பிடித்து விடுவது என்பது அவர்களுடைய திட்டம். காஞ்சிக்கு வெளிப்புறத்திலேயே படைகளைத் தடுத்து நிறுத்துவது பல்லவர்கள் திட்டம். தக்கோலம், மணிமங்கலம், போன்ற இடங்களில் வாதாபிப் படைகளை எதிர்பார்த்து பல்லவ வீரர்கள் காத்திருந்தனர்.

நெருக்கடி நிலைக் காரணமாக கோலூர் சிறைச்சாலையிலுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். நீலாவின் தந்தையின் கால் எலும்பு கூடவில்லை. அதனால் அவர் திருக்கழுகுக் குன்றத்திற்குச் சென்று விட்டார். சாளுக்கிய படைகள் வரும் வழியிலுள்ள ஊர் மக்கள் தங்கள் உடமைகளை விட்டு அருகேயுள்ள வனங்களில் புகுந்து கொண்டனர்.

பல்லவ வீரர்கள் நடுவழியிலேயே தங்களை எதிர்க்கப் போகிறார்கள் என்ற செய்தி சாளுக்கிய வீரர்களுக்கு எட்டியது. அதனால் அவர்களும் முன் எச்சரிக்கையாக முப்பிரிவுகளாகப் பிரிந்தனர்.

காஞ்சியில், படுத்த படுக்கையாகக் கிடந்த பரமேச்வர வர்மனிடம் மந்திரி மண்டலத்தாரும், தளபதிகளும் ஆலோசனை நடத்தினர். காஞ்சிக் கோட்டைக்குவெளியே உள்ள பல்லவப்படை வீரர்களை உடனே கோட்டைக்குள் வரவழைத்து விடுமாறு மன்னர் உத்தரவிட்டார். கோட்டைக் கதவுகள் மூடப்பட்டன. அகழிகள் முன்பே பழுதுபார்க்கப்பட்டிருந்தன. அகழிகளில் தண்ணீர் தளும்பி நின்றது. கோட்டைக்குள் நுழையும் அகழிப் பாலங்கள் தகர்க்கப்பட்டன.

காஞ்சியை நெருங்க நெருங்க சாளுக்கிய வீரர்கள் தங்களுக்கு எதிர்ப்பே இல்லாததால் மிக மகிழ்ச்சியடைந்தனர். கோட்டையை எளிதில் பிடித்து விடலாம் என்று குதூகலமடைந்தனர். பாடி வீடமைத்து கொம்மாளமிட்டனர். பாட்டும் நடனமும் வீரர்கள் தங்கிய இடங்களில் நடைபெற்றன. மதுவும் மாமிசமும் குடித்து உண்டும் கூத்தாடினர்.

பூமாவும் அவள் கணவனும் தங்கியிருக்குமிடத்திற்கு கூனன் வந்தான்.

''பல்லவர்கள் எதிர்க்காமல் கோட்டைக்குள்ளே பதுங்கியிருப்பது பலமான பாய்ச்சலுக்கு அடையாளம். சாளுக்கிய வீரர்கள் சோம்பலுடன் உண்டு உறங்கியிருக்கும் வேளையில் திடீரென்று பலமாகத் தாக்கி விடலாம். பல ஆண்டுகளுக்கு முன்பு இப்படித்தான் நரசிம்ம பல்லவன், சாளுக்கிய மன்னர் புலிகேசியைத் தாக்கி மணிமங்கலம் அருகே போரிட்டு வெற்றி கண்டார். அதைப் போல இப்போதும் நேரலாம். நீங்கள் சமயம் பார்த்துத் தப்பித்து ஓடி விடுங்கள். நான் அடிக்கடி வந்து சந்திக்க முடியாது. காஞ்சியை நெருங்கி விட்டதால், என் உதவியையும், யோசனையும் கேட்க சாளுக்கிய ஒற்றர்ப் படைத் தலைவர் என்னைத் தேடுவார். போரின் முடிவு எப்படியிருக்கும் என்று தெரியாது. எப்படியிருந்தாலும் நான் பிழைத்துக் கொள்வேன். உங்களை நான் எப்படி

யாவது வந்து சந்திப்பேன் எங்கிருந்தாலும் கண்டு பிடித்து வந்து விடுவேன்'' என்று கூறிவிட்டுக் கூனன் விரைந்து ஓடி மறைந்தான்.

பனிக்காலம் மறைந்து, கோடைக்காலம் வந்தது. சாளுக்கிய வீரர்கள் காஞ்சிக் கோட்டையை நான்கு புறமும் சூழ்ந்து கொண்டனர் எப்படியாவது கோட்டைக்குள் செல்ல முயன்றனர். அகழியை நெருங்கினாலே சரமாரியான அம்புகளும், ஈட்டிகளும், வேல்களும் பாய்ந்து வந்து தாக்கி சாளுக்கியர்களை ஓடச்செய்தன.

கோட்டைக்குள்ளே உணவுப் பண்டங்கள் செல்லாமல் சாளுக்கியர்கள் பார்த்துக் கொண்டனர். ஆனால் பால், தயிர், மற்றும் நவதானியங்கள் அருகிலிருந்த கிராமங்களிலிருந்து காஞ்சிக் கோட்டைக்குள் செல்வதாகவே தெரியவில்லை.

நாட்கள் நகர்ந்தன. கோட்டைக்குள் என்ன நடக்கிறது, அவர்களுடைய நோக்கமென்ன என்பதை அறிந்து கொள்ள சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மன் முயன்றான். பழிக்குப்பழி வாங்கும் மனப்பான்மையுடன் இருந்த கீர்த்திவர்மன் எப்படியாவது போரின் போக்கை மாற்ற முயன்றான்.

கூனன் வரவழைக்கப்பட்டான். காஞ்சிக் கோட்டைக்குள் நுழைந்து செய்தியறிந்து வரவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். மற்றொரு எச்சரிக்கையையும் கூறினான். கோட்டைக்குள் சென்று செய்திகளை அறிந்து திரும்பி ஒரு வாரத்திற்குள் வராவிடில், உன் சகோதரி மகளைப் பழிக்குப் பழி வாங்கி விடுவேன் என்று கடுமையாகக் கூறிய சாளுக்கிய இளவரசனின் கட்டளை கூனனுக்கு நடுக்கத்தை அளித்தது.

சாளுக்கியர்களின் திட்டமிட்ட இராஜ தந்திர அறிவையும், போர்த் திறமையையும் அப்போதுதான் உணர்ந்தான் கூனன்.

ஒரு சாதாரண கூனனை எதற்காக ஒற்றர்ப்படையில் சேர்த்துக் கொண்டார்கள் என்பது இப்போதுதான் புரிந்தது. சகோதரி மீது நான் கொண்ட பாசத்தை நன்றாக உணர்ந்து கொண்டார்கள். என்னையே பணயம் வைத்து விட்டார்கள். காஞ்சிக் கோட்டைக்குள் போக முடியாது என்று கூறினாலும் ஆபத்து, போனாலும் ஆபத்து' என்று கவலையுடன் சிந்தித்தான்.

''கூனா, என்ன யோசிக்கிறாய்? போர்க் காலத்தில் உடனே முடிவு எடுக்க வேண்டும். நொடித் தாமதங்கூட பெரும் ஆபத்தை விளைவித்து விடும். கோட்டைக்குள்ளே செல்ல ஏதாவது வழி இருக்கிறதா? கோட்டையை எளிதில் தாக்கக் கூட பலங்குறைந்த இடம் ஏதாவது இருக்கிறதா? பாதுகாவல் குறைவான இடம் ஏதாவது இருக்கிறதா? கோட்டைக்குள்ளே உயிர்வாழ எவ்வளவு நாட்களுக்கு உணவு இருக்கிறது? இவ்வளவையும் நீ தெரிந்து கொண்டு வரவேண்டும்'' என்று ஒற்றர்படைத் தலைவரும் கணடிப்பாகக் கூறிவிட்டார்.

கோடைக் காலத்து ஒருநாள் மாலை வானம் இருண்டது. மின்னல் ஒளி வானையும், பூமியையும் தொட்டுச் சென்றது. உலகமே தூள் தூளாகி விடுவதுபோல் இடி இடித்தது. மழை பெய்தது,

''இதுதான் சமயம்; நான் போய் வருகிறேன் ஐயா!'' என்று கூறினான் கூனன்.

கூனனின் துணிவு தலைவனுக்கு வியப்பை அளித்தது. ''கூனா, தைரியமாகப் போய்வா. உன் உயிருக்கு எந்த வித ஆபத்தும் ஏற்படாது. அப்படி ஏற்பட்டால், வாதாபியில் சிறைப்பட்டுள்ள பல்லவநாட்டு ஒற்றர்களைப் பழிக்குப்பழி வாங்கி விடுவோம் என்பது அவர்களுக்குத் தெரியும்'' என்று உற்சாகப்படுத்தினார்.

இருளில், கொட்டும் பயங்கர மழையில் கூனன், பூமா தங்கியிருக்கும் கூடாரத்திற்கு வந்து சேர்ந்தான். நாற் புறமும் மழைத் தண்ணீர் ஓட, தன் குழந்தையைத் தோளில் அணைத்துக் கொண்டு பூமா பயத்தாலும், குளிராலும் நடுங்கியவாறு நின்று கொண்டிருந்தாள்.

கூனனைப் பார்த்தவுடன் 'கோ'வென்று கதறி அழு தாள். மழை ஆரம்பிக்கும் முன்பே எங்கோ சென்ற அவள் கணவன் இன்னும் வந்து சேரவில்லை என்று கவலை யுடன் கூறினாள்.

"பூமா, கவலைப்படாதே. அழாதே. இந்த மழை நீடிக்காது. ஓரிரண்டு நாட்கள் தாமிருக்கும். நான் காஞ் சிக் கோட்டைக்குள் செல்லப் போகிறேன். உன் கணவர் வந்தவுடன் நீயும் இருளோடு இருளாய்த் தப்பி அருகே யுள்ள காட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டு விடு. மழை விட்டதும் காட்டுப் பாதை வெளியே நடந்து செல். ஏதாவது கிராமம் தென்படும். தமிழ் மக்கள் மிக நல்லவர்கள். உங்களைக் காப்பாற்றுவார்கள். காஞ்சிக் கோட்டைக்குள் போனால் நான் உடனே திரும்ப மாட் டேன். சாளுக்கியர்கள் போரில் தோற்றோ, பின்வாங் கியோ சென்றபிறகுதான் வருவேன். பிறகு நாம், காஞ்சி நகரத்திற்குள் சென்று அமைதியாக வாழலாம்' என் றான். தலையை ஆட்டுவதைத் தவிர பூமாவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கூனன் இருளில் சென்று மறைந்தான்.

பளிச்சென்ற மின்னல் ஒன்று இருளை வெட்டிச் சென்று மறைந்தது.

மழை ஓய்ந்தது. காஞ்சி முற்றுகை நீடித்தது சாளுக் கிய வீரர்கள் கொண்டு வந்திருந்த உணவுப் பொருள் கள் தீர்ந்து விட்டன. உணவு வேண்டி சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்று உணவு பெற முயன்றனர் சாளுக்கிய வீரர்கள். அருகேயுள்ள கிராமங்களில் மக்கள் நடமாட்டமே இல்லை. கிராமத்து நெற் களஞ்சியங்

களை உடைத்து நெல், கம்பு, போன்ற தானியங்களைக் கொண்டு வந்தனர்.

நாட்கள் ஓடின. பல்லாயிரக் கணக்கான வீரர்களுக்கு இருவேளை சோற்றுக்கு அரிசியைத் தேடுவது அவ்வளவு எளிதாகப்படவில்லை. கீர்த்திவர்மன் சோர்வுற்றான். கவலை அவனை வாட்டியது. கோட்டை முற்றுகை யினின்று படை வீரர்களைத் திரும்ப அழைத்து, உண வுப் பண்டங்களைச் சேகரிக்க அனுப்பினான். காஞ்சிக் கோட்டைக்குள் சென்ற கூனன் திரும்பி வராதது அவர் களுக்குப் பெரும் கவலையை அளித்தது.

காணாமல் போன பூமாவின் கணவன் பெருமழை பெய்த அன்று, தடம் தெரியாமல் வழியிலிருந்த பெரிய துரவு ஒன்றில் வீழ்ந்து விட்டான். சில நாட்கள் கழித்து அவனுடைய உடல் மிதந்தது. வயிற்றுப் பிரச்னையில் வாடும் சாளுக்கியர்கள், பூமாவின் பிற்கால வாழ்வைப் பற்றிக் கவலைப்படவில்லை. பூமா, தன் குழந்தையுடன் கால் போன போக்கில் நடந்தாள். சாளுக்கியப்படை வீரர்கள் சிறு சிறு குழுவினராக உணவுத் தேடிச் செல்லத் தொடங்கினர். படைகளுடன் வந்த மற்றவர்கள் திரும்பவும் தங்கள் ஊருக்குச் செல்ல வடக்குத் திசை நோக்கி நடக்கலாயினர்.

சாளுக்கிய வீரர்கள் சிதறுண்டு செல்வதறிந்த, பரமேச்வரவர்மர் தனது கொடிய நோயின் கடுமையான கடைசிக் காலத்தில், பல்லவ வீரர்களுக்குக் கட்டளையிட் டார். ''கோட்டைக் கதவுகளைத் திறந்து கொண்டு, சாளுக்கிய வீரர்களைத் தொடர்ந்து சென்று தாக்குங் கள்? ஓடஓட விரட்டுங்கள்.''

தெற்கு நோக்கிச் சென்ற சாளுக்கிய வீரர்கள் எதிர் பாராத பெரும் தாக்குதல் கண்டு திகைத்தனர். சோர் வும், பசியும் சேர்ந்திருந்த சாளுக்கிய வீரர்களால் எதிர்த் துப் போரிட முடியவில்லை.

பெருவள நல்லூரில் நடைபெற்ற பயங்கரப் போர் வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்தது.

சாளுக்கிய வீரர்கள் செத்தோம் பிழைத்தோம் என்று ஓடி வந்து கொண்டிருந்தனர். வாதாபியில் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் இறந்துவிட்ட செய்தி வேறு கிடைத்தது தோல்வியும், சோகச் செய்தியும் ஒன்றுசேர வீரர்கள் பழிவாங்கும் நெஞ்சினராய், தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்காத உள்ளத்தினராய், வழியே உள்ள ஊர்களையெல்லாம் தீயிட்டுக் கொளுத்தினர். களஞ்சியங்களில் இருந்த தான்யங்களை கொள்ளையிட்டது போக மீதி உள்ளவற்றை அடியோடு அழித்தனர். கீர்த்தி வர்மனும், எஞ்சியிருந்த வீரர்களைப் பின்வாங்கித் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டுவிட்டுத் தானும், பல்லவ வீரர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி வாதாபி நோக்கு விரைந்தான்.

போர் ஓய்ந்து பல மாதங்கள் ஆகிவிட்டன காஞ்சியில் பரமேச்வரவர்மன் இறந்து விட்டார். அவரது மகன் இளவரசன் நரசிம்மவர்மன் என்ற பெயர் கொண்டவன் இராஜசிம்மன் என்ற பெயருடன் பல்லவ மன்னராக மகுடம் சூட்டிக் கொண்டான். அவன் முன்பு பல பிரச்னைகள் பயங்கர உருவெடுத்து நின்றன. பலமாதங்கள் ஏற்பட்ட கோட்டை முற்றுகையால், மக்கள் அரைப்பட்டினியாக இருந்ததோடு, பீதியின் காரணமாக உள்ளமும், உடலும் சோர்வுற்றுப் போயினர். காஞ்சி நகர மக்களுக்கு சுற்றுப்புறத்து ஊர்களிலிருந்துதான் பால், காய்கள் போன்ற அன்றாட உபயோகப் பண்டங்கள், உணவுப் பொருள்கள் வரவேண்டும். பசுக்கள் மந்தை மந்தையாகக் கொல்லப்பட்டிருந்தன அதனால் பால் கிடைக்கவில்லை. ஏரிகள், குளங்கள் வற்றி விட்டன.

மழைக்கால இரவு அன்று கூனன், அகழியில் நீந்தி கோட்டைக் கதவோரம் சென்றான். மழை நிற்கும்

வரை காத்திருந்து, வெளிச்சம் வந்தவுடன் கோட்டைத் திட்டிக் கதவைத் தட்டினான். கோட்டைக் காவலர்களுக்கு வியப்பாக இருந்தது. அகழியைத் தாண்டி வரக் கூடியவர் யாராயிருக்கும் என்ற கவலை அவர்களைப் பிடித்தது. கோட்டைக்கு உட்புறம் தளபதியும், மற்றும் உயர்தர அதிகாரிகளும் கூடி விட்டனர். திட்டிக் கதவு சிறிது திறக்கப்பட்டது.

கூனனைப் பார்த்தவுடன் அவர்கள் சமாதானமடைந்தனர். கூனனை அவர்கள் முன்பே அறிவர். வாதாபிக்கு ஒற்றர்களுடன் அவன் சென்றிருக்கும் விஷயமும் அவர்கள் அறிவர். ஆகையால் கூனனைப் பார்த்தவுடன் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

கூனன் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் கூறினான். கூனன் கூறிய பிறகுதான் படைத் தளபதியும், ஒற்றர்களும் புதிய திட்டத்தை வகுத்தனர். கோட்டை முற்றுகையை எப்படியும் எதிர்த்து நிற்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

'சாளுக்கியர்களின் கடைசி வீரன் பல்லவபூமியிலிருந்து ஓடி மறைந்த பிறகு, காஞ்சியில் யுத்த பீதி மறைந்தவுடன் கூனனுக்குப் பெரும் பாராட்டு கிடைத்தது. கூனனை சக்கரவர்த்தியிடம் அழைத்துச் சென்று சம்மானங்கள் பெற்றுத் தர விரும்பினர். ஆனால் சக்கரவர்த்தியின் கடுமையான உடல்நிலை அதற்கு இடங்கொடுக்கவில்லை. அவர் ஓரிரு நாட்களில் இறந்தும் விட்டார்.

காஞ்சியில் உணவுப் பஞ்சம் விசுவரூபமெடுத்தது. வேலை செய்பவர்களுக்கே உணவு கிடைக்காத போது கூனனுக்கு யார் சோறு போடுவார்கள். கூனன் முன்பு போல் சுறுசுறுப்பாக இல்லை. வயதின் முதிர்ச்சி உடலில் பிரதிபலித்தது.

இப்போது பூமாவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற புதுக்கவலை அவனை ஆட்கொண்டது. காஞ்சியை விட்டு வெளியேறினான். சகோதரியைக் கடைசி வரையில்

காணாமல் அவளை இழந்தோம். அவன் மகள் பூமாலை அவ்வளவு எளிதில் இழந்து விடக்கூடாது என்ற உறுதி கொண்டான்.

'ஒருவேளை, சாளுக்கியப் படைகள் தோற்றோடிய போது அவளும் அவள் கணவனும் வாதாபிக்குச் சென்றிருந்தால்?'— இதை நினைக்கும்போது 'ஓ'வென்று ஓலமிட்டு அலற வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது.

காஞ்சியில் தங்கியிருக்கப் பிடிக்காததற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அவன் பெரிய தம்பியைக் காஞ்சியில் சந்தித்தது. பெரிய தம்பிக்குக் காஞ்சியில் மிகப் பெரிய மரியாதை. போர்க் காலத்தில், பெரியதம்பி, உயிரையும் பொருட்படுத்தாமல் பல பணிகளை ஆற்றியிருந்தானாம்.

''இவன்தானே, நீலவல்லியைக் காதலித்தவன், இவனைத்தானே நாம் தாக்கினோம்?'' என்று கூனன் பழைய சம்பவங்களை நினைத்துப் பார்த்தான்.

பெரியதம்பி இப்போது பெரியமனிதன். அரசாங்கச் செல்வாக்குள்ளவன். பழைய விரோதம் காரணமாக இப்போது ஏதாவது இடையூறு செய்தாலும் செய்வான் என்ற எண்ணத்தில் காஞ்சியில் இருக்க விரும்பவில்லை.

பாவம், பெரியதம்பி காஞ்சி நகரத்திலேயே இருக்க மாட்டான் என்பதும், அவனுக்கு சொந்தஊர் குன்றத்தூர் என்பதும் கூனனுக்குத் தெரியவாய்ப்பில்லை.

கூனன் காஞ்சியை விட்டு வெளியேறினான். ஒவ்வொரு கிராமமாகத் தன் சகோதரியின் மகள் பூமாலைத் தேடி அலையலானான்.

கடுங்கோடையில், கதிரவனின் கொடிய தாக்குதலைப் பாராமல் கூனன் அலைந்தான்.

கோடை சென்றது. மழைக்காலம் வரவில்லை. வானத்தே ஒரு சிறிய மேகத்தைக்கூடக் காணவில்லை.

பறவை இனங்கள் தெற்கும், வடக்கும் நீர்நிலைகளைத் தேடிக் கூட்டங் கூட்டமாகச் சென்றன.

18

"கணபதியப்பா...பிள்ளையாரப்பா...நீ தான் இந்த நாட்டைக் காப்பாற்றவேண்டும். பஞ்சம், பசிப்பிணி ஓட்ட வேண்டும். குடிக்கத் தண்ணீரில்லாமல் நாங்கள் படும் அல்லல் இருக்கட்டும்; வாயில்லா ஜீவன்கள் படும்பாடு சொல்ல முடியவில்லையே பிள்ளையாரப்பா!" என்று கதறி அழுதனர் குன்றத்தூர் மக்கள்.

குன்றத்தூர் பேரேரிக் கரையில் அரசமரத்தடியில் பிள்ளையார் சிலையை அவர்கள் அமைத்துப் பயபக்தியுடன் பூஜை செய்து வந்தனர். ஏரி நீர் கொஞ்சம் கொஞ்சமாக வற்றியது. ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வரும் கால்கள் தூர்ந்து போய்விடுமோ என்ற நிலை. ஊற்றைத் தோண்டினாலும் நீர் கிடைக்காத கொடுமை. இரண்டு ஆண்டுகளாக வானம் பொய்த்து விட்டது. எப்படியோ சுற்றுவட்டாரத்தில் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு காலந்தள்ளிய மக்களுக்கு இனி தெய்வம்தான் கதி.

பெண்டு பிள்ளைகள் கையில் குடத்துடன் காத தூரம் அலைந்து திரிந்து தண்ணீர் கொண்டு வரும் காட்சியைக் கண்ட முதியவர்கள், "எங்களுக்கு விவரம் தெரிந்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வரை இப்படி வானம் பொய்த்ததில்லை." என்றனர்.

"வாதாபிப் படையெடுப்புக்குப் பிறகே விளைச்சல் குறைவுதான்" என்றார் பெரியவரொருவர்.

''தோற்றுப் பின் வாங்கி ஓடிய சாளுக்கியப்படைகள் வினைநிலங்களில் புகுந்து செய்தஅட்டகாசம் கொஞ்சமா? அறுவடைக்கு இருந்த கதிர்களை நெருப்பை வைத்துக் கொளுத்திப் பாழ் செய்து விட்டனர். அந்தக் கருங்கரத் தவர்கள் தொட்டதிலிருந்து ஒன்றும் உருப்படவில்லை'' என்றனர் சிலர்.

''ஏரி இப்படிக் காய்ந்து போய், பாளம் பாளமாக வெடித்து இருப்பதை நான் என் வாழ்நாளில் கண்ட தில்லை'' என்றார் ஊர்த் தலைவர்.

''பாதாளத்திற்கு வழி. இங்குத்தான் ஆரம்பம் போலிருக்கிறது'' என்று நகைச்சுவையுடன் பேசினான் இளைஞனொருவன்.

''நம் ஊர் என்ன பாவம் செய்தது?''என்று கேட்டாள் குடத்துடனிருந்த பெண் நல்லாள் ஒருத்தி

''நம் ஊருக்கு மட்டுமா மழை பெய்யவில்லை? தொண்டை மண்டலம் முழுமையும் அப்படித்தான்.எல்லா ஏரிகளும் வற்றிவிட்டன. நமது குன்றத்தூர் ஏரிதான் வற்றாமலிருந்தது. அதுவும் வற்றி விட்டது'' என்றான் பெருந்தேவன்.

அவனுக்குத் தன் ஊரைப் பற்றி உயர்வாகச் சொல்லிக் கொள்வதில் தனிப்பெருமை. ஊரைப்பற்றிச் சொல்லித் தானும் பெரியமனிதனாக வேண்டும் என்ற ஆசை.

தண்ணீர்க் குடத்துடன் கூடியிருந்தவர்கள் திரும்பிப் பார்த்தனர். பெருந்தேவன் மீசையை மெல்ல தடவி விட்டுக் கொண்டு அங்கு வந்து நின்றதும் அனைவரும் மரியாதையுடன் ஒதுங்கி நின்றனர். ஊர்த் தலைவர் மௌனமாக அவனைப் பார்த்தார். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''இன்றைக்குத் தான் ஊரிலிருந்து வந்தாயா?'' என்று கேட்டார்.

காஞ்சிக்கோட்டை முற்றுகை முடிந்து சாளுக்கியர்களை முறியடிக்கப்பட்ட பிறகு இராஜசிம்மன் நகரத்தில் பல சீர்திருத்தங்கள் செய்தார். பல புதிய பண்டக சாலைகளை ஏற்படுத்தினார். பெருந்தேவனுக்கு காஞ்சிக் கோட்டைக்குள் அங்காடி ஒன்று சொந்தமாக இருந்தது. அரிசி, பருப்பு போன்ற முக்கியமான தானியங்களை அவன் விற்பனை செய்து வந்தான். அவனுடைய உறவினர் ஒருவர் வாணிபத்தைப் பார்த்துக் கொண்டார். எப்போதாவது அவன் போய் வருவான். காஞ்சிபுரத்திற்குக் குன்றத்தூரிலிருந்து குறுக்கு வழி ஒன்று உண்டு. நடந்தே போய் வந்து விடுவான். அது பல ஆண்டுகளுக்கு முன்பு. பெருந்தேவன் வசதி மிகுந்த செல்வந்தனாக மாறியவுடன் ஏன் நடக்கிறான். அழகிய ஜோடிக் காளைகள் பூட்டிய வண்டி; ஒரு கூண்டு வண்டி. இரட்டைக் குதிரை பூட்டிய இரதம் ஒன்று வாங்க வேண்டும் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறான்.

பெருந்தேவன் என்றால் குன்றத்தூரில் பெருமதிப்பு மெல்ல மெல்ல வளர்ந்து விட்டது.

மழை பொய்த்து, விளைநிலங்களில் விளைச்சல் காணாது போய் மக்கள் துன்பப்படும் போது பெருந்தேவனை எல்லாரும் சூழ்ந்து கொள்வர். அவன் யோசனை கூறுவான். தன் நெல் களஞ்சியத்திலிருந்து நெல் தருவான், விலைக்குத்தான்.

"காஞ்சிபுரத்தில் எப்படி? வெளியூரிலிருந்து அரிசி வரவு உண்டா?" என்று ஒருவர் பெருந்தேவனைக் கேட்டார்.

கேட்டவனைத் திரும்பிப்பார்த்துவிட்டு, "அரிசியா காஞ்சியில் ஒருமணி அரிசிக்குப் பறக்கிறார்கள். என்ன ஆகுமோ தெரியவில்லை" என்று கவலைப்பட்டுக் கொண்டான்.

தண்ணீர் ஒன்றுக்கு மட்டும் தட்டுப்பாடு என்று நினைத்தவர்கள் சோற்றுக்கும் பஞ்சம் வந்து சேர்ந்து விடுமோ என்று கவலையிலாழ்ந்து கலங்கினர்.

"உம்; வாருங்கள் தண்ணீர் இருக்குமிடம் நாடிச் செல்வோம்" என்று ஒருவர் குரல் கொடுக்கக் குடங்களைச் சுமந்து அங்கிருந்து புறப்பட்டனர்

கூட்டம் கலைந்த பிறகு, குன்றத்தூர் ஊரார் சுந்தர மல்லன், பெருந்தேவனிடம் நெருங்கி, "காஞ்சியில் உணவுக்கு மக்கள் துன்பப்படுகிறார்கள் என்ற செய்தி வருகிறதே உண்மைதானா?" என்று கேட்டார்.

பல்லவர் காலத்தில் நாடு, ஊர் என்று பிரித்திருந்தார்கள். ஊரைவிட நாடு பெரியது. நாட்டைவிட கோட்டம் பெரியது. பல கோட்டங்கள் மண்டலங்களாகத் திகழ்ந்தன. வளநாடு என்றும் சோழர் காலத்தில் அழைக்கப்பட்டன.

ஊரின் நிர்வாகத்தைக் கவனித்து ஆட்சி செலுத்துபவர் ஊரார் எனப்படுவார். கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞர் ஊராராகத் திகழ்வார்.

ஊரைவிடப் பெரியதான நாட்டிற்கு நல்லதொரு சான்றோர் தலைவராயிருந்து ஆட்சிப் பொறுப்பைக் கவனித்துக் கொள்வார். நாட்டார் என்று அவருக்குப் பெயர். ஊராரும், நாட்டாரும் மக்கள் சபையினரை கலந்தாலோசித்தே செயலாற்றுவர். மக்கள் சபையினருக்கு ஆள்வார் என்று பெயர்.

குன்றத்தூர் நாட்டார் சுந்தரமல்லன், வயது முதிர்ந்தவர். அறிஞர். ஆள்வாரிடமும், பொதுமக்களிடமும் நற்பெயரெடுத்தவர். பல்லவ நாட்டின் தலைநகரான காஞ்சிமா நகருக்கு அருகில் இருந்ததால், குன்றத்தூருக்கு எப்போதும் மதிப்பும் சிறப்பும் உண்டு. பெரிய நெல் களஞ்சியம் குன்றத்தூரில் இருந்தது.

நாட்டார் சுந்தரமல்லனுக்கு இணையாக பெருந்தேவன் ஊரில் மதிப்புமிக்கவனாய்த் திகழ்ந்தமையால் சுந்தர மல்லன் அவனைத் தனிப்பட்ட முறையில் யோசனைகள் கேட்பார்.

காஞ்சியைப் பற்றிக் கேட்டவுடன் பெருந்தேவன் ஏதோ சொல்லக் கூடாத இரகசியத்தைக் கூறுபவன் போல் மெல்லிய குரலில், "நாட்டாரே! எனக்கு மிகப் பெரிய கவலையாக இருக்கிறது" என்று முன்னுரையுடன் தொடங்கினான்.

"ஆமாம், ஆமாம் கவலையில்லாமல் இருக்குமா! எனக்கே இரண்டு நாட்களாக உறக்கம் பிடிக்கவில்லை. ராஜசிம்ம சக்ரவர்த்தியின் (*) திருமுகம் வேறு வந்திருக்கிறது" என்றார்.

திருமுகத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று பெருந்தேவன் கேட்பான் என்று சுந்தரமல்லன் எண்ணினார். ஆனால் அதைக் காதில் போட்டுக் கொண்டதாகவே புலப்படுத்தாமல் பெருந்தேவன் "நான் சக்தரவர்த்தியை நேரில் சந்தித்தேன்" என்றான்.

சுந்தரமல்லன் ஆவலுடன், "நரசிம்ம சக்கரவர்த்தியையா? மாமன்னர் எப்படியிருக்கிறார். உடல் நலத்துடனிருக்கிறாரா?" என்று கேட்டார்.

"உம்...உடல் நலம்தான்; ஆனால் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிற வேதனை அவரைப் படுத்தபடுக்கையாக்கி விடுமோ என்று பயமாயிருக்கிறது" என்று ஏதோ தனக்கு மட்டும் தெரிந்த ஒன்றை, மிக இரகசியமாகக் கூறுவது போல பேசினான்.

சுந்தரமல்லன் அவன் அருகே மிக நெருங்கி "பெருந்தேவா, சக்ரவர்த்தி என்ன சொன்னார். உன்னிடம் நெருங்கி மனம் விட்டுப் பேசக் கூடியவராயிற்றே" என்று அவனைப் புகழ்ந்து சில வார்த்தைகள் கூறி அவனிடமிருந்து மற்ற செய்திகளை வரவழைக்க முயன்றார்

(*) திருமுகம் — ஊர்ச்சபையாருக்கும், நாட்டாருக்கும் அமைச்சர் இடும் உத்தரவு.

பெருந்தேவன், தன் மடியிலிருந்து வெற்றிலையை எடுத்து மிகவும் அமைதியாக சுண்ணாம்புத் தடவிப் போட்டுக் கொண்டவாறே "தாத்தா" என்று பேச்சைத் தொடங்கினான்.

அவரை அவன் அப்படித்தான் அழைப்பது வழக்கம். ஆனால் சுந்தரமல்லனோ, தன்னை நாட்டார் என்று அவன் அழைப்பதையே விரும்பினார். அவனிடம் அதை எப்படிச் சொல்வது? அவன் புதிய செல்வந்தன். செல்வாக்கு மிகுந்தவன். காஞ்சி அரண்மனையில் அனைவரிடமும் தொடர்புடையவன்.

வாயில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே, "தாத்தா! ராஜசிம்ம சக்கரவர்த்தியே மிகுந்த கவலையுடன் இருக்கிறார்" என்றான்.

சுந்தரமல்லன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். ஏதோ முக்கிய விஷயம் சொல்ல இப்படிப்பீடிகை போடுகிறான் என்று.

"நகரத்திலே அடுத்த வாரத்திற்கு அரிசி இல்லை. குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கிணறுகள் வற்றிவிட்டன' என்றான். பிறகு, "மஞ்சள் நீரோடை தெரியுமல்லவா?" என்று கேட்டான்.

"ஆகா மாளிகைக்கு நீர் கொண்டு செல்லும் வாய்க்கால் தானே, பாலாற்றிலிருந்து தண்ணீர் அதன் வழியே வருகிறது. பிறகு அந்தப்புரத்து மகளிர் குளிந்த கழிவு நீர் அந்த ஓடையின் மறுபுறமாகச் செல்கிறது" என்றார் நாட்டார். ஆமாம்; அதற்கு என்ன வந்து விட்டது என்று கேட்கத் துடித்தார் சுந்தரமல்லன்.

"அந்த ஓடையே வற்றிவிட்டது என்றால் தண்ணீர்ப் பஞ்சத்தின் கடுமையைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான் பெருந்தேவன், சுந்தரமல்லன் திடுக்கிட்டார்

"பல்லவ சக்கரவர்த்தி கட்டளையிட்டு விட்டார்" என்றார் பெருந்தேன்.

''என்ன?''—பரபரப்புடன் கேட்டார் சுந்தரமல்லன்.

''அந்தப்புரத்து மகளிரை காவிரிக்கரை ஊரான உறையூருக்குப் போகுமாறு கூறிவிட்டார்.''

''உறையூரில் யாரோ சோழ அரசர் ஆளுகிறார்; சிற்றரசர் ஊருக்கா சக்கரவர்த்தி வீட்டுப் பெண்டிர் செல்வது?''

''அதனாலென்ன! சோழமன்னன் நமக்கு அடிபணிந்தவர். அன்பானவர். வற்றாத காவிரி அங்கே ஓடுகிறது.''

''அதெப்படி, பாலாற்றில் தண்ணீர் இல்லையென்றால் காவிரியில் ஏது தண்ணீர்?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது பாட்டா! அந்தப்புரத்துப் பெண்டிர் புறப்பட்டுப் போகிறார்கள். அரச குடும்பத்திற்கே இந்தக் கதி என்றால் சாதாரண மக்களின் கதி என்னவோ?'' பெருந்தேவன் கூறி நிறுத்தினான்.

சுந்தரமல்லன் மவுனமாக இருந்தார். ஏதோ பெரிய ஆபத்து நேரிடுகிறது என்று அவர் உணர்ந்தார் காஞ்சி நகரைவிட்டு மக்கள் வெளியேறி விடுவார்கள். என்ன செய்வது? பிழைப்பதற்கும் அரை வயிறு உண்பதற்கும் நகரத்தில் ஏது வழி?

அவரது மௌனத்தை பெருந்தேவனின் மற்றொரு சொல் கலைத்ததுடன் திடுக்கிடவும் வைத்தது.

''சக்கரவர்த்தி திருமுகம் அனுப்ப உத்தரவிட்டு விட்டார். பஞ்சவாரியத்தைக் கூட்டலாமென்று அதில் கூறி இருக்கிறார். ஏரிகளைச் செப்பனிடவும்...'' என்று அவன் கூறி முடிப்பதற்குள், சுந்தரமல்லனுக்குக் கோபம் பொங்கியது.

''பெருந்தேவா, திருமுகத்தை நீயே கொண்டு வந்து விட்டாயா? கொண்டு வந்திருந்தால் இப்படிக் கொடுத்து விடேன். நான் படித்துக் கொள்கிறேன்'' என்றார்.

பெருந்தேவன் மெல்ல நகைத்தான். ''திருமுகத்தை என்னிடம் கொடுப்பார்களா? *உள்படு கருமத்தலைவரிடமிருந்து தெரிந்து கொண்டேன்'' என்றான்.

வர இருக்கும் பயங்கர நிகழ்ச்சிகளைவிட பெருந்தேவன் பெற்றுள்ள செல்வாக்குத்தான் சுந்தரமல்லனின் உள்ளத்தில் பெரிதாக வடிவெடுத்தது.

''என்ன பாட்டா, அப்படியே மௌனமாகி விட்டாய்?'' என்று பெருந்தேவன் வாய் உமிழ்நீரைத் துப்பி விட்டுக் கேட்டான்.

மாலைக்கதிரவன் மெல்ல இறங்கிக்கொண்டிருந்தான். கூடுகளையடையும் பறவைகளின் கோலாகலத்தைக் காணோம். குதூகலத்துடன் கழுத்து மணி ஒலிக்கவீட்டை நோக்கி ஓடிவரும் கன்று காலிகளைக் காணோம்.

''ஒன்றுமில்லை...'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார் சுந்தரமல்லன்.

''பஞ்சவாரியத்தைக் கூட்ட வேண்டியிருக்கும்.'' என்றான் பெருந்தேவன்.

சுந்தரமல்லன் திடுக்கிட்டார். பஞ்சவாரியத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சென்ற ஆண்டு சிறு சச்சரவினால் பஞ்சவாரியத் தேர்தல் தடைப் பட்டு விட்டது.

காற்று வீசியது; அது மேகங்களைக் கொண்டு வரவில்லை. வெப்பத்தின் பிரதிபலிப்பு இன்னும் தீரவில்லை.

---

* உள்படு கருமத்தலைவர் என்பவர் இக்கால அந்தரங்க உதவியாளர் பதவிக்கு ஒப்பானவர் Private Secretaries.

தொலைவில் எங்கோ ஓர் பசு 'அம்மா' என்று தீனக் குரலில் கத்தியது.

'பாவம் பசுக்கள்' என்றார் சுந்தரமல்லன்; அவர் சிந்தனை வேறு எங்கோ இருந்தது.

''பசுக்கள் மட்டுமா—பரிதாபத்திற்குரியவை. அதோ பாருங்கள்'' என்று பெருந்தேவன் சுட்டிக் காட்டினான்.

ஏரிக்கரையின் தென்பகுதியிலிருந்து மக்கள் கூட்டங் கூட்டமாக வருவது தெரிந்தது. அவர்கள் தங்கள் முதுகில் முடிந்த அளவு தங்கள் உடைமைகளைச் சுமந்து வந்தனர். சிறு குழந்தைகளைத் தோளிலே தூக்கி வந்தார்கள். அவர்கள் எல்லாம் நகரத்திலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

பல்லவமன்னன் ராஜசிம்மன், ஒவ்வொரு கோட்டத்துச் சிற்றூர்களிலும், கிராமங்களிலும் பஞ்சவாரியக் குழுக்களை அமைத்தார். பஞ்ச காலத்தில் பயன்படச் சேமித்து வைத்திருக்கும் களஞ்சியங்களை தக்க முறையில் பயன்படுதத உத்தரவிட்டார்.

ஏரிகளைச் செப்பனிட்டு, ஏரிக் கரைகளை உயர்த்தி, புதிய குளங்களையும், தடாகங்களையும் வெட்டி, மக்களுக்கு வேலை கொடுத்து வறுமைப் பிணியை ஓரளவாவது போக்கத் திட்டமிட்டார்.

அந்தத் திட்டத்தைத் தலையேந்தி ஒவ்வொரு ஊர் பஞ்சாயத்துச் சபையினரும் கூடி, என்னென்ன செய்வதென்று ஆலோசித்தனர். வாரியப் பெருமக்களைத் தேர்ந்தெடுக்க முயன்றனர்.

குன்றத்துப் பெருமக்கள் தங்கள் ஊரிலும் பல்லவ மன்னரின் கட்டளையை நிறைவேற்ற ஏரிவாரியத்தாரைத் தேர்ந்தெடுக்கக் கூடியிருந்தனர்.

கோடையின் கொடும் வெப்பக்காற்று சற்றுத்தணிந்து மாலைப் பொழுதில் ஊர்க் கோடியிலுள்ள அரசமரத்து மேடையில் ஊர்ப் பெருந்தனக்காரர்கள் அமர்ந்திருக்க, கீழே வாக்குரிமைப் பெற்ற ஊர் மக்கள் கூடியிருந்தனர். மேடையின் நடுவே அழகிய குடம் வைக்கப்பட்டிருந்தது. ஏரிவாரியப் பெருமக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட விரும்பு பவர்களின் பெயர்களை நறுக்கோலைகளில் ஒருவர் எழுதிக் கொண்டிருந்தார்.

''என்ன, தொடங்கலாமா?'' என்று கேட்டார் ஆளுங் கணத்தார்.

''ஆகா; ஆரம்பிக்கலாம். அந்த ஓலைகளையெல்லாம் குடத்தில் போடு'' என்றார் பெருந்தேவர், கம்பீரமான தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு.

பட்டுத் தலைப்பாகையும், காதிலே தங்கக் குண்டல மும் அணிந்து தன்னை எல்லாரும் மதிக்க வேண்டும் எனும் கர்வத்துடன் ஒருமுறை மற்றவர்களைத் திரும்பிப் பார்த்தார். அவரும் ஏரிவாரியப் பெருமக்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட விரும்புபவர்; வேட் பாளர்! அவர் பெயரும் நறுக்கோலையில் இருந்தது. செல் வத்தோடு செல்வாக்கும் சேர வேண்டும் என்ற ஆசை இப்போது வந்துவிட்டது.

குடத்தைக் குலுக்கினார் ஆளுங்கணத்தார். இப்போது அக்குடத்திலிருந்து ஓலையொன்றைச் சிறுவன் ஒருவன் எடுக்க வேண்டும். திருவுளம் யாரை ஒப்புக் கொள்கிறதோ அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார்.

குடத்திலிருந்த ஓலையை எடுக்க அங்கே ஒரே ஒரு பாலகனே இருந்தான். பால்வடியும் முகம், துருதுரு வென்ற கண்கள், தெய்வமே குழந்தை வடிவில் வந்து விட்டதோ என்று எண்ணும்படியான தோற்றம்.

''குழந்தை, வா...வா... இந்தக் குடத்திலிருந்து ஒரே ஒரு ஓலைத் துணுக்கை மட்டும் எடுக்க வேண்டும். ஒரே ஒரு ஓலை...'' என்று ஆளுங்கணத்தார் அழைத்தார். அந்தப் பாலகன் குறுநடை நடந்து வந்தான். அச்சமும், நாணமும், வியப்பும் இயற்கையாகவே நிறைந்த அந்தப் பிஞ்சு அங்கே கூடியிருந்த கூட்டத்தைக் கண்டதும் தயங்கியது. மெல்ல, மெல்ல நடந்து வந்து குடமிருக்கும் மேடையை அடைந்தது. குடத்துள் கையை விட்டு ஓலையொன்றை எடுக்க வேண்டிய சமயம்—

''யார் இந்தப் பையன்?'' என்று கர்ஜித்தான் பெருந்தேவன். எல்லோருமே திடுக்கிட்டனர். அந்தச் சிறுவனும் நடுங்கிவிட்டான். ஒருவரும் பேசவில்லை.

ஆளுங்கணத்தார் கேட்டார்: 'எதற்குக் கேட்கிறீர்கள்?''

''ஆமாம்; ஆமாம், எதற்குக் கேட்கிறீர்கள்?'' என்று இப்போது மற்றவர்களும் முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

பெருந்தேவன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு ''எதற்குக் கேட்கிறேனா? ஊர் பேர் தெரியாதவர்களின் குழந்தை ஏரி வாரியத்தைத் தேர்ந்தெருக்க வேண்டுமா?'' என்று உறுதியான குரலில் கேட்டார்.

ஊர் பேர் தெரியாதவர்கள்குழந்தை குட வோலையை எடுக்கக் கூடாது என்று விதி கிடையாது. என்றாலும் அதைக் கேட்கும் துணிவு அங்கு ஒருவருக்கும் இல்லை. அப்படி யாராவது கேட்டுவிட்டால், மறுநாள் நெல்லுக்கு அவரிடம் தான் போய் நிற்க வேண்டும்.

வாயை மூடிக் கொண்டு அனைவரும் இருப்பதைக் கண்ட பெருந்தேவன், ''ஊரிலே குழந்தைகளே இல்லாது போய் விட்டார்களா! இந்தக் குழந்தை யாருடைய

குழந்தை?'' என்று மறுபடியும் அழுத்தந் திருத்தமாகக் கேட்டார். அமைதியைக் கலைத்துக் கொண்டு மெல்லிய குரல் எழுந்தது. எங்கும் ஒரு வித இனிய மணம் வளையல் குலுங்கும் ஓசை.

''ஏன், என்னுடைய மகன்தான் அவன். யாருடைய குழந்தையாயிருந்தால் என்ன? திருவுளச் சீட்டை எடுக்க வேண்டும். அவ்வளவுதான்!'' என்றாள். அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

பூமா நின்று கொண்டிருந்தாள், மெல்லிய புன்னகை தவழ. ''பூமா, பூமா'' என்று அங்கிருந்தவர்கள் வாய் விட்டே உச்சரித்தனர்.

பூமா, குன்றத்தூருக்கு வந்தடைந்தபோது அந்த ஊர்ப் பெரியவர் ஒருவர் அவளுக்கு ஆதரவளித்தார். அவர் இப்போது உயிருடன் இல்லை. அவளுடைய சோகக் கதையை அவர் கேட்டறிந்தார். கணவன் இறந்தவுடன் தானும் உயிர் துறந்து விடலே முதலில் அவள் எண்ணி னாள். ஆனால் பச்சிளம் பாலகனை அனாதையாக விட்டுச் சாக அவள் விரும்பவில்லை. என்றாவது கூனன் வருவான் அவனிடம் குழந்தையை ஒபபடைத்து விட்டு உலகைவிட்டுச் சென்று விடலாம் என்று முடிவு செய் தாள். இளமை, அழகு இவற்றுடன் தனிமையாக வாழ அவளுக்குத் துணிவு இல்லை. ஆனால் பெரியவர் அவளுக்கு ஆறுதல் கூறினார். அவளுடைய குரலினிமையைக் கண்டு குன்றத்தூர் இறைவன் கோயிலில் பண்பாடி, பரதமும் ஆடி வாழ்வைக் கழிக்குமாறு கூறினார்.

அவளுடைய இனிய பாடலும், பண்பும் அந்தக் கிராமத்து மக்களைக் கவர்ந்தன. மிக்க மரியாதையுடன் அவளை அனைவரும் நடத்தலானார்கள். அவளுக் கென்று தனிவீடு கொடுத்தார்கள். மூதாட்டி ஒருத்தி துணைக்கு இருக்கச் சம்மதித்தாள்.

பெருந்தேவனுக்கு அவளைப் பார்த்தவுடனேயே காம உணர்ச்சி முளைவிட ஆரம்பித்தது. அதை வெளியே

புலப்படுத்தவும் முடியவில்லை. புலப்படுத்தாது இருக்கவும் முடியவில்லை. ஒவ்வொரு நாளும், பூமா சந்தியா வேளையில் இறைவனைத் துதித்துப் பாடும் போது கோயிலுக்கு வரத் தவறமாட்டான். அவள் குரல் இனிமையைப் பாராட்டுவான்.

பூமாவும், அவனுக்கு நன்றி தெரிவித்து, இரண்டு வார்த்தை நின்று பேசி, புன்னகை சிந்தி விடைபெற்றுச் செல்வாள்.

பெருந்தேவன் தவறாக எண்ணி விட்டான். பூமாவுக்கு தன்மீது அன்பு ஏற்பட்டு விட்டது என்ற முடிவுக்கு வந்தான். துணிந்து ஒருநாள் ஊரடங்கிய வேளையில், பூமாவின் வீட்டிற்குச் சென்று மெல்லக் கதவைத் தட்டினான். இரவில் பூமாவுக்குத் துணையாக இருக்கும் மூதாட்டி கதவைத் திறந்தாள். அவளுக்குக் கண் பார்வை சரிவரத் தெரியவில்லை. "யாரது இந்த நேரத்தில் கதவைத் தட்டுவது?" என்று கேட்டாள்.

பெருந்தேவன் என்ன வென்று சொல்வான்? தொண்டையைக் கனைத்துக் கொண்டான். மீண்டும், "யாரது?" என்று மூதாட்டி குரல் கொடுத்தாள். அவள் குரலில் சற்றுக் கடுமை தென்படவே, அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் செவிகளில் விழுந்துவிடப் போகிறதே யென்று மெல்லிய குரலில், "நான் நான்" என்று கூறினான். அரைத் தூக்கத்திலிருந்த பூமாவின் காதில் விழுந்து விட்டது. ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு பூமா வாயிற் கதவுக்கருகில் வந்து, "வாருங்கள்... வாருங்கள்..." என்று புன்சிரிப்புடன் வரவேற்றாள்.

பூமா வரவேற்பதைக் கண்ட மூதாட்டி பேசாமல் படுக்கச் சென்று விட்டாள். மறுகணம் அவள் அயர்ந்து உறங்குவது தெரிந்தது.

பெருந்தேவன்மீது, பூமாவுக்கு மதிப்பிருந்தது. அந்த நேரத்தில் அவரை எப்படிவரவேற்பது என்பதுஅவருக்குப்

புரியவில்லை. ஆனால் பெருந்தேவன் பழக்கப்பட்டவன் போல் நடுக் கூடத்திற்குச் சென்று விட்டார்.

பூமாவும் பின் தொடர்ந்து சென்று, ''உட்காரச் சொல்லக் கூட எனக்குத் தெரியவில்லை. பொறுத்தருளுங்கள்'' என்றாள்.

''ஆகா, அதனாலென்ன, இது என் வீடுபோல். நீயும் இப்படி உட்காரலாம் பூமா'' என்றார். குரலில் நடுக்கமிருந்தது. அசட்டுச் சிரிப்புடன் பேசினார். வார்த்தை தடுமாறியது.

பூமாவுக்குப் புரிந்துவிட்டது. என்றாலும் புரிந்து கொண்டவள்போல் புலப்படுத்திக் கொள்ளாமல், ''இந்த வேளையில் தங்களை உபசரிக்கக் கூட எனக்குத் தோன்றவில்லையே!''

பெருந்தேவன் சிரித்தவாறு மெல்ல அவ்ளை நெருங்கினான். பூமா, ஒருகணங்கூடத் தாமதிக்காமல், தூங்கிக் கொண்டிருந்த தனது மகனை எழுப்பித் தோளிலே சாய்த்துக் கொண்டு வந்தாள்.

பாதித் தூக்கத்தில் எழுந்த சிறுவன் சிணுங்கினான்.

''என்னடா கண்ணா! பால் குடிக்காமல் தூங்கி விட்டாயே!'' என்று கூறி அவனைத் தன் அருகே உட்கார வைத்துக் கொண்டாள். இரவு தான் பால் குடித்துவிட்டதாக அந்தப் பாலகனுக்கு நினைவு தூக்கத்தைக்கலைத்துக் கொண்டு தாயையும், பெருந்தேவனையும் மாறிமாறிப் பார்த்தான்.

பெருந்தேவனுக்கு அதிர்ச்சியேஏற்பட்டது. பூமாவுக்கு ஐந்து வயதுப் பாலகன் இருப்பது இதற்கு முன்பு அவனுக்குத் தெரியாது.

''அம்மா, இவர் யாரம்மா?'' என்று பாலகன் கேட்டான்.

''குழந்தாய் குமரா! இவர் இந்த ஊருக்குப் பெரியவர். இவர் பெயர்...'' என்றுபூமா சொல்ல வாயெடுப்பதற்குள் பெருந்தேவன் எழுந்து, ''வேண்டாம் வேண்டாம், பூமா, என் பெயரைச் சொல்ல வேண்டாம். இந்த வேளையில் நான் இங்கு வந்தது ஊருக்கெல்லாம் தெரிந்துவிட்டால்.'' என்று அவன் கூறும்போது நா குழறியது.

''இவன் யாரிடமும் சொல்ல மாட்டான்'' என்றாள் பூமா.

''வேண்டாம், வேண்டாம் பூமா. நான் இந்த ஊரில் மதிப்பும் மரியாதையும் மிகுந்தவன். நான் ஏதோ நினைத்துக் கொண்டு வந்தேன். ஒரு குழந்தைக்குத் தாயானவளா நீ... உன்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை...பூமா...யாரிடமும் சொல்லாதே...'' நான் இங்கு வந்ததை யாரிடமும் சொல்லாதே'' என்று கூறி பரபரபுடன் அங்கிருந்து புறப்பட்டான் பெருந்தேவன்.

''பெரிய ஆபத்திலிருந்து பிழைத்தோம்; குமரா, நீ தான் காப்பாற்றினாய்''என்று கூறி அவனை அணைத்துக் கொண்டாள் பூமா.

இன்று குடவோலையை எடுக்க அந்தக் குழந்தைக் குமரன் வந்தவுடன் பெருந்தேவனுக்கு எரிச்சலும் ஆத்திரமும் வராமல் என்ன செய்யும்? தன் இச்சையை அறிந்து அதை நிறைவேற்றாமல் அன்று ஏமாற்றத்துடன் அனுப்பிய பூமாவை இன்று பலர் முன்பு அவமானப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் பெருந்தேவனுக்கு ஏற்பட்டது.

''அதுசரி அம்மா! குழந்தை உன்னுடையதுதான். இல்லையென்று யார் சொன்னது? குழந்தையின் தந்தை யார்?நாங்கள் பெயரைக் குறித்துக் கொள்ளவேண்டாமா?

இன்னாருடைய மகன் எடுத்துக் கொடுத்த திருவுளச் சீட்டு என்று பதிவு செய்ய வேண்டாமா? குழந்தையின் தந்தை பெயரைச் சொல்லு'' என்று ஆளுங்கணத்தார் கேட்டார்.

பூமா திடுக்கிட்டாள்.குழந்தையின் தந்தை...குமரனின் தந்தை—குமரன் தந்தையின் பெயர் அவள் உண்மையைச் சொன்னால் சாளுக்கிய நாட்டினள் என்று பெருந்தேவன் கூறிவிடலாம். சாளுக்கிய நாட்டிலே பிறந்து, சாளுக்கிய நாட்டவனை மணந்து புத்த காலத்தில் சாளுக்கியர் படைகளுடன் வந்தவள் என்று கூறினால் இங்குள்ளவர்கள் சீற்ற மடையலாம்...

பூமா தன்னைப்பற்றிக் கூற விரும்பவில்லை.

''வாடா, குமரா போவோம்...'' என்று குழந்தை குமரனை அணைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

குமரன் போய்விட்டால் அன்றைய கூட்டம் என்ன ஆவது? ஏரிவாரியத்தார் தேர்வு நடைபெற்று உடனே வேலையைத் தொடங்க வேண்டுமே. பெருந்தனக்காரர் குறுக்கிட்டார்; ''ஆமாம்...குடஓலை யாரைக் கொண்டு எடுப்பது...'' என்று கூவினார்.

''ஏன் இந்தப் பயலேஎடுக்கட்டும்.ஆனால் அப்பாவின் பெயரை மட்டும் சொல்லி விடட்டும்'' என்று மீண்டும் பெருந்தேவன் கேலி நிறைந்த குரலில் கூறினான். ஒருவர்க் கொருவர் கூட்டத்தில் பேசிக் கொள்வதால் 'குசு குசு' வென்ற பேச்சொலி, சிலர் பெருந்தேவனை ஆதரித்தனர். சிலர் பூமாவிடம் அநுதாபப் பட்டனர்.

''நேரமாகவில்லையா?'' என்று பெருந்தேவனே இப் போது கூவினான். பூமா தவித்தாள். அப்போது யாரோ தொப்பென்று குதிக்கும் ஒலி கேட்டது. உட்கார்ந்திருப்ப வர்களை விலக்கிக்கொண்டு ஓர் உருவம் வந்து கொண் டிருந்தது. கூன் விழுந்த தோற்றம். ஆழ்ந்த கண்கள்.

கருத்த முகம். தடித்த உதடு. வைரம் பாய்ந்த கரங்கள், புழுதி படிந்த ஆடை.

'ஹெ ஹெ' என்று அவன் கனைத்தது அங்குள்ளவர் களிடம் பயத்தை ஊட்டியது.

'கோலூர் கூனன், கோலூர் கூனன்' என எல்லார் உதடுகளும் முணுமுணுத்தன. அவனைப் பார்ப்பது கூட அருவருப்பு என்று சிலர் முகத்தைத்திருப்பிக்கொண்டனர். சிலருக்கு உடல் நடுக்கம்தான். கூனன் உட்கார்ந்திருப்பவர் களை விலக்கிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான்.

"ஹெஹெ" என்று எல்லாரையும் பார்த்துச் சிரித் தான். அந்தச் சிரிப்பிலும் ஓர் அழகு இருந்தது. மற்றவர் களுக்கு அந்த அழகே பயத்தை அளித்தது.

அவன் குமரனை நெருங்கிப் பார்த்தான் குமரன் சற்று சும்மாயிருந்துவிட்டு பிறகு அவனிடம் ஓடிவந்து அணைத் துக் கொண்டான். பூமாவுக்கு ஒன்றுமே புரியவிலலை.

"நான்தான், இவனுடைய தந்தை. உம்குடத்திலிருந்து ஓலையை எடுக்கச் சொல்லுங்கள்..." என்று கீச்சுக் குரலில் கூறினான். அக் குரல் ஒலி எல்லார் உடலிலும் மயிர்க் கூச்செழ வைத்தது. பெருந்தேவன் வாயடைத்து நின்றான். ஏதோ நடந்தது நடந்து விட்டதுபோல் எல்லாரும் திக் பிரமை பிடித்தவர்போல் நின்றனர்.

கோலூர் கூனனை அனைவருக்கும் தெரியும். குன்றத் தூரில் பஞ்ச வாரியம் ஏற்பட்டது. பஞ்சவாரியத்திற்குப் பெருந்தேவன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தான் தேர்ந் தெடுக்கப்பட்டதுகூட அவருக்குக் களிப்பை அளிக்க வில்லை. பூமாவை அவமானப்படுத்துவதினின்று அந்தக் கொடுங்கூனன் தடுத்து விட்டானே! பெருந்தேவனுக்கு மனதே சரியில்லை ஏரியைப் பழுது பார்க்கும் வேலை அன்றே தொடங்கப்பட வேண்டும். அதற்குத் திட்டமிடக்

கூட அவர் முயலவில்லை. பூமாவை எப்படி அவமானப் படுத்துவது. அந்தக் கூனனை எப்படி ஒழிப்பது என்ப திலேயே சிந்தனையை ஓட்டினான்!

வாரியக் கூட்டத்தில் வீட்டுக்கு ஒரு ஆள் ஏரியைப் பழுது பார்க்கஅனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது. பெருந்தேவன் துள்ளி எழுந்தார். வீட்டுக்கு ஒரு ஆள்! சரி யான வழி. பூமாவின் வீட்டிலிருந்து யார் வேலை செய்ய வருவார்கள். பூமாவையே மண் சுமக்க வைப்போம். ஆஹா! அவள் தலையிலே சும்மாடு கட்டிச் சுமந்து இரு கரங்களையும் தூக்கி மண் கூடையைச் சுமந்து நடக்கும் அழகு காணக் குளிர்ச்சியாக இருக்கும். அவள் தட்டுத்தடு மாறி நடக்கும் அழகைப் பருகி இன்பமடையலாம். அவள் வேதனைப் படுவதைக் கண்டு களிப்படையலாம்.

19

''யாரம்மா, வீட்டிலே நாளைக் காலையிலே ஏரிக் கரைக்கு வந்துடுங்க. வீட்டுக்கு ஒரு ஆள், யார் வர்ரீங்க'' என்று பெருந்தேன் ஆள் பூமாவின் வீட்டெதிரே நின்று கூவினான். பெருந்தேவனும் அவன் கையாட்களும் மறைந்து நின்றனர்.

பூமா வெளியே வந்தாள். ''இந்த வீட்டிலிருந்து வேலை செய்ய என்னைத் தவிர வேறு யாருமில்லையே...'' என்று மெல்லிய குரலில் கூறினாள்.

பண்பறியா அந்த வேலையாள் சொன்னான்; ''நீயே வா... யாராயிருந்தா எங்களுக்கென்ன—கூன் குருடு, செவிடு முடம், கிழம் கட்டை எல்லாம் தங்கள் தங்கள் கடமையைச் செய்ய வரும்போது நீ மட்டும் என்ன?'' என்று ஏகவசனத்தில் பேசினான்.

பூமா திடுக்கிட்டாள். பெருந்தேவன் மறைந்திருப்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது.

"காலையில் பூஜை வேளையில் கோயிலுக்குச் செல்ல வேண்டும்... உங்கள் ஐயாவுக்குத் தெரியும்... நீங்கள் போய்ச் சொல்லுங்கள் .." என்று அமைதியாகக் கூறினாள்.

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நீ வா; இல்லாவிடில் யாரையாவது அனுப்பு..." வேலைக்காரன் தரம் குறைந்தது.

"இதோ இந்தப் பச்சைக் குழந்தையைத்தான் அனுப்ப வேண்டும்..." என்றாள் பூமா.

'குழந்தையையா? இதன் அப்பா இருக்கிறாரே அவரை அனுப்பு' வேலைக்காரன் கண் சிமிட்டினான்!

பூமா உதட்டை மெல்லக் கடித்துக் கொண்டாள். "ஆமாம்...இந்தப் பையனின் அப்பா இருக்கிறாரே 'அதை' அனுப்பு...அதான் அந்தக் கூனன்...!" என்று கூறி விட்டுச் சிரித்தான் வேலைக்காரன். அப்போது வீதியில் கூடியிருந்தவர்களும் நகைத்தனர்.

"கூனன்...கூனன்... கோவூர் கூனன்" என்ற ஓசை எங்கும் கேலியாக எழுந்தது.

'டப்' என்ற ஓசை கேட்டது. உண்மையாகவே அங்கே கூனன் தோன்றினான். அவனை யாரும் அநதப் போதில் எதிர்பார்க்கவில்லை.

"ஆமாம்; நான் வருகிறேன். வேலையிடுங்கள்; பூமாவின் பங்குக்கு என்ன வேலை செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வருகிறேன். இங்கே கூட்டம் கூடிக் குழப்பம் செய்ய வேண்டாம்..." என்று சற்று அழுத்தத் துடனேயே கூறினான் கூனன்.

பெருந்தேவன் பெரிதாய்ச் சிரித்தான். அங்கு இருந்தவர்களைப் பார்தது, 'உன் கூன் முதுகைப் போட்டுக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்... உம்... என்ன பண்ணுவது இந்த வீட்டிலிருந்து நீதானே வந்தாக வேணும்..'' என்றான்.

கூனன் உறுமினான். கூட்டம் கலைந்தது. கூனன் மட்டும் பூமா வீட்டருகே தயங்கித் தயங்கி நின்றான்.

ஏரிக்கரையில் வேலை வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தது. கரைகளைப் பலப்படுத்த மண் வெட்டிக் கொண்டிருந்தனர் சிலர். சிலர் மண்ணைக் கொட்டிக் கொண்டிருந்தனர்.

கூனனைக் காணவில்லை பெருந்தேவன் ஒருமுறை ஏரிக்கரைக்கு வந்தார். கூனன் இருக்கிறானா என அவர் கண்கள் நாலுபுறமும் பார்த்தன. கூனனைக் காண வில்லை. அன்று மாலை இருள் மெல்லக் கவிந்து கொண்டிருந்த வேளையில் பெருந்தேவன் மீண்டும் கூட்டமாக பூமாவின் வீட்டுக்குச் சென்றார். அப்போது தைரியமாகவே அவர் பூமாவின் வீட்டுப் படிகளிலேறி, ''எங்கே உன் பங்குக்கு வேலைசெய்ய ஆள்.. உனக்குத் தாலி கட்டிய அந்த அழகு மன்மதர் எங்கே?'' என்று சத்தம் போட்டார்.

பூமா வெளியே வந்தாள். அழுது அழுது அவள் முகம் வீங்கியிருந்தது. கூனன் வீட்டிற்குள்தான் இருந்தான். குமரனைக் கிழவி கோயிலுக்கு அழைத்துச் சென்றிருந்தாள் கூனனும் பூமாவும் பேசினர், பேசினர், அப்படிப் பேசிக் கொண்டிருந்தனர். நாள் முழுமையும்- கூனன் பேச்சிலே எதையோ கண்டுவிட்ட வெற்றிப் பெருமிதம் இருந்தது. பூமாவோ அவன் சொல்லும் ஒவ்வொரு சொல்லுக்கும் விம்மினாள். அவள் முகத்தில் கண்ணீர் அருவி பிறந்தது; ஓடியது.

பெருந்தேவன் குரல் கேட்டவுடன் கூனன் வெளியே வர எழுந்தான் பூமா அவனைத் தடுத்து தானேசென்றாள்.

பெருந்தேவனின் பேச்சு பூமாவின் ஆத்திரத்தைக் கிண்டி விட்டது.

''சற்றுமரியாதையாகப்பேசுவீர்களென்று எதிர்பார்க்கலாமா!'' பூமாவின் குரலில் மரியாதையும் அதேபோல் அதட்டலும் பளிச்சிட்டன.

பெருந்தேவன் குரலில் பரிகாசம் சூழ, ''ஆகா மரியாதைதானே! வேண்டுமளவுக்கு. குன்றத்தூர் நாட்டு இசை அரசி பூமாதேவி அவர்களே, தங்கள் பங்குக்கு வேலை செய்ய தங்கள் கணவர் அழகரசர் ஏன் வரவில்லை...?'' என்று கேட்டான்.

''அதைக் கேட்கத் தங்களுக்கு அதிகாரமில்லை...''

''எனக்கு அதிகாரமிருக்கிறது. நான் ஏரி வாரியத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன்...உன் திருக்குமாரன் தான் என்னைத் தேர்ந்தெடுத்தான். மறந்து விட்டாயா?''

''அந்தத் தேர்தல் செல்லாது...''

''ஏன்?''

''தந்தை யார் என்றுதெரியாதசிறுவன் குடத்தினின்று ஓலையை எடுத்தான்...''

''தானே தந்தை என்றானே கூனன்...''

''நான் சொல்லவில்லையே. கூனன் குமாரனின் தந்தையுமல்லன்.''

''அப்பொழுது, அவன் உன் கணவனுமில்லையா?''

''ஒரு முறை கூறிவிட்டால் மரியாதையாகப் போக வேண்டிய தாங்கள், பெண் எதிரே தகாதவற்றைப் பேச வெட்கமில்லையா?'' பூமா சீறினாள். பெருந்தேவன் வெகுண்டார்.

மறுநாள் கூனன் வீதியிலே போனபோது எல்லாரும் அவனை ஏசினர். சொன்ன சொல்லை நிறைவேற்றாதவன்

என்றனர். ஆனால் பெருந்தேவனுக்கு மட்டும்கூனனுக்கும் பூமாவுக்கும் உள்ள தொடர்பு புரியாததாக இருந்தது. தன் பங்குப் பணியை நிறைவேற்றாததற்காக மக்கள் பூமாவின் காதில் விழும்படி ஏசினர்.

வழக்கமாக வேலை கொடுப்பவர்கூட கூனனுக்கு வேலை கொடுக்கவில்லை. பெருந்தேவனின் செல்வாக்கு அவ்வளவு தூரம் வேலை செய்தது. கூனன் பட்டினி. பூமாவைத் தேடி அந்தத் தெருவுக்கும் வரக்கூடாது என்றும் கட்டுப்பாடுடன் கூறி விட்டனர். ஊரே உறங்கிய பிறகு கூனன் இருக்குமிடம் தேடி பூமா உணவைக் காண்டு கொடுத்து வருவாள். இதையறிந்த ஊரார் கூனன் தங்கியிருந்த குடிசையினின்று அவனை விரட்டி விட்டனர். கூனன் ஏரிக்கரைக் கருவேலமர நிழலில் போய்த் தங்கினான். பகல் வேளைகளில் அவன் மீது சிறுவர்கள் கற்களை வீசி எறிந்தனர். ஊருக்கு உபயோகமில்லா கூனனைப் பஞ்ச காலத்தில் விரட்டி விடுவது தான் சரியென்றும் ஊரார் பேசிக் கொண்டனர்.

கதிரவன் தன் கொடுமையை அப்படியே நிறை வேற்றிக் கொண்டிருக்கவில்லை. வானம் அப்படியே நீல நிறமாக இருக்கவில்லை. காற்றின் சுறுசுறுப்பு அதிக மாகியது. காற்று எங்கெங்கோ அலைந்தது. முதலில் வெண் பஞ்சு மேகங்களை கூட்டி வந்தது. பிறகு கருமுகில் களைச் சுமந்து வந்தது. வானத்திலே கருமுகில்கள் மிதந்து செல்லத் தொடங்கின. எங்கும் ஒரே ஆரவாரம். வானமே பிளக்கும்படியாக மக்கள் ஆரவாரம் செய்தனர்.

கருமேகங்கள் அடர்ந்தன. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி விரைந்தன. ஒன்றோடொன்று மோதின. அவை கரங்கொட்டி நகைத்தன. கரங்கொட்டியது இடியாகிறது. நகைத்தது மின்னலாகிறது.

மழையைக் கண்டு பல ஆண்டுகளைத் துயரத்துடன் கழித்த தொண்டை மண்டலவாசிகள் ஆனந்தத்துடன் வர வேற்றனர். குன்றத்தூர் வாசிகள்ல மடங்கு மகிழ்ந்

தனர். அவர்கள் ஏரியைச் செப்பனிட்டு வைத்திருந்தனர். மழை பெய்தால், ஏரி நிறையும். ஏரி நிறைந்தால் பிறகு துன்பம் இல்லை.

''பார்த்தீர்களா என் திறமையை, நான் ஏரியைச் சரி செய்ததால்தானே இப்பொழுது மழை பெய்தால் நீர் நிறைய வழி ஏற்பட்டது'' என்று பெருந்தேவன் மார்பு தட்டிக் கொண்டார்.

மழை ஊசி போல் விழுந்தது. கயிறு போல்விழுந்தது. கொடி போல் இறங்கியது.பிறகு துதிக்கை போல் கொட்டியது. வானம் பொத்துக் கொண்டதோ என்று ஐயுறுமாறு மழை பெய்தது. ஊழிக்கால முடிவோ என்று அஞ்சவும் நேர்ந்தது. கூனனுக்குத் தங்க இடமில்லை. மழையில் நனைந்து குளிர் நடுக்கியது, காய்ச்சலும் வந்து விட்டது. பூமா அவனைத் தன் வீட்டிற்கே துணிந்து அழைத்து வந்துவிட்டாள்.

கூனன் தெருவில் நுழைம்போது பெருந்தேவனின் ஆட்கள் தடுத்து விட்டனர், பூமா கண்ணீர் விட்டாள். கூனன் அஞ்சவில்லை.

''கிராமத்துக்குக் கடமையைச் செய்ய விரும்பாதவனுக்குக் கிராமத்தில் ஏன் அடைக்கலம்?'' என்று மக்கள் கூவினர்.

''அவரை ஒன்றும் சொல்லாதீர்கள். அவரை அன்று வேலைச் செய்ய செல்லாமல் தடுத்தது நான் தான்'' பூமா கெஞ்சினாள்.

''ஓகோ, உன் புருஷனைத் தடுத்து விட்டாயா?''-- கேலிச் சிரிப்பு எங்கும்.

''ஐயோ...... அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். அவர் என் புருஷன் இல்லை என் தாயின் சொந்தத தம்பி. எனக்கு மாமா முறை. கொடுஞ்சொல் சொன்னால் சொன்னவர் தலையில் இடிவிழும்...''—பூமா கூவினாள்

இடி இடித்தது.

கூனன் மழையில் நனைந்து சென்று கொண்டிருந்தான். பூமா கண்ணீர் விட்டாள்.

மழை விடாது பெய்தது. ஏரி நிறைந்து விட்டது. ஏரி நிறைய வேண்டும் என்று ஆவலுடனிருந்த மக்கள் ஏரி உடைந்து விடக் கூடாதே என்று அஞ்சினர். கரையைப் பலப்படுத்த நூற்றுக் கணக்கானவர் முன் வந்தனர். கூனன் பாழ்மண்டபத்தில் கடுங் காயச்சலுடன் கிடந்தான்.

''இந்தக் கூனனைப் போட்டுப் பள்ளத்தை மூடினால் ஏரி பலப்படும்'' என்றான் ஒருவன்.

''பூமா அழுவாளே!''

''அழமாட்டாள்...ஏன் அழுகிறாள்...?''

''அவள் புருஷனில்லையா?''

''புருஷனில்லையாமேடா.''

இப்படியாக வம்புப் பேச்சுடன் ஏரிக்கரையில் பலமற்ற பகுதியினைப் பலப்படுத்தும் வேலை நடந்தது.

அன்று நிலைமை மோசமாகியது. ஏரி எந்தச் சமயமும் உடைந்து விடலாம். உடைந்தால் ஊரே பாழ்! பெருந்தேவனால் ஒன்றுமே யோசனை செய்யமுடியவில்லை. கையில் தீவட்டியுடன் மதகுகளைத் திறந்துவிட ஏராளமான பேர்களுடன் சென்றார். மதகு திறந்தால் அருகிலுள்ள பாழ் மண்டபம் கூனனுடன் சர்வநாசம் என்று யாரோ கூறியது காதில் வீழ்ந்தது.

''போகட்டுமே! ஊர் பிழைக்க உதவாக் கரைகள் ஒழியட்டுமே''' என்றார் பெருந்தேவன்.

மதகு திறக்கப்பட்டது. ஏரி நீர் குபு குபுவென பாய்ந்தது. ஊருக்கு ஆபத்துக் குறைந்தது என்ற நிம்மதியுடன் திரும்பினர் பெருந்தேவன் குழுக்கள். நடுநிசியைத் தாண்டியிருக்கும் 'ஹா' என்ற பேரொலி. நடுநிசி அமைதியைக் குலைத்துக் கொண்டு அனைவருடைய செவிகளிலும் வீழ்ந்தது எல்லாரும் தீவட்டியுடன் ஓடினர். ஏரியின்

வேறொரு கரை உடைந்து கொண்டிருந்தது, மின்னல் ஒளியில் சிறுபிளவு தெரிந்தது. ஏரிக்கரையை அணுக முடியாமல் எங்கும் வெள்ளக்காடு.

''ஆபத்து ஆபத்து'' என்று கூவிக் கொண்டு கிராமத்திற்குள் எல்லோரும் ஓடி வநதனர். குழந்தை, கிழவர், பெண்டிர், பசு என்று எல்லாருமாக மேடான இடமான கோயிலை நோக்கி விரைந்தனர், பூமா குழந்தைக் குமரனுடன் வீட்டிற்குள்ளேயே இருந்தாள், ''என்ன துணிவு அவளுக்கு'' என்று ஊரார் பேசிக்கொண்டனர்,

பொழுது விடிந்தது, மழை நின்றுவிட்டது. பொற்கதிர்கள் ஏரி நீரில் பாய்ந்து எங்கும் தனிவிதச் சோபையை அளித்தன. பயந்தணிந்து மக்கள் வெளியே தலைகாட்டினர். கிராமம் நீரில் மூழ்கவில்லை, எல்லாருக்கும் வியப்பு அதிகமாகியது. ஏரியிலே ஏற்பட்ட பிளவை யார் அடைத்தனர்.

கிராமமே திரண்டு ஏரிக்கரை மீது சென்றது.

ஏரியின் உடைப்பு ஏற்பட்ட இடத்தை நோக்கி விரைந்தனர். ஏரியிலே ஏற்பட்ட அந்தச் சிறு பிளவு அப்படியே இருந்தது! அங்கே ஏரிநீர் மோதிக்கொண்டு நின்றது அந்தப் பிளவு பெரிதாகாமல் ஒரு தடை. அது என்ன மரக்கட்டையா? பெரும் பாறையா?

கிராமத்திற்கு உதவவில்லை என்று யாரைக் குறை கூறினார்களோ, யாரை வெறுத்தார்களோ யாரைக் கிராமத்திற்குள்ளே வரக்கூடாது என்று தடை செய்தார்களோ, யாரைக் கடுந்நோயிலும் கொடும் மழையிலும் நனையவிட்டார்களோ யாரைக் குரூபி என்று வர்ணித்தார்களோ, அவன் அந்தக் கிராமம் அழியாது அந்த ஏரியில் ஏற்பட்ட பிளவைப் பெரிதுபடுத்தாமல் குறுக்கே தடையாய் வீழ்ந்து உடல் விறைக்க, உயிர் அணு அணுவாகச் சிதையக் கிடந்தான்.

'அதோ கூனன்—கோவூர் கூனன்—'' என்று கூவினர்.

''அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டிருப்பான்''—பெருந்தேவன்.

"சீ, தற்கொலை என்றால் இங்கே விழுவானேன். மதகு வெள்ளத்தில் விழுகிறான். அதோ பார் அவனது இருகைகளும் அழுத்தமாக பாறையைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. கால் பின்னி இருக்கிறது. கூன் முதுகு பெரிய அடைப்பைப்போல் இயற்கையாய் அமைந்து விட்டது" என்று கிராமத்தலைவர் முழங்கினார்.

கூனனை மெல்ல எடுத்துத் தரையில் போட்டார்கள், அவன் உயிர் போய் ஒரு நாழிகையாயிருக்கும். தண்ணீரில் அவன் உடல் ஊதியிருந்தது. பூமா அவனை மடியில் கிடத்தியிருந்தாள். பெருந்தேவன் தலை குனிந்து நின்றான்.

"தன்னை உன் கணவன், அந்தக் குழந்தையின் தந்தை என்று கூறி மானத்தை அன்று காத்தானே" என்றார் ஒரு பெரியவர்.

பூமா நெஞ்சடைக்கக் கூறினாள்; "ஐயோ. அவர் என் அருமைத் தாயின் தம்பி. என் தாய் மாமன். என் தாய்க்கு ஏற்பட்ட பழியைத் துடைக்கப் போரிட்டுச் சிறை சென்று கடைசியில் என்னை இந்த நிலையில் கண்டு பிடித்தார். அவர் வாழ்வு தியாக வாழ்வு..."

"ஆம்? கோலூர் கூனன் நம் எல்லாரையும் காப்பாற்றி ஒப்பற்ற தியாகத்தால் அழியா நினைவை ஏற்படுத்தி விட்டார்" என்று விம்மினார் பெருந்தேவன்.

காஞ்சியினின்று, கூனனின் போர்க்கால சேவையைப் பாராட்டி, அவனை அழைத்து வந்து கௌரவிக்க தக்கவர்களை அனுப்பியிருந்தார் பல்லவ மன்னர் ராஜசிம்மன்.

அந்தத் தூதுவர்கள் வந்து கொண்டிருந்தனர்.

□ □ □

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

கலைமாமணி டாக்டர். **விக்கிரமன்**

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழ் அன்னை பரிசு, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் எம்.சி.ஏ. அறக்கட்டளை பரிசு தமிழ் வளர்ச்சித் துறையினரால் சிறந்த புதினம் என்ற பாராட்டும், பரிசும் பெற்ற கலைமாமணி டாக்டர். விக்கிரமன் 46 ஆண்டுகளாக 'அமுதசுரபி' இலக்கிய இதழ் ஆசிரியர். 50 ஆண்டுகள் பொன்விழாச் 'சிறுகதைக் களஞ்சியம்' சிறுகதைத் தொகுதி அவர் சாதனையின் மகுடம்.



1347